

'தமிழன்' பத்திரிகை வீடுகளுக்கு நேரடியாக விநியோகிக்கப்படும். QR ஐ ஸ்கேன் செய்து தகவல்களை பெற்றுக்கொள்ளுங்கள்.


Follow us:

# தமிழன்

THAMILAN தமிலன்

தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்

மலர் : 04, இதழ்: 08 சோபகிருது வருடம், ஆனி மாதம் 18ஆம் திகதி திங்கட்கிழமை (03.07.2023) ஹிஜ்ரி 1444, துல்ஹஜ் - 14, 0115 886187 - பக்கங்கள் 10

விலை ரூ.50




மன்னார், மருதமடு திருத்தலத்தின் ஆடி மாத திருவிழா திருப்பலி நேற்று ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது.

## கிளிநொச்சியில் ஒரு வாரத்தில் நான்கு சிசுக்கள் மரணம்!

### தாய் ஒருவரின் கருப்பை அகற்றப்பட்டதால் மக்கள் அதிர்ச்சி

மு.தமிழ்ச்செல்வன்

கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலையில் கடந்த ஒரு வாரத்துக்கு நான்கு சிசு மரணங்கள் இடம்பெற்றுள்ளதோடு பிரசவத்தாய் ஒருவரின் கருப்பையும் அகற்றப்பட்டுள்ள சம்பவம் பொது மக்களின் மத்தியிலும் சுகாதார ஊழியர்கள் மத்தியிலும் பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

சம்பவங்கள் தொடர்பில் மேலும் தெரியவருவதாவது;

கிளிநொச்சி மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளிலும் இருந்து பிரசவத்துக்காக கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்குச் சென்ற தாய்மார்களுள் கடந்த வாரம் மாத்திரம் பிறப்பின் போது நான்கு தாய்மார்களின் சிசுக்கள் இறந்துள்ளன. அத்தோடு தாய் ஒருவரின் கருப்பையும் அகற்றப்பட்டுள்ளது.

இது தொடர்பில் பாதிக்கப்பட்ட தரப்பினர் எழுத்து மூலம் மாவட்ட வைத்தியசாலையின் பணிப்பாளருக்கு முறையிட்டுள்ளதோடு , மருத்துவர்களின் அக்கறையின்மை மற்றும் உரிய நேரத்தில் உரிய சிகிச்சைகளை வழங்காதுவிட்டமையே காரணம் என குற்றம் சுமத்தியுள்ளனர். அதாவது மருத்துவக் காரணங்களால் தான் தங்களது குழந்தைகள் இறந்துள்ளதாக பாதிக்கப்பட்ட தரப்பினர் தெரிவித்துள்ளனர்.

02 பக்கம்



கதிர்காமக் கந்தன் ஆலயத்தின் தீமிதிப்பு நிகழ்வு நேற்றுமுன்தினம் இடம்பெற்றது. பக்தர் ஒருவர் வேல் சகிதம் தீமிதிப்பில் ஈடுபடுகிறார். **படப்பிடிப்பு:** கெலும் குணதிலக்க

## நடிப்பதற்கு வாய்ப்பு தருவதாக இளம் பெண்களை ஏமாற்றிய குழு

### தேடி விசாரணை ஆரம்பம்

நடிப்பதற்கு வாய்ப்புத் தருவதாகக் கூறி இளம் பெண்களிடம் பண மோசடியில் ஈடுபட்டுவரும் குழுவைத் தேடி தலங்கம பொலிஸார் விசாரணைகளை ஆரம்பித்துள்ளனர்.

குறித்த மோசடி குழுவினர் 'டிக்டொக்' ஊடாக இளம் பெண்களின் கையடக்க தொலைபேசி இலக்கங்களைப் பெற்று அவர்களுக்கு குறுஞ்செய்திகளை...

02 பக்கம்

# பெரமுனவுக்குள் புதிய அணி!

## அரச ஆதரவு எம்.பிக்கள் கொண்ட புதிய கூட்டணியின் அறிவிப்பு விரைவில்

அரசாங்கத்தில் பதவி வகிக்கும் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் அமைச்சர்கள் குழு புதிய அரசியல் சக்தியொன்றை உருவாக்குவது தொடர்பில் இறுதிக்கட்ட கலந்துரையாடலை ஆரம்பித்துள்ளதாக அரசியல் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதில் பல அமைச்சர்கள், இராஜாங்க அமைச்சர்கள் மற்றும் எம்.பிக்கள் ஈடுபட்டுள்ளதாகவும் தெரியவருகிறது.

இந்த குழு கடந்த சில மாதங்களில் அவ்வப்போது கூடி புதிய வேலைத்திட்டம் குறித்து கலந்துரையாடியது. அந்த பேச்சுகள் நிறைவடைந்து இறுதிக்கட்டத்தை எட்டியுள்ளதால் புதிய அணிக்கு பெயரொன்றை தெரிவு செய்யும் செயற்பாடுகள் தற்போது இடம்பெறுவதாக தெரிகிறது.

புதிய கூட்டணியின் அரசியல் கொள்கை,அதன் வகிபாகங்கள் குறித்து சில தினங்களுக்கு முன்னர் அமைச்சர் ஒருவரின் இல்லத்தில் முக்கிய சந்திப்பொன்றும் நடந்துள்ளது.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுன ஏற்கனவே டலஸ் அணி , விமல் அணி என பிரிந்து சென்றுள்ள நிலையில் எஞ்சியுள்ள இளவயது எம்.பிக்களும் புதிய கூட்டணி தொடர்பில் செயற்பட ஆரம்பித்திருப்பது அக்கட்சியின் உயர்மட்டத் தலைவர்களை அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளதாக அறியமுடிகிறது.

## ஜூனில் 9,916 டெங்கு நோயாளர்கள் அடையாளம்




ஜூன் மாதத்தில் 9,916 டெங்கு நோயாளர்கள் அடையாளம் காணப்பட்டுள்ளதாக தேசிய டெங்கு ஒழிப்புப் பிரிவு தெரிவித்துள்ளது.

அதற்கமைய, இந்த வருடத்தில் மொத்தமாக 49, 326 நோயாளர்கள் பதிவாகியுள்ளதாக தேசிய டெங்கு ஒழிப்பு பிரிவின் பிரதானி இந்திக வீரசிங்க தெரிவித்துள்ளார்.

## எரிவாயு விலை நாளை குறையும்




லிட்ரோ எரிவாயுவின் விலை நாளை செவ்வாய்க்கிழமை முதல் திருத்தப்படவுள்ளது.

கடந்த மாத திருத்தம் போன்று இம்முறையும் எரிவாயுவின் விலை குறையும் என நிறுவனத்தின் பேச்சாளர் ஒருவர் தெரிவித்தார்.

கடந்த மாதம் 4ஆம் திகதி லிட்ரோ நிறுவனம் மேற்கொண்ட விலைத் திருத்தத்தின்படி, 12.5 கிலோ கிராம் லிட்ரோ எரிவாயு சிலிண்டரின் விலை 452 ரூபாவால் குறைக்கப்பட்டது.

அதன்படி தற்போது அதன் விலை 3,186 ரூபாவாக காணப்படுகிறது.

5 கிலோ எரிவாயு சிலிண்டரின் விலை 1,281 ரூபாவாகவும் 2.3 கிலோ எரிவாயு சிலிண்டரின் விலை 598 ரூபாவாகவும் உள்ளது.

## தையிட்டி விகாரைக்கு எதிரான போராட்டம் மீண்டும் ஆரம்பம்!

02பக்கம்

## மயக்க மருந்து நிபுணர்கள் 167 பேர் நாட்டை விட்டு வெளியேறினர்



இலங்கையில் உள்ள மயக்க மருந்து நிபுணர்கள் 167 பேர் நாட்டை விட்டு வெளியேறி இங்கிலாந்தில் பணிபுரியச் சென்றுள்ளதாக சுகாதார அமைச்சின் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, கடந்த வருடம் ஜனவரி மாதம் தொடக்கம் இதுவரை 323 விசேட வைத்தியர்களுள் 160 பேர் வெளிநாடுகளுக்கு பணிபுரியச் சென்றுள்ளதாக சுகாதார அமைச்சின் பணிப்பாளர் (மூன்றாம் நிலை பராமரிப்பு சேவைகள்) டொக்டர் பிரியந்த அத்தபத்து தெரிவித்தார்.

இவர்களுள் சில மருத்துவர்கள் கறுப்புப் பட்டியலில் சேர்க்கப்பட்டுள்ளதாகவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

02 பக்கம்

## பிரபாகரன் உயிருடனா? எனக்குத் தெரியாதே!

### யாழில் மைத்ரி

சாவகச்சேரி நிருபர்



விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் தொடர்பாக வடக்கு மாகாண ஊடகவியலாளர்கள் முன்னாள் ஜனாதிபதி மைத்ரிபாலவிடம் துருவித்துருவி கேள்வி கேட்ட நிலையில், அது தொடர்பாக தனக்கு எதுவும் தெரியாது என பதிலளித்திருந்தார். நேற்று ஞாயிற்றுக்கிழமை யாழ். மாவட்ட ஸ்ரீலங்கா...

02 பக்கம்

## அபகீர்த்தியானவர்கள் ஐ.ஜீ.பி பதவிக்கு நியமிக்கப்படக்கூடாது

### அரசியலமைப்பு பேரவைக்கு பேராயர் ரஞ்சித் கடிதம்



புதிய பொலிஸ் மா அதிபரை நியமிப்பது தொடர்பில் பேராயர் கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை, சபாநாயகர் தலைமையிலான அரசியலமைப்பு பேரவையின் உறுப்பினர்களுக்கு மூன்று பக்க இரகசிய கடிதமொன்றை அனுப்பியுள்ளார்.

இரண்டு சிரேஷ்ட பிரதிப் பொலிஸ் மா அதிபர்களின் பெயர்கள் பொலிஸ் மா அதிபர் பதவிக்கு முன்மொழியப்பட்டால் பரிசீலிக்கப்படக் கூடாது என அவர் அதில் கோரிக்கை விடுத்துள்ளார்.

02 பக்கம்




ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் ஜனாதிபதி வேட்பாளராக முன்னாள் அமைச்சர் பெசில் ராஜபக்ஷவை முன்னிறுத்துமாறு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவின் பெரும்பான்மையான உறுப்பினர்கள் கோரிக்கை விடுத்துள்ளதால் அவர் தனது அமெரிக்கக் குடியுரிமையை விலக்கிக்கொள்ள தற்போது பரிசீலித்து வருகிறாராம்.

இந்த வருடம் பெசில் ராஜபக்ஷ பாராளுமன்றத்துக்கு வந்தால் ஜயந்த கெட்டகொட தனது தேசியப்பட்டியல் எம்.பி ஆசனத்தை வழங்கத் தயாராக இருப்பதாகத் தெரிகிறது.



வரலாற்று சிறப்புமிக்க நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலயத்தின் வருடாந்த பெருவிழாவின் 14ஆவது திருவிழாவாகிய முத்தேர் இரதோற்சவம் நேற்று வெகு சிறப்பாக இடம்பெற்றது. **படப்பிடிப்பு:** யாழ்.நிருபர்

## இலங்கை இந்தியாவுக்கு இடையிலான பயணிகள் கப்பல் சேவையில் தாமதம்



இலங்கைக்கும் இந்தியாவுக்கும் இடையிலான பயணிகள் கப்பல் சேவை மேலும் தாமதமாகும் என இந்திய ஊடகம் ஒன்று தெரிவித்துள்ளது.

முன்னதாக, புதுச்சேரியின் காரைக்கால் மற்றும் யாழ்ப்பாண மாவட்டத்தில் உள்ள காங்கேசன்துறை துறைமுகங்களுக்கு இடையேயான பயணிகள் கப்பல் சேவை ஏப்ரல் மாதம் 29ஆம் திகதி ஆரம்பமாகும் என அறிவிக்கப்பட்டிருந்தது.

எனினும், கப்பல் சேவைக்காக தெரிவு செய்யப்பட்ட துறைமுகம் மாற்றப்பட்டதால், இந்த பயணிகள் கப்பல் சேவை தாமதமாகி வருவதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

02 பக்கம்

### கமெண்ட் கந்தர்...



ஒருகாலத்தில எல்லா கட்சிகளையும் உடைச்சது பொதுஜன பெரமுன என்னங்கோ..

# பொருளாதார ரீதியாக பாதிக்கப்பட்ட அனைத்து மக்களுக்கும் 'அஸ்வெசும' நிவாரண கொடுப்பனவு

## ஐக்கிய தேசியக் கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்தன எம்.பி.

பெல்மதுளை நிருபர்

''நாட்டில் பொருளாதார ரீதியாக பாதிக்கப்பட்டுள்ள அனைத்து ஏழை எளிய மக்களுக்கும் 'அஸ்வெசும' நிவாரண கொடுப்பனவு வழங்கப்படும்'' என்று பாராளுமன்ற உறுப்பினரும் ஐக்கிய தேசிய கட்சியின் தவிசாளருமான வஜிர அபேவர்தன கூறினார்.

இரத்தினபுரி தேர்தல் தொகுதியின் ஐ.தே.கட்சி அமைப்பாளர் குழு கூட்டம் இரத்தினபுரி மாநகரசபை மண்டபத்தில் நேற்று ஞாயிற்றுக் கிழமை நடைபெற்றது. அதில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே இதனை தெரிவித்தார்.

இரத்தினபுரி தேர்தல் தொகுதியின் ஐ.தே.கட்சி அமைப்பாளர் லக்ஸ்மன் முனசிங்க தலைமையில் நடைபெற்ற அக்கூட்டத்தில் ஐ.தே.கட்சியின் இரத்தினபுரி மாவட்ட தலைவர் ஹசித்த முஹாந்திரம் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர்களான தேவப்பெரும, சமன் இரத்னப்பிரிய, இரத்தினபுரி மாவட்ட அமைப்பாளர் சுப்பையா ஆனந்தகுமார் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

அங்கு தொடர்ந்து உரையாற்றிய பாராளுமன்ற உறுப்பினர் வஜிர அபேவர்தன கூறியதாவது,

'அஸ்வெசும' நிவாரண கொடுப்பனவுக்கு கூடுதல் நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. அண்மைய கணக்கெடுப்பின்படி, 28 இலட்சம் பேர் அஸ்வெசும நிவாரணத்திட்டத்தில் உள்வாங்கப்படவுள்ளனர். இதனை நாம் 40 இலட்சம் வரை அதிகரிக்க முடியும். அதற்கான நிதி ஒதுக்கப்பட்டுள்ளது. ஆனால் பெறப்படும் அல்லது பொதுமக்கள் வழங்கும் தகவல்கள் உண்மையாக இருக்க வேண்டும். உண்மைத் தகவல்களை வழங்காமல் அரசியல் ரீதியாகவும் பல்வேறு வகையிலும் கடந்த காலங்களில் சனசவிய, மற்றும் சமுர்த்தி நிவாரணங்கள் வழங்கப்பட்டுள்ளன. இதனை மறுசீரமைப்பு செய்து உண்மையாக கிடைக்க வேண்டிய ஏழை எளிய மக்களுக்கு நிவாரணம் வழங்கப்பட வேண்டுமென்பதே அரசாங்கத்தினதும் ஜனாதிபதியினதும் நோக்கமாகும். ஏழைத்தன்மையை தொடர்ந்து வைத்திருந்து அதன்மூலம் அரசியல் செய்ய நாம் விரும்பவில்லை.

அஸ்வெசும நிவாரணத்திட்டத்தில் உள்வாங்கப்படாதவர்கள் அவர்களின் கோரிக்கைளை நிகழ்நிலையிலும் அல்லது பிரதேச செயலகத்தில் அல்லது ஜனாதிபதி காரியாலயத்திலும் சமர்ப்பிக்க முடியும். அதனை விடுத்து கூக்குரலிட்டு பயனில்லை. எவ்வளவு காலத்துக்கு எம்மால் கூக்குரலிட முடியும்.

பாராளுமன்றத்தில் எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினர்கள் இன்றைய காலத்திலும் சண்டையிட்டு கொள்கின்றனர். சண்டையிடுவதன் நோக்கம் அவர்கள் அரசாங்கத்துக்கு சரியான யோசனைகளை முன்வைக்க முன்வருவதில்லை.

அவர்களிடம் முன்வைப்பதற்கான சரியான திட்டம் எதுவுமில்லை.

ஊடகவியலாளர்கள், தற்போது ஊடகத்துறைக்கு அரசாங்கம் விலங்கு போடுவதாக கூறுகின்றனர். ஊடகத்துறையை மறுசீரமைப்பு செய்து அதனை அபிவிருத்தி செய்வதே எமது பிரதான நோக்கம். சிங்கப்பூர் நாட்டிலுள்ள சட்டத்தைப்போன்ற ஊடக சட்டத்தையே எமது நாட்டிலும் அறிமுகப் படுத்தினால் பெரும்பாலான ஊடகவியலாளர்கள் நன்மையடைவார்கள்.

பொருளாதார நெருக்கடியில் சிக்கியுள்ள மக்கள் வீதியிலிறங்கி போராடுவார்கள். அதன் பின்னர் அது அரசியல் போராட்டமாக மாறும். இவ்வாறான சூழ்நிலையில் நாம் வழங்கப்பட்ட நிவாரணத்தை இல்லாதொழிப்போமா?

ஒரு பாராளுமன்ற உறுப்பினர் பதவிமட்டுமே எமக்கு கிடைத்தது. அதன்மூலம் இன்று நாட்டின் பிரதமர் மற்றும் ஜனாதிபதி பதவி வரை வந்துள்ளோம். கடந்த ஜனாதிபதி தேர்தலில் கோட்டாபய ராஜபக்ஷ ஜனாதிபதியாக பதவியேற்றபோது தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவே அப்போது பிரதமராக இருந்தார். கோட்டாபய பதவியேற்ற நிகழ்வில் நான் உள்நாட்டலுவல்கள் அமைச்சர் என்ற ரீதியில் கலந்து கொண்டேன். இதன்போது பலர் என்னை வசைப்பாடினர். ஒருவர் பின் ஒருவராக எமது கட்சி அமைச்சர்கள் பதவி விலகினர். அவர்கள் அன்று பதவி விலகாமல் கட்டுப்பாட்டுடன் இருந்திருந்தால் அதன் பின்னர் நடைபெற்ற பொதுத் தேர்தலில் எமது கட்சி வெற்றிப்பெற்றிருக்கும். ஆனால் எம்மை விட்டுப்பிரிந்தது மட்டுமல்லாமல் எம்மை ஏளனப்படுத்தினர்.

அன்று ஏளனப்படுத்தியவர்கள் இன்று எம்மை எதிர்க்கின்றனர். இதுதான் இன்றைய அரசியல். ஆனால் நாம் இன்றைய சூழ்நிலையில் எம்மிடையே அரசியல் பேதம் கிடையாது. நாம் இலங்கையர் என்ற கொள்கையுடனேயே செயற்பட்டு, வெளிநாட்டு உள்நாட்டு சக்திகளுக்கு அடிபணியாது தொடர்ந்து நாட்டை முன்னேற்ற ஒத்துழைப்போம்.



# அரசாங்கத்தின் மற்றுமொரு மோசடிக்கு சபை அங்கீகாரம்

## உதய கம்மன்பில எம்.பி.

அரசாங்கத்தின் பிறிதொரு மோசடிக்கு பாராளுமன்றம் அனுமதி வழங்கியுள்ளது. தேசிய கடன் மறுசீரமைப்பு செயற்றிட்டம் தொடர்பில் சட்டமா அதிபர் திறைசேரிக்கு முன்வைத்த பரிந்துரைகள் புறக்கணிக்கப்பட்டுள்ளன. கடன் மறுசீரமைப்பு தொடர்பான சகல அதிகாரங்களும் நிதி அமைச்சருக்கு வழங்கப்பட்டுள்ளன என பிவிதுரு ஹெல உருமய கட்சியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான உதய கம்மன்பில தெரிவித்தார்.

பிவிதுரு ஹெல உறுமய கட்சி காரியாலயத்தில் நேற்று ஞாயிற்றுக்கிழமை (02) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது,

தேசிய கடன் மறுசீரமைப்பு தீர்மானத்துக்கு தாம் ஏன் வாக்களித்தோம் என்பதை பொதுஜன பெரமுனவின் பெரும்பாலான உறுப்பினர்கள் அறியாமல் உள்ளார்கள். பாராளுமன்ற பதவியை தக்கவைத்துக்கொள்வதற்காக ஜனாதிபதியின் கட்டளைகளுக்கு அமைய செயற்படுகிறார்கள்.

தேசிய கடன் மறுசீரமைப்புக்கான தீர்மானங்கள் எடுக்கும் சகல அதிகாரங்களும் ஜனாதிபதிக்கு பாராளுமன்றத்தின் ஊடாக வழங்கப்பட்டுள்ளது. தேசிய கடன் எந்த வகையில் மறுசீரமைக்கப்படும் என்பது தொடர்பான திட்டம் அமைச்சரவை கொள்கை பத்திரத்தில் தெளிவாக உள்ளடக்கப்பட வேண்டும் என சட்டமா அதிபர் கடந்த மாதம் 27ஆம் திகதி திறைசேரியின் செயலாளரிடம் உத்தியோகபூர்வமாக வலியுறுத்தியுள்ளார்.

கடன் மறுசீரமைப்பு தொடர்பில் சட்டமா அதிபர் வழங்கிய ஆலோசனைகள் புறக்கணிக்கப் பட்டுள்ளன. ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியத்தின் பாதுகாப்பு தொடர்பில் எவ்வித சட்ட உத்தரவாதமும் வழங்கப்படவில்லை. எதிர்வரும் காலங்களில் ஆட்சிக்கு வரும் அரசாங்கம் இந்த பிரச்சினைக்கு முகங்கொடுக்க நேரிடும் என்றார்.

அரசாங்கத்தின் பிறிதொரு மோசடிக்கு அமைச்சரவை ஊடாக அனுமதி வழங்கப்பட்டுள்ளது. தேசிய வளங்களை பாதுகாக்கும் பொதுஜன பெரமுனவின் கொள்கையை ஜனாதிபதி இல்லாதொழிக்கிறார். நாட்டு மக்களின் கடும் எதிர்ப்பு எதிர்வரும் காலங்களில் பாரிய மாற்றத்தை ஏற்படுத்தும் என்றார்.

# தாயகம் திரும்பியது முத்துராஜா யானை

முத்துராஜா யானையை ஏற்றிய ரஷ்ய விசேட சரக்கு விமானம் நேற்று (02) காலை தாய்லாந்து நோக்கி புறப்பட்டுச் சென்றது.


கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்திலிருந்தே விமானம் தாய்லாந்து நோக்கிப் புறப்பட்டது.

முத்துராஜா யானை 2001 ஆம் ஆண்டு தாய்லாந்து அரசாங்கத்தினால் இலங்கைக்கு அன்பளிப்பாக வழங்கப்பட்டது.

அதற்கிணங்க, சுமார் 22 வருடங்களாக முத்துராஜா யானை அளுத்கம கந்தே விஹாரையின் பொறுப்பிலிருந்தது.

அழகிய தந்தங்களைக் கொண்ட முத்துராஜா யானையின் உடல்நிலை மோசமடைந்து வருவதால் அதனை மீளவும் தமது நாட்டுக்கு அழைத்துச் செல்வதாக தாய்லாந்து அரசு அறிவித்திருந்தது.

இந்த கோரிக்கைக்கு அமைய, தெஹிவளை மிருகக்காட்சிச் சாலைக்கு அழைத்துச் செல்லப்பட்ட முத்துராஜா யானையின் உடல்நிலையை பரிசோதனை செய்வதற்காக தாய்லாந்து கால்நடை மருத்துவ குழுவொன்று நாட்டுக்கு வருகை தந்திருந்தது.



### கிளிநொச்சியில்...

மேலும் நான்கு குழந்தைகள் இறந்த தருணங்களிலும் பிரசவத்தாயாரது கருப்பை அகற்றப்பட்ட சந்தர்ப்பத்திலும் ஒரு குறித்த பயிற்சி மகப்பேற்றியல் வைத்திய நிபுணரே சம்பந்தப்பட்டிருப்பதாக அவர்கள் சுட்டிக்காட்டுகின்றனர்.

எனவே, இது தொடர்பில் மாவட்ட வைத்தியசாலை பணிப்பாளருடன் தொடர்பு கொண்டு வினவியபோது குறித்த முறைப்பாடுகள் தனக்கு கிடைத்துள்ளதாகவும் எனவே தாம் இது குறித்த ஆரம்ப புலன் விசாரணைகளை மேற்கொள்ள உத்தரவிட்டுள்ளதாகவும் தெரிவித்தார்.

### நடிப்பதற்கு வாய்ப்பு...

அனுப்பியுள்ளதாக முதற்கட்ட விசாரணைகளில் தெரியவந்துள்ளது.

இது தொடர்பில் பொலிஸாருக்குக் கிடைத்துள்ள வங்கிக் கணக்கு இலக்கங்கள் மற்றும் கையடக்கத் தொலைபேசி இலக்கங்கள் ஊடாக நீதிமன்றத்துக்கு அறிக்கை சமர்ப்பித்து மேலதிக விசாரணைகளை முன்னெடுக்கவும் தலங்கம பொலிஸார் நடவடிக்கை எடுத்துள்ளனர்.

### அபகீர்த்தியானவர்கள்...

இந்த இரண்டு அதிகாரிகளும் ஈஸ்டர் தினம் உட்பட பல விடயங்களில் தமது பொறுப்புகளை புறக்கணித்துள்ளனர். எனவே, தமது தொழில் கௌரவத்தையும் பொலிஸாரின் நற்பெயரையும் காக்க முடியாத இவர்களின் பெயர்களை பரிசீலிக்க வேண்டாம் என இந்நாட்டு ஒட்டுமொத்த கத்தோலிக்க மக்களின் பெயரால் கேட்டுக்கொள்கின்றேன் என பேராயர் ரஞ்சித் குறிப்பிட்டுள்ளார்.

சபாநாயகர் தலைமையிலான அரசியலமைப்பு சபையின் 09 உறுப்பினர்களுக்கும் அவரது கடிதம் அனுப்பப்பட்டுள்ளது.

### இலங்கை இந்தியாவுக்கு...

பயணிகள் கப்பல் சேவைக்காக, தற்போது தெரிவுசெய்யப்பட்டுள்ள தமிழ்நாட்டின் நாகப்பட்டினம் துறைமுகத்தில் வசதிகளை அதிகரிக்க இந்தியா மேலும் கால அவகாசத்தை கோரியுள்ளதாக அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வாவை மேற்கோள்காட்டி இந்திய ஊடகம் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

### மயக்க மருந்து நிபுணர்கள்...

வைத்தியர்கள் வெளிநாடு செல்வதை தடுக்கும் முறையான சட்ட அமைப்பு இந்த நாட்டில் இல்லாதது பாரிய பிரச்சினை என சுட்டிக்காட்டியுள்ள சுகாதார திணைக்கள அதிகாரிகள், அவ்வாறான சட்ட முறைமை விரைவில் தயாரிக்கப்பட வேண்டுமென அரசாங்கத்துக்கு ஆலோசனை வழங்குகின்றனர்.

வைத்தியர்கள் வெளிநாடு செல்வதை தடுக்க விசா இரத்து போன்ற நடவடிக்கைகள் எடுக்கப்படலாம் என்றும் நெறிமுறைகளை மீறியதாக கூறி மருத்துவ கவுன்சில் பதிவுகளை கூட இரத்து செய்யலாம் என்றும் கூறப்படுகிறது. ஆனால் தற்போது வரை அப்படி ஒரு திட்டம் சரியாக செயல்படவில்லை என்று தெரிய வந்துள்ளது.

### பிரபாகரன் உயிருடனா?...

சுதந்திரக் கட்சி அலுவலகத்தில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே ஊடகவியலாளர்கள் பிரபாகரன் தொடர்பாக மைத்ரிபால சிறிசேனவை நோக்கி தொடர்ச்சியான கேள்விக் கணைகளை தொடுத்திருந்தனர்.

இதன்போது, யுத்த இறுதிக் காலகட்டத்தின் போது நீங்கள் பாதுகாப்பு அமைச்சராக கடமையாற்றி இருந்தீர்கள். எனவே பிரபாகரன் உள்ளாரா, இல்லையா என்பது தொடர்பாக உங்களுக்கு தெரிந்திருக்கும். அது தொடர்பாக உங்கள் கருத்து என்னவென கேள்வி எழுப்பியபோதே மைத்ரிபால சிறிசேன அது தொடர்பாக தனக்கு எதுவும் தெரியாது எனப் பதிலளித்திருந்தார்.

இது தொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

அப்போது நான் பிரதிப் பாதுகாப்பு அமைச்சராகவே இருந்தேன். அதுவும் இரண்டு வாரங்கள் மாத்திரமே பிரதி பாதுகாப்பு அமைச்சராக இருந்தேன். பிரபாகரனுக்கு என்ன நடந்தது என்பது நிலைமைகளை கையாண்ட தலைமைகளுக்கு மாத்திரமே தெரியும். அவை தொடர்பாக என்னுடன் அவர்கள் ஆலோசிக்கவில்லை என மேலும் அவர் தெரிவித்திருந்தார்.

# மராட்டிய அரசியலில் திடீர் திருப்பம்: துணை முதல்வராக அஜித் பவார் பதவியேற்பு



மகாராஷ்டிரா மாநிலத்தின் துணை முதல்வராக அஜித் பவார் பதவியேற்றுக் கொண்டார். அவருடன் தேசியவாத காங்கிரஸ் கட்சியின் அதிருப்தி எம்.எல்.ஏக்கள் பலரும் ஆளும் சிவசேனா (ஷிண்டே பிரிவு) - பா.ஜ.க. கூட்டணியில் இணைந்தனர். தேசியவாத காங்கிரஸ் கட்சியின் 53 எம்.எல்.ஏக்களில் 40க்கும் மேற்பட்டோர் அஜித் பவார் ஆதரவாளர்கள் என்று கூறப்படுகிறது. இந்நிலையில் ஞாயிற்றுக்கிழமை அஜித் பவார் மற்றும் 08 தேசியவாத காங்கிரஸ் எம்.எல்.ஏக்கள் அமைச்சர்களாகப் பதவியேற்றுக் கொண்டனர். இதன்மூலம் தேசியவாத காங்கிரஸ் கட்சியின் மிகப்பெரிய பிளவு ஏற்பட்டுள்ளது.

கடந்த சில நாட்களுக்கு முன்னர் அஜித் பவார் வெளிப்படையாகவே மகாராஷ்டிரா எதிர்க்கட்சித் தலைவர் பதவியை இராஜினாமா செய்ய விரும்புவதாகக் கூறினார்.

இதுதொடர்பாக அவர் அளித்தப் பேட்டியில், 'மகாராஷ்ட்ரா சட்டப்பேரவையின் எதிர்க்கட்சித் தலைவர் பதவியில் இருந்து என்னை விடுவிக்க வேண்டும். மாறாக, கட்சியில் ஏதாவது பொறுப்பில் என்னை நியமிக்க வேண்டுகிறேன். எதிர்க்கட்சித் தலைவராக நான் சரியாக செயல்படவில்லை என்று சொல்லப்படுகிறது. சொல்லப்போனால் இந்த எதிர்க்கட்சித் தலைவர் பதவியில் எனக்கு ஆர்வம் இல்லை.

எனினும், கட்சி எம்.எல்.ஏக்களின் வற்புறுத்தலால் அந்தப் பதவியை ஏற்றுக்கொண்டேன். எனவே, அதிலிருந்து என்னை விடுவிக்க வேண்டும். மாறாக, கட்சியில் எனக்கு பொறுப்பு வேண்டும். கட்சி அமைப்பில் எனக்கு எந்தப் பதவி ஒதுக்கப்பட்டாலும் சரி, அதற்கு நியாயம் சேர்ப்பேன். இந்த கோரிக்கை குறித்து என்.சி.பி. தலைமைதான் முடிவு செய்ய வேண்டும்'' என்று கூறியிருந்தார்.

இந்நிலையில் மகாராஷ்டிரா அரசியலில் இந்தப் பெரிய மாற்றம் நிகழ்ந்துள்ளது. இனி அஜித் பவார், தேவேந்திர பட்நவிஸ் என மகாராஷ்டிராவுக்கு இரண்டு துணை முதல்வர்கள் இருப்பார்கள். அஜித் பவார் மகாராஷ்டிராவின் 8ஆவது துணை முதல்வர் என்பது குறிப்பிடத்தக்கது.

ஏற்கனவே தேவேந்திர பட்னாவிஸ் துணை முதல்வராக உள்ள நிலையில் அஜித் பவாரும் துணை முதல்வராக பதவியேற்றுக்கொண்டார். எதிர்க்கட்சி தலைவர் பதவியை இராஜினாமா செய்து விட்டு பதவி ஏற்றுக்கொண்டார்.

மராட்டிய மாநிலத்தில் 8ஆவது துணை முதல்வராக அஜித் பவார் பதவியேற்றுக்கொண்டார். 2019இல் பா.ஜ.கவுடன் இணைந்து மராட்டிய துணை முதல்வராக பதவியேற்று பின்னர் விலகினார். பதவியேற்ற 80 மணிநேரத்தில் துணை முதல்வராக பதவியில் இருந்து விலகி தேசியவாத காங்கிரஸில் மீண்டும் இணைந்தார். பின்னர் காங்கிரஸ் உள்ளிட்ட மகா விலாஸ் அகாதி கூட்டணியில் மீண்டும் துணை முதல்வராக ஆனார் அஜித் பவார்.

மராட்டியத்தில் 2010-2014ஆம் ஆண்டுகளில் காங்கிரஸ் கூட்டணி அரசில் இருமுறை துணை முதல்வராக இருந்துள்ளார். 2019ஆம் ஆண்டில் திடீரென அதிகாலை பா.ஜ.கவுடன் கூட்டணி அமைத்து முதல்வர் ஆனார். ஆனால் பெரும்பான்மை இல்லாததால் 3 நாட்கள் மட்டுமே பதவியில் இருந்தார். 2019-2022 வரை சிவசேனா, காங்கிரஸ், தேசியவாத காங்கிரஸ் உள்ளிட்ட கூட்டணி ஆட்சியில் உத்தவ் தாக்கரே அரசில் துணை முதல்வராக இருந்தார். தற்போது மீண்டும் தேசியவாத காங்கிரஸ் கட்சியை உடைத்து பா.ஜ.க. கூட்டணியில் இணைந்து துணை முதல்வராக ஆகியுள்ளார் அஜித் பவார்.

### தையிட்டி விகாரைக்கு...

சட்டவிரோதமாக அமைக்கப்பட்டுள்ள காங்கேசன்துறை - திஸ்ஸ விகாரைக்கு எதிரான தொடர் போராட்டம் மீண்டும் நேற்று ஆரம்பமாகியுள்ளது.

இன்று பௌர்ணமி தினம் என்பதால் குறித்த விகாரையில் வழிபாடுகள் இடம்பெறவுள்ள நிலையில் குறித்த போராட்டம் நேற்று ஆரம்பமாகியுள்ளது. இந்த போராட்டமானது இன்றும் தொடரவுள்ளது.

இந்த போராட்டத்தில் தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் பொதுச் செயலாளரும் பாராளுமன்ற உறுப்பினருமான செல்வராஜா கஜேந்திரன், தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் ஊடகப் பேச்சாளர் சிரேஷ்ட சட்டத்தரணியுமான கனகரத்தினம் சுகாஸ், கட்சியின் ஆதரவாளர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்துகொண்டு தமது எதிர்ப்பை வெளிப்படுத்தி வருகின்றனர்.

அந்தவகையில் இந்த போராட்டத்துக்கு வலுச் சேர்ப்பதற்கு சமூக அக்கறையுள்ள அனைவரையும் அழைத்துள்ளனர் ஏற்பாட்டாளர்கள்.





இலங்கைக்கான சிரிய அரபுக் குடியரசின் தூதுவராக கலாநிதி பஸ்ஸாம் அல்-காதிப் நியமிக்கப்பட்டுள்ளார். அவர் தனது தகுதிச் சான்றுகளை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கண்டியில் அமைந்துள்ள ஜனாதிபதி மாளிகையில் வைத்து ஜூன் 30ஆம் திகதி காலை கையளித்தார்.



இலங்கைக்கான பெல்ஜியம் இராச்சியத்தின் தூதுவராக டிடியர் வண்டர்ஹசெல்ட் நியமிக்கப் பட்டுள்ளார். அவர் தனது தகுதிச் சான்றுகளை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கண்டியில் அமைந்துள்ள ஜனாதிபதி மாளிகையில் வைத்து ஜூன் 30ஆம் திகதி காலை கையளித்தார்.

# கிளிநொச்சியில் பொதுச் சுகாதார பரிசோதகர்கள் திடீர் சோதனை

## பாவனைக்குதவாத இறைச்சி, உணவுப்பொருட்கள் அழிப்பு





மு.தமிழ்ச்செல்வன்

கிளிநொச்சியில் நேற்று பொதுச் சுகாதார பரிசோதகர்கள் மேற்கொண்ட திடீர்சோதனை நடவடிக்கையின் போது பாவனைக்குதவாத இறைச்சி மற்றும் உணவுப்பொருட்கள் கண்டுபிடிக்கப்பட்டு அவை அழிக்கப்பட்டன.

கிளிநொச்சி பொதுச் சந்தை மற்றும் நகரில் அமைந்துள்ள உணவகங்கள் என்பனவே சோதனைக்குட்படுத்தப்பட்டன. இதன் போது கிளிநொச்சி பொதுச்சந்தையின் மாட்டிறைச்சிக் கடையில் அனுமதியின்றி வெட்டப்பட்டு விற்பனைக்காக வைக்கப்பட்டிருந்த சுமார் 50 கிலோ மாட்டிறைச்சி கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டதோடு வியாபாரிகளுக்கு எச்சரிக்கையும் விடுக்கப்பட்டது.

இதேவேளை நகரில் ஏ9 பிரதான வீதி, கனகபுரம் வீதியில் அமைந்துள்ள பல உணவகங்களும் சோதனைக்குட்படுத்தப்பட்டன. இதன்போது சமைத்த உணவுகளுடன் சமைக்காத இறைச்சி உள்ளிட்ட உணவுப்பொருட்கள் ஒரே குளிர்சாதனப் பெட்டிக்குள் வைக்கப்பட்டிருந்தமை கண்டறியப் பட்டு குறித்த உணவுப் பொருட்களும் அழிக்கப்பட்டன. அத்தோடு பயன்பாட்டுக்கு உதவாத உணவுப் பொருட்களும் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டதோடு, உரிமையாளர்களுக்கு எச்சரிக்கையும் விடுக்கப்பட்டது.

மேலும் சந்தைக்குள் பழக்கடைகள் சோதனைக்குட்படுத்தப்பட்டு அங்கிருந்த பழங்களை பழுக்க வைப்பதற்கான இரசாயன திரவியங்களும் கைப்பற்றப்பட்டு அழிக்கப்பட்டன.

இச்சோதனை நடவடிக்கைகள் இனிவரும் காலங்களில் தொடர்ச்சியாக இடம்பெறும் எனவும் சட்டத்திட்டங்களுக்கு மாறாக வியாபார நடவடிக்கைகளில் ஈடுபடுகின்றவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலய வருடாந்த இரதோற்சவம்







நயினாதீவு நாகபூசணி அம்மன் ஆலயத்தின் வருடாந்த இரதோற்சவம் நேற்று இடம்பெற்றது.

ஆலய உற்சவம் கடந்த 19ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி பூசைகள் இடம்பெற்று வருகின்றன. இந்நிலையிலேயே நேற்று இரதோற்சவம் இடம்பெற்றது.

இதேவேளை இன்று (03) தீர்த்தோற்சவமும் நாளை 04ஆம் திகதியன்று தெப்போற்சவமும் இடம்பெற்று அன்று மாலை கொடியிறக்கத்துடன் மகோற்சவம் நிறைவடையும்.

இதில் நயினாதீவு நாகபூசணி அம்மன், விநாயகர், முருகன், வள்ளி, தெய்வானை உள்ளிட்ட தெய்வங்கள் இரதத்தில் வீற்றிருந்து பக்தர்களுக்கு அருள்பாலித்தனர்.இவ் உற்சவத்தில் நாட்டின் பல பாகங்களிலிருந்தும் ஏராளமான பக்தர்கள் கலந்துகொண்டனர். இதன்போது பக்தர்கள் தமது நேர்த்திக்கடன்களையும் நிறைவேற்றிக்கொண்டனர்.





யாழ்ப்பாணம் - வண்ணை ஸ்ரீ வீரமாகாளி அம்மன் கோவில் தேர்த் திருவிழா நேற்று(02) காலை இடம்பெற்றது.

# மதுபானசாலை திறப்பதற்கு எதிர்ப்பு: டயகம நகரில் மக்கள் போராட்டம்

நோட்டன் பிரிட்ஜ் நிருபர்


டயகம நகரில் மதுபானசாலை திறப்பதற்கு எதிர்ப்புத் தெரிவித்து அப்பகுதி மக்கள் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.

நேற்று காலை இடம்பெற்ற இப்போராட்டத்தில் பெரியோர்கள், இளைஞர் யுவதிகள், மாணவர்கள் என சுமார் இருநூறுக்கும் மேற்பட்டவர்கள் பங்கேற்றனர்.

200 வருடங்களாக மலையகத்தை அழித்து வரும் மதுபானசாலையை அமைக்க நாம் இடம் தர மாட்டோம் உள்ளிட்ட பல்வேறு வாசகங்கள் எழுதப்பட்ட சுலோக அட்டைகளை ஏந்தியவாறு கோஷங்களை எழுப்பினர்.

டயகம 3ஆம் பிரிவிலிருந்து ஆரம்பமான ஆர்ப்பாட்ட நடைபவனி டயகம் 2ஆம் பிரிவில் புதிதாக அமைக்கப்பட்டுள்ள மதுபானசாலையை வந்தடைந்து எதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்.





ஆர்ப்பாட்டக்காரர்கள் கைகளில் கறுப்புப்பட்டி அணிந்திருந்தனர். இதேவேளை வர்த்தகர்கள் வர்த்தக நிலையங்களை மூடி போராட்டத்துக்கு ஆதரவு தெரிவித்தனர்.

டயகம நகரில் 200 மீற்றருக்கு ஒரு மதுபான சாலை அமைக்கப்படுவது குறித்து பலரும் வேதனை தெரிவிக்கின்றனர். குறிப்பாக வீதியோரத்தில் புதிதாக நிர்மாணிக்கப்படும் மதுபானசாலைக்கு அருகில் லயன் குடியிருப்புகள் காணப்படுகின்றன. அதில் 200க்கும் அதிகமானோர் வசித்துவரும் நிலையில் பாடசாலை மாணவர்களும் அருகில் இருப்பது குறிப்பிடத்தக்கது.

குறித்த மதுபானசாலை நிர்மாணப்பணியை உடனடியாக நிறுத்துமாறு டயகம பொலிஸ் நிலையத்தில் பொதுமக்கள் முறைப்பாடு செய்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

# இளம் குற்றவாளிகளுக்கு தொழில், ஆன்மீக பயிற்சி வழங்குவது அவசியம்

## இளைஞர் பிரதிநிதிகள் சுட்டிக்காட்டு

குற்றவாளிகளாக அடையாளம் காணப்பட்டு தண்டனை பெற்றுவரும் இளம் குற்றவாளிகளுக்கு பொதுவான கல்வி முறையின் கீழ் கற்பிப்பது தோல்வியடைந்திருப்பதாகவும் அவர்களுக்காக ஆன்மீக வளர்ச்சி மற்றும் நடத்தையில் முன்னேற்றத்தை ஏற்படுத்துவதற்கு பயிற்சி அளிக்கப்பட வேண்டும் எனவும் துறைசார் மேற்பார்வைக்குழு சார்பில் கலந்துகொண்ட இளைஞர் பிரதிநிதிகள் சுட்டிக்காட்டினர்.

நல்லிணக்கம் மற்றும் தேசிய ஒற்றுமை பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழு அதன் தலைவர் பாராளுமன்ற உறுப்பினர் டிலான் பெரேரா தலைமையில் அண்மையில் கூடியது. இதன்போதே மேற்படி விடயம் தொடர்பாக சுட்டிக்காட்டப்பட்டது.

நீதி, சிறைச்சாலை அலுவல்கள் மற்றும் அரசியலமைப்பு மறுசீரமைப்பு அமைச்சின் கீழ் உள்ள வட்டரக்க இளம் குற்றவாளிகள் பயிற்சிக் கல்லூரி மற்றும் சமுதாயஞ்சார் சீர்திருத்தத் திணைக்களம் ஆகியவை நல்லிணக்கம் மற்றும் தேசிய ஒற்றுமை பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழுவில் அழைக்கப்பட்டிருந்தபோதே இந்த விடயங்கள் தெரிவிக்கப்பட்டன.

அவர்களுக்குத் தொழிற்கல்வி வழங்குவது மிகவும் பயனுள்ளதாக இருக்கும். என்றும் இதனால் அவர்களுக்கு வேலை வாய்ப்பு கிடைக்கும். அதேபோல் ஒரு வருட பயிற்சிக் காலம் முடிந்து மீதமுள்ள 2 ஆண்டுகளில் வருமானம் ஈட்டும் முறை போன்றவற்றை அறிமுகப்படுத்துவதால், சிறுவர்கள், 3 வருட வதிவிடக் காலப் பயிற்சியை முடித்துக்கொண்டு வெளியேறும்போது பொருளாதார வசதிகளுடன் வெளிச்செல்ல முடிந்தால் குற்றச்செயல்கள் குறையும் என்றும் அவர்கள் தெரிவித்தனர்.

16 - 22 வயதுக்கு இடைப்பட்ட காலத்தில் குற்றம் செய்ததற்காக குற்றவியல் சட்டத்தின் கீழ் நீதவான் நீதிமன்றங்களால் தண்டனை விதிக்கப்பட்ட இளம் குற்றவாளிகள் இந்த நிறுவனத்தில் அனுமதிக்கப்படுகிறார்கள். தண்டனைக் காலம் சிறைத்தண்டனை அல்லது 03 ஆண்டுகள் கட்டாயத் தடுத்துவைப்புக் காலம் என்றும் தடுத்துவைப்பு காலத்துக்குப் பின்னர் சிறுவர்கள் வெளிச் சூழலில் அரசாங்க வேலைக்கு விண்ணப்பிக்கலாம் என்றும் வட்டரக்க இளம் குற்றவாளிகள் பயிற்சிக் கல்லூரியின் சிரேஷ்ட உதவிச் செயலாளர் ஏ.வி.வஜிரா தமயந்தி தெரிவித்தார்.

நிறுவனத்தின் தரவுகளின்படி, 2013-2022 காலகட்டத்தில் இளம் குற்றவாளிகள் சிறையில் அடைக்கப்படும் போக்குக் குறைவடைந்து வருவதாகவும் இந்தப் பயிற்சிக் கல்லூரியில் நுழையும் பல சிறுவர்களின் குடும்ப உறவுகள் இல்லாமல் போவதும் தெரியவந்துள்ளது.

வட்டரக்க இளம் குற்றவாளிகள் பயிற்சிக் கல்லூரியில் கல்வி அமைச்சின் பணிப்புரைக்கமைய பாடசாலைக் கல்வி வழங்கப்படுவதாகவும் இது அவர்களுக்குக் கட்டாயமாக்கப்பட்டிருப்பதாகவும் தெரிவிக்கப்பட்டது. இதற்கு அமைய அங்குள்ள சிறுவர்கள் பொதுவான பரீட்சைகளுக்குத் தோற்றுகின்றபோது தேர்ச்சிவீதம் குறைவாகவே காணப்படுகிறது. அதாவது 2014ஆம் ஆண்டு சாதாரணதரப் பரீட்சைக்குத் தோற்றிய சிறுவர்களின் எண்ணிக்கை 16ஆக இருந்தபோதிலும் அவர்களுள் ஒருவரே சித்தியடைந்துள்ளார். 2021ஆம் ஆண்டில் ஒரு சிறுவர் மாத்திரமே தேர்ச்சியடைந்துள்ளார்.

பாடசாலைக் கல்வியை கட்டாயமாக்கும் சட்டத்தின் மூலம் அவர்களுக்கு தொழில்முறை கல்வியை திறம்பட வழங்குவதில் சிக்கல் இருப்பதாக அதிகாரிகள் சுட்டிக்காட்டினர். இந்தக் கொள்கைகள் மாற்றப்பட வேண்டும் என்பதை உணர்ந்து, சம்பந்தப்பட்ட நிறுவனங்கள் மற்றும் கொள்கை வகுப்பாளர்களுடன் இந்தப் பிரச்சினைகளைப் பற்றி விவாதிக்க குழு இணங்கியது.

இளம் குற்றவாளிகளில் எத்தனை பேர் மீண்டும் குற்றவாளிகளாக இருக்க வாய்ப்புள்ளது என்ற கேள்வியை குழு எழுப்பியது. இதற்குப் பதில் வழங்கிய அதிகாரிகள் 11 பேரில் 09 பேர் மீண்டும் குற்றவாளிகளாக இருக்க வாய்ப்புள்ளது என்றனர்.

இந்தச் சிறுவர்களுக்கான மொழிப் புலமையை வழங்குவதற்குத் தேவையான வசதிகளை ஏற்படுத்திக் கொடுப்பது மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்புப் பணியகத்தின் ஊடாக இச்சிறுவர்களுக்கு வெளிநாட்டு வேலைகளுக்குப் பரிந்துரைப்பதற்கான சில வழிமுறைகளை தயாரிப்பது தொடர்பில் குழுவின் கவனம் செலுத்தப்பட்டது.

சிறைச்சாலைகளில் காணப்படும் அதிக நெருக்கடியைக் குறைக்க சமுதாயஞ்சார் சீர்திருத்தத் திணைக்களத்தைப் பயன்படுத்த முடியும் எனவும் எனவே அது தொடர்பில் கவனம் செலுத்தப்பட வேண்டுமெனவும் குழு சுட்டிக்காட்டியது.

சமூக அடிப்படையிலான திருத்தங்களுக்கு பரிந்துரைக்கப்பட வேண்டியவர்களில், ஆனால் நீதவான்களால் சிறையில் அடைக்கப்பட்டவர்களில் சுமார் 50வீதம் பேர் திருத்தங்களுக்கு பரிந்துரைக்கப்படலாம் என்பதும் இங்கு கலந்துரையாடப்பட்டது. இது மிகவும் சிக்கலான நிலை என சுட்டிக்காட்டிய குழு, இது தொடர்பில் நீதிபதிகளுக்கு அறிவிக்க நடவடிக்கை எடுக்குமாறும் தெரிவித்தது.

அரச நிறுவனங்களைப் பரிசீலிக்கும் போது, ஒரே நோக்கத்துக்காக பல நிறுவனங்கள் இருப்பதும், அந்த நிறுவனங்களுக்கு இடையேயான தொடர்புகள் இன்மையும் பிரச்சினையாக உள்ளதாக இளைஞர் பிரதிநிதிகள் சுட்டிக்காட்டினர்.

திட்டங்களை முன்வைக்கும்போது, பசுமைத் திட்டங்கள், பிளாஸ்ரிக் மற்றும் குடிநீர் போத்தல்களை மீள்சுழற்சி செய்யும்



திட்டங்கள் போன்றவற்றை அறிமுகப்படுத்துவதன் மூலம் வருமானத்தை உருவாக்கும் செயல்முறைகளை உருவாக்க முடியும் என்றும் அவர்கள் முன்மொழிந்தனர்.

மேலும், அரசாங்கத்தின் உதவியுடன் ஓரளவு வருமானம் ஈட்டுபவர்கள் அந்தப் பணத்தில் ஒரு பகுதியை அரசாங்கத்துக்கு திருப்பிச் செலுத்தும் திறனைப் பெற்றிருக்க வேண்டும். அத்தகைய பணத்தை மற்றவர்களுக்கு முதலீடு செய்வதன் மூலம் இதுபோன்ற திட்டங்களைச் செய்ய அரசாங்க நிறுவனங்களுக்கு வாய்ப்பு கிடைக்கும். அரச நிறுவனங்கள் பொது நிதியில் தங்கியிருப்பதை தவிர்த்து, தமது கட்டுப்பாட்டுக்கு தேவையான பணத்தை வழங்க வேண்டும் என இளைஞர் பிரதிநிதிகள் சுட்டிக்காட்டினர். பல்கலைக்கழகங்கள் மூலம் செய்யப்படும் ஆராய்ச்சிகளை கொள்கை வகுப்பாளர்களுடன் இணைப்பது முக்கியம் என்றும் அவர்கள் வலியுறுத்தினர்.

இக்கூட்டத்தில் பாராளுமன்ற உறுப்பினர்களான கஜேந்திரகுமார் பொன்னம்பலம், ரஜிகா விக்ரமசிங்க ஆகியோரும் அரசாங்க அதிகாரிகள் பலரும் கலந்துகொண்டனர்.


# வெற்றி நிச்சயம்



**"உங்கள் பிரச்சினை எதுவானாலும் ஒருமுறை என்னைத் தொடர்புகொண்டால், 100% வெற்றி நிச்சயம்" நடக்காத காரியங்களையும் நடத்திவைக்கும் சக்தி என்னிடம் மட்டுமே உண்டு. என்னை நம்புங்கள். பணப்பிரச்சினை, தொழில் முடக்கம், வியாபார மந்தம், கடன் தொல்லை, முன்னேற்றத்தடை, நினைப்பது ஒன்று நடப்பது ஒன்றாக இருத்தல், எதிலும் தோல்வி, படிப்பில் மந்தம், எதிரித்தொல்லை, தீராதநோய், செய்வினை கோளாறு, போதைவஸ்துப்பாவனை, வழக்கில் வெற்றிபெற, போட்டி பந்தயங்களில் ஜெயிக்க, விற்கப்படாத வீடு/காணி/வாகனம் விற்க, வெளிநாடு செல்ல/விசா கிடைக்க, கொடுத்த பணம் திரும்பி வர, விவாகரத்தை தடுக்க, கணவன்-மனைவி பிரச்சினை, காதல் பிரச்சினை, பிரிந்தவர் ஒன்றுசேர, மனங்கவர்ந்தவரை வசமாக்கிக் கொள்ள, தகாத உறவை பிரிக்க, திருமணத்தடை, குழந்தையின்மை மற்றும் உங்கள் சகல பிரச்சினைகளுக்கும் 72 மணித்தியாலத்திற்குள் 100% நிரந்தரத் தீர்வு. இது நான் வணங்கும் அந்த ஆதிசிவன் மீது தேவ சத்தியம்.**

**உலகப்புகழ் பெற்றவரும் இலங்கையில் நம்பர் 1 மலையாள மாந்திரீக ஜாம்பவான், தத்துவஞானி, மகரிஷி, தேசபந்து, கௌரவ கலாநிதி. ஸ்ரீமத் சுவாமிஜி +94 710192687 (Whatsapp)www.facebook.com/ Srimath Suwamiji/**


# தினசரி பலாபலன்கள்

**சோபகிருது வருடம் ஆனி மாதம் 18ஆம் நாள் திங்கட்கிழமை**

**மேஷம்:** கடின உழைப்பால் உடல் அசதி, ஏதோ பயணத்தினால் மனம் தடுமாறிக் கொண்டிருக்கும்.

**ரிஷபம்:** உடல், மனம் சோம்பிக் காணப்படும். அவசர முடிவுகள் எதையும் எடுக்க வேண்டாம்.

**மிதுனம்:** விவாகப் பேச்சுக்களால் மனதில் மகிழ்ச்சி பிறக்கும். கடல் தாண்டிய பயணத்தால் நன்மை உண்டு.

**கடகம்:** நீண்ட நாள் நோயிலிருந்து விடுதலை. சத்துருக்களால் தன இலாபங்கள் உண்டு.

**சிம்மம்:** தொழில் ரீதியான நட்டங்கள் ஏற்படும். குழந்தைகளால் செலவுகள் ஏற்படும்.

**கன்னி:** யாரையும் நம்புவதா இல்லையா என்று முடிவெடுக்க முடியாது தவிப்பீர்கள். எதிர்ப்பாராத விபத்துக் கள் ஏற்படலாம்.

**துலாம்:** உங்களுக்கான நகை உடைகளை வாங்குவீர்கள். துணிவோடு நடை போடுவீர்கள்.

**விருச்சிகம்:** கொடுத்த வாக்கை காப்பாற்ற முடியாது திண்டாடுவீர்கள். மனத் தைரியம் குன்றி சோம்பலுடன் காணப்படும்.

**தனுசு:** மனத் தைரியத்துடன் அனைத்து சவால்களையும் முறியடிப்பீர்கள். குடும்பத்தில் சுப காரியங்கள் நடைபெறும்.

**மகரம்:** குடும்ப உறவுகளுடன் கவனமாக நடந்து கொள்ளுங்கள். தேவையற்றவர்களுடன் தொடர்பு கொள்ள வேண்டாம்.

**கும்பம்:** உங்கள் காதலியுடன் உள்ளாசப் பயணங்களை மேற்கொள்வீர்கள். தொழில், வியாபார இலாபம் உண்டு.

**மீனம்:** நீங்கள் எதிர்பார்த்த தொழில் அமையும். குடும்பத்தாருடன் மகிழ்ச்சியாக இருப்பீர்கள்.

**திதி:**பௌர்ணமி பி.ப.5.08 வரை பின் பிரதமை (தேய்)

**நட்சத்திரம்:** மூலம் மு.ப.11.01 வரை பின் பூராடம்

**யோகம்:**மரண யோகம் முழுவதும்

**வார சூலம்:** கிழக்கு திசை நோக்கி சுபகாரியம் கூடாது

**நல்லநேரம்:** பி.ப. 11.55– 12.25 மணிவரை

**ராகுகாலம்:**7.25– 8.55 மணிவரை

**எமகண்டம்:**10.25– 11.55 மணிவரை

**குளிகை:**1.25– 2.55 மணிவரை

**சந்திராஷ்டமம்:** இடப ராசியினர் எச்சரிக்கையாக செயல்படவும்

**தனஅதிர்ஷ்டம்:** ஆயிலியம், கேட்டை, ரேவதி, அஸ்வினி,மகம்,மூலம்(பிறந்தவர்களுக்கு)

**விசேட தினம்:** பூரணை விரதம்

**கணிப்பு : சிவா பாஸ்கரராவ்**
**(ஜோதிடம் மற்றும் வாஸ்து ஆய்வாளர்)**
**ஸ்தாபகர் - ஓம்சிவ ஜோதிட வித்தியா & வாஸ்து நிலையம்.**
**தொலைபேசி : 077-0525325 078-6759739**

தமிழன்
THAMILAN
தமிழ் பேசும் மக்களின் கருத்துரிமைக் காவலன்
இல. 91, விஜேராம மாவத்தை, கொழும்பு 07.
தொலைநகல் : 0112 67 34 42.
தொலைபேசி : 0115 200 900/ 0115 88 61 87
விளம்பரம் : 0114 846 097
மின்னஞ்சல் : thamilaneditorial@gmail.com/ thamilaneditor@gmail.com
2023, ஜூலை 03ஆம் திகதி, திங்கட்கிழமை



# கண்டுபிடிக்கப்படும் மனித எச்சங்கள்!

முல்லைத்தீவில் மனித எச்சங்கள் காணப்படுகின்ற பகுதியில் ஜூலை 6ஆம் திகதி அகழ்வுப் பணிகளை மேற்கொள்ளுமாறு நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

மேலும், எச்சங்களை அழிவடையாமல் பாதுகாக்க நீதிமன்றத்தினால் பொலிஸாருக்கு பணிப்புரை விடுக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு மாவட்டத்தின் கொக்குத்தொடுவாய் மத்திய பகுதியில் தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்பு சபையினர் நீர் இணைப்பை மேற்கொள்வதற்காக கனரக இயந்திரம் கொண்டு நிலத்தைத் தோண்டியபோது நிலத்தில் புதைக்கப்பட்ட நிலையில், குறித்த மனித எச்சங்கள் அடையாளம் காணப்பட்டன.

இச்சம்பவத்தைத் தொடர்ந்து கொக்கிளாய் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டுள்ளதையடுத்து, அவர்கள் விசாரணைகளை முன்னெடுத்தனர்.

இது தொடர்பாக முல்லைத்தீவு நீதிமன்றத்தில் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்ட நிலையில், முல்லைத்தீவு மாவட்ட நீதிமன்ற நீதிபதி ரி.சரவணராஜா குறித்த இடத்தை நேரில் சென்று பார்வையிட்டுள்ளார்.

இதற்கமைய மனித எச்சங்கள் காணப்படுகின்ற பகுதியில் ஜூலை 6ஆம் திகதி அகழ்வுப் பணிக்கு நீதிபதி உத்தரவிட்டதோடு, அதற்குரிய நபர்களுக்கான உரிய அறிவுறுத்தல்களை வழங்குமாறும், அதுவரை எச்சங்கள் அழிவடையாமல் பாதுகாக்குமாறும் கொக்கிளாய் பொலிஸாருக்கு பணிப்புரை விடுத்துள்ளார்.

சமூக ஊடகங்களில் வெளிவந்த படங்களைப் பார்க்கும்போது இந்தப் பிரதேசத்தில் முன்னாள் போராளிகளின் சீருடைகளை ஒத்த சீருடைகள் வரிசையாக கண்டுபிடிக்கப்பட்டுள்ளன. போரில் சிக்கி இறந்தவர்களாக இருந்தால் அப்படி வரிசையாக சீருடைகளும் மனித எச்சங்களும் இருக்க வாய்ப்பில்லை. எனவே, இந்த எச்சங்களின் பின்னணி குறித்து பல சிந்தனைகள் இயற்கையாகவே எழுகின்றன.

கடந்த காலங்களில் மன்னார், யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, அல்லைப்பிட்டி, திருகோணமலை என்று பல இடங்களில் நூற்றுக்கணக்கான மனித எச்சங்கள் மீட்கப்பட்டன. ஆனால், அவை குறித்து எந்த இறுதி முடிவுகளும் தெரியவில்லை. கண்டறியப்பட்ட எச்சங்கள் பழையகால சேமக்காலைகளின் எச்சங்கள் என்று கூறப்பட்டதும் உண்டு.

தமிழர் பகுதிகளின் வெற்று நிலங்களைத் தோண்டினால் ஏராளமான இடங்களில் மனித எச்சங்களைக் கண்டறியலாம் என்று தைரியமாக சொல்லிவிடுமளவுக்கு நிலைமை இருக்கிறது. நூற்றுக்கணக்கான சந்தர்ப்பங்களில் பல்வேறு தேவைகளுக்கு அகழ்வுகள் மேற்கொள்ளப்பட்டபோது அதற்கான தடயங்கள் பெருமளவில் கிடைத்துள்ளன. ஆனால், அவை யாவும் உரிய நீதியின்றி மறைக்கப்பட்டு காலம் கடத்தப்பட்டு இருட்டடிப்பு செய்யப்பட்டுள்ளன.

கடந்த காலத்தில் மன்னாரில் இரண்டு பாரிய புதைகுழிகளில் தோண்டத்தோண்ட எலும்புக்கூடுகள் வந்தன. முதலாவதாக, திருக்கேதீஸ்வர வீதியில் நீர்க்குழாய் அமைப்பதற்கான அகழ்வில், அப்பகுதிக்கு அருகில் யுத்த காலத்தில் இராணுவம் இருந்த முகாமுக்கு அருகில் கண்டுபிடிக்கப்பட்ட எலும்புக்கூடுகள் உரிய ஆய்வுகள் இல்லாமல் மறைக்கப்பட்டன. இண்டாவதாக, சதொச கட்டடம் அமைப்பதற்கான அகழ்வில் நூற்றுக்கணக்கான எலும்புக்கூடுகள் எடுக்கப்பட்டன. அவை ஆங்கிலேயர் காலத்தவை என்று கதை சொல்லப்பட்டது. இப்போது இந்த எச்சங்களும் அப்படித்தான் ஏதோவொரு கதை சொல்லப்பட்டு மூடிமறைக்கப்படப் போகின்றன.

இந்த நிலைமையை மனித உரிமைகள் ஆர்வலர்கள், கண்காணிப்பாளர்கள் கவனத்திற்கொள்ள வேண்டும். இவ்வாறு கண்டுபிடிக்கப்படும் ஒவ்வொரு மனித எச்சத்தின் பின்னாலும் தமிழர்களின் துயர்மிகு வரலாறு இருப்பதை அவர்கள் உணர்தல் வேண்டும். அதேபோல் தமிழ் அரசியல்வாதிகள் இதனை பத்தோடு பதினொன்றாக நினைக்காமல் உரிய இடங்களில் ஆவணப்படுத்தலும் அவசியம் என்பதைக் குறிப்பிட விரும்புகிறோம்.

# புத்தகம் எனும் ஆசிரியர்!...



## கிருங்கை சேதுபதி

புதிதாக வாங்கி வைத்திருந்த புத்தகங்களை நிரல்படுத்தி வைப்பதற்காக, பழைய அலமாரியைச் சரிசெய்யும் முயற்சியில் இறங்கியிருந்தேன். பூச்சிகள் அரிக்காமல், வண்ணம் பூசி வகை செய்யும் பெரியவர் ஒருவர் அப்பணியை செய்ய வந்தார்.

இருக்கிற புத்தகங்களை இடம்மாற்றி வைக்கிறேன் என்று முதலில் எண்ணியிருந்த அவர் நான் அவற்றின் சில பக்கங்களை விரித்துப் படித்து முடித்து வைப்பதைப் பார்த்தார். சிலவற்றை அப்படியே வைப்பதையும் பார்த்த அவருக்கு எதுவும் புரியவில்லை. அதுவரை பிரிக்காதிருந்த பெட்டிகளைப் பிரித்து எடுக்கத் தொடங்கியதும் என்னைப் பார்த்துத் தயக்கத்துடன், ''இவ்வளவு புத்தகங்களையும் நீங்க படிக்க வேண்டுமா?'' என்று கேட்டார். நான் ''ஆம்'' என்று தலையசைத்தேன். அவர், 'நீங்கள்தான் படித்து முடித்து, வேலைக்குச் சேர்ந்து ரொம்ப வருடங்களாகி விட்டதே.. இன்னும் படிக்க வேண்டுமா?'' என்று வெள்ளந்தியாகக் கேட்டார்.

அவருக்கு மட்டுமல்ல, நம்மில் பெரும்மாலானோருக்கு, படிப்பது என்பது வேலைவாய்ப்புக்கானது என்ற கருத்தே நிலைத்திருக்கிறது. பாடப் புத்தகங்களைத் தாண்டி, படிக்கிற புத்தகங்கள் என்று கதைப் புத்தகங்களைக் கருதுகிறவர்கள் இருக்கிறார்கள். உணவை அசைபோடுவதுபோல, உணர்வை அசைபோட்டு அதன்வழியே உயிர்ப்புப் பெறுவதற்குத்தானே வாசிப்பு..!

வாசிப்புப் பழக்கத்தை வழக்கமாகக் கொண்டவர்களின் கவனத்தை இப்போது, முகநூல் ஈர்த்துவிடுகிறது. கைபேசியில் கருத்திடுவதோடு பலரது எழுத்தார்வம் நிறைவடைந்துவிடுகிறது. வந்த கருத்துகளைப் படிப்பதுடன் அவற்றைப் பிரதியெடுத்துப் பகிர்ந்துவிடுவதிலும் பலருக்குத் திருப்தி வந்துவிடுகிறது. சரியா, தவறா என்று கூடத் தெரிந்துகொள்ள முடியாத நிலையில், வதந்திகளும் போலிகளும் மிகுந்துவருகின்றன. மூலம் யாருடையது என்பதுகூடத் தெரியாமல், எடுப்பார் கருத்தாய் எங்கும் பரவி விடுகின்றன.

இன்னும் பத்தாண்டுகளுக்குள் அச்சிட்ட புத்தகங்களுக்கு அவசியமில்லாமல் போய்விடும் என்று சொல்கிற இளைய தலைமுறை வளர்ந்து வருகிறது. எது குறித்த செய்தியையும் உடனுக்குடன் தேடிக் கண்டுகொள்ள உதவியாக ஊடகங்கள் வளர்ந்துவிட்டபிறகு, புத்தக வாசிப்பு ஒரு பொருட்டாகத் தோன்றவில்லை. தேவையில்லாமல் இடத்தை அடைத்துக் கொள்ளும் புத்தகங்களுக்குச் செய்கிற செலவு வீண் என்ற சிந்தனைப்போக்கு வலுப்பட்டுவிட்டது. விரும்பினாலும் விரும்பாவிட்டாலும் கைபேசியிடம் நம்மை முழுக்கவும் ஒப்படைத்துக் கொண்ட காலம் வந்துவிட்டபடியால், படிப்பதற்கு ஏது நேரம் என்கிற நிலைப்பாடு வந்துவிட்டது.

அவசரப் பசிக்கு அள்ளித் தின்னும் நொறுக்குத் தீனி நிரந்தர உணவாகாது என்பது எப்படி உண்மையோ, அப்படித்தான் இந்தக் கருவிகள் வாயிலாகப் பெறும் மேலோட்ட வாசிப்பும். அவசர உணவு போல் வாசிப்பும் ஆகிவிட்டால் ஆரோக்கியமாகுமா? புத்தகம் என்பது புத்தாக்கம் செய்கிற ஒரு கருவி. சிந்தனையின் ஊற்றுக்கண்ணைத் திறக்கும் திறவுகோல்.

''படிக்காத நாளெல்லாம் பதரான நாள்'' என்று குறிப்பிடுவார் தவத்திரு குன்றக்குடி அடிகளார். கடித்துச் சுவைத்து, மென்று தின்று உமிழ்நீரோடு ஒன்று கலந்து உள் இறங்கும் உணவுப் பொருள் உதிரத்தோடு கலப்பதுபோல், எழுத்துகளின் மீது படரும் பார்வை வழியாக உள்ளம் இறங்கும் கருத்துகள் யாவும் உணர்வில் கலந்து உயிர்ப்புடன் இயக்கிப் புதிதாய்ப் பிறக்கும் அற்புதத்தை,வாசிப்பு அனுபவத்தால் அன்றி வேறு எவ்வகையில் பெற முடியும்?

சொல்லுக்குச் சொல் இடைவெளிவிட்டு இருப்பது, வாசிப்புக்குச் சுகத்திற்காக மட்டுமல்ல, அந்த இடைவெளியில் நம் சிந்தனையும் இணைந்து வாசிப்புக்கு உள்ளாக்கப்படுகிறது என்பதே உண்மை. உணவுப் பொருளை உட்கொள்ளும்போதே உயிர்க்காற்றும் உடன் உட்கொள்ளப்படுவதுபோல, அது நிகழ்ந்து விடுகிறது.

மெல்லும் தன்மையில் உணவுக் குழைவுடன் சுரக்கும் உமிழ்நீர் கலப்பதுபோல, வாசிப்பும் வாசிப்பவரின் சிந்தனையும் ஒன்றி உள்ளிறங்கும்போது சுவை வந்துவிடுகிறது. வாய்க்கு உணவாவது அறுசுவை கொண்டிருப்பதுபோல், வாழ்வுக்கான சுவைகளையும் வழங்க வல்லது புத்தகம்.

அன்றைய மதிய உணவுக்கான இடைப்பொழுதில் புத்தகம் பற்றிய பேச்சே எங்களுக்கு ஊறுகாயானது. ''முடித்த புத்தகங்களை, இடத்தை அடைப்பதால் பலர் எடைக்குப் போட்டு விடுகின்றார்கள். நீங்கள் படித்த புத்தகத்தையே திரும்பத் திரும்பப் படிக்கின்றீர்களே..?'' என்று கேட்டார் அவர்.

முதன்முதலாகப் படித்தபோது ரசித்த வரிகளை அடிக்கோடிட்டு வைத்திருந்த பக்கங்களைப் புரட்டுகிறபோது அந்த காலத்திற்கே அவை நம்மைக் கொண்டுபோய்ச் சேர்க்கும் என்பதை அவரிடம் எப்படிச் சொல்வது? அந்த நூல் எழுதப்பட்ட காலம், அது குறிப்பிடப்படும் காலம், அதனை வாங்கிய காலம், முதன்முதலாக வாசித்த காலம் என்று எத்தனை காலங்களை உள்ளடக்கி, நிகழ்காலத்தில் நம் முன் நிலைத்திருக்கிறதே..!

அடங்காப் பசியோடு புத்தகங்கள் தேடி அலைந்த காலத்தில் பெருவிருந்து படைத்த நூலகங்கள் அறிவுத் திருக்கோயில்களாக அன்றைக்குத் தோன்றின. அதுபோல், வீட்டை ஆக்க வேண்டும் என்கிற வெறியில் உணவுக்கான பணத்தையும் சிக்கனப்படுத்தி வாங்கிச் சேர்ந்த புத்தகங்களைத் திரும்பவும் பார்க்கிறபோது, முடிந்த பொழுதுகள் மீளவும் முளைக்கிற அனுபவத்தைச் சொல்லிக் காட்டினேன்.

வாங்கிப் படிக்க வசதியில்லாத காலத்தில், இருப்பவர்களிடத்தில் இரவல் வாங்கி வந்த புத்தகத்தை இரவோடிரவாக வாசித்த வேகத்தை மறக்க முடியுமா? தர மறுத்தவர்களின் முன் அவமானப்பட்ட வேதனையில் அதே புத்தகத்தை பல பிரதிகள் வாங்கி வைத்து வாசித்து அடுக்கி வைத்த ஆத்திர நினைவுகள், அந்தப் புத்தக வரிசையைப் பார்க்கிறபோதெல்லாம் மீள வருகின்றனவே..!

இரவல் வாங்கிப் படித்த பிறகு திருப்பிக் கொடுக்க மறந்த புத்தகங்கள், ''உன்னிடமே இருக்கட்டும்'' என்று நண்பர்கள் தந்த புத்தகங்கள் எல்லாம் கொடுத்தவர்களை மீள மனக்கண் முன் கொண்டுவந்து நிறுத்துகின்றனவே..!

இல்லாதவர்கள் பலரும் இந்தப் புத்தகங்களாக இருக்கிறார்கள் எனும்போது, இங்கு 'அமரர் சங்கம்' தோன்றிவிடுகிறதே..! இந்த வரிசையில் எனது புத்தகங்களும் இருக்கிற வகையில் உயர்த்திய புத்தகங்களை, தாள்களின் தொகுப்பு என்று தள்ளிவிடப் போகிறோமா?

நான் அவரிடம் ''இவையெல்லாம் வெறும் தாள்கள் இல்லை. உள்ளே, ஆகப் பெரிய ஆட்கள் இருக்கிறார்கள்'' என்றேன். ''பார்த்தேன்'' என்றார். அவர் மனத்திரையில் புத்தகங்களின் அட்டைப்படத் தலைவர்களது முகங்கள் தெரிந்தன போலும்.

''ஒரு பிறவியில் பல பிறவிகளுக்கான அனுபவங்களை இந்தப் புத்தகங்கள் தந்துவிடும்'' என்றேன். அவர் வயதுக்கு எத்தனையோ அனுபவங்கள் வாய்த்திருக்கும். அதுபோல், எத்தனையோ மனிதர்களின் எதிர்பாராத அனுபவங்கள் நிறைந்தவை இந்தப் புத்தகங்கள். அவற்றைச் சுமையில்லாமல் சுகமாக மனதளவில் அனுபவிக்கத் தரும் அமுத நிலையங்கள் இவை.

பக்கம் பக்கமாகத் திறக்கப்படும் புத்தகம் நம் மன அடுக்குகளின் உட்புகுந்து நிரந்தரமாகக் குடியேறும் அழகை மீள நினைக்கும்போது புதிதாக எழும் சிந்தனைக் கீற்றில் நுண் அனுபவம் விரியும் நேர்த்தி வாசிப்பின்போது மட்டுமே நேர்வது அல்லவா? கம்பனின் பாடல் வரிகளோ, ஜெயகாந்தனின் பாத்திரப் பேச்சோ எண்ணத்தில் எழும்போது, அதனை எழுத்தாகத் தாங்கிய பக்கமும் சேர்ந்து மனம் ஒரு புத்தமாய்த் திறக்குமே..! வாழ்வில் கிட்டாத சுவாரஸ்யங்களை வாசிப்பில் கொண்டு வந்துசேர்த்த அனுபவங்கள் நம் மனங்களை எவ்வளவு பக்குவப்படுத்தியிருக்கின்றன என்பதை மறந்து விட முடியுமா?

''படிக்கப் படிக்க மனத்தில் படிந்த கசடுகள் போகும். செய்ய வேண்டியதையும் செய்யக் கூடாததையும் புத்தகம் மாதிரி சொல்லிக் கொடுக்கிற நண்பன் வேறு யாரும் இல்லை'' என்று வாசிப்பால் பெற்ற வாழ்வியல் அனுபவத்தை, வாழ்க்கை வரலாற்று நூல் ஒன்றிலிருந்து மேற்கோளாகச் சொன்னேன்.

''வாத்தியார் சொல்லிக் கொடுத்ததுபோக, இதையெல்லாம் படித்துத்தான் ஆக வேண்டும் போல'' என்று சொன்னார்.

''உண்மைதான். ஒவ்வொரு புத்தகமும் ஓர் ஆசிரியர்தான். படிக்காவிட்டாலும் அடிக்காமல் விடுகிற நல்ல ஆசிரியர்'' என்றேன். சிரித்துக்கொண்டார். அனுபவப் பாடம் ஆகப் பெரியது. பாடசாலைப் படிப்பைக் கூட முடிக்காத பலர், பல்கலைக்கழகப் பாடங்களுக்கான புத்தகங்களைத் தந்திருக்கிறார்களே..! யோசித்துப் பார்த்தால், புத்தகசாலையே ஒரு பல்கலைக்கழகம்தானே..!

''பழைய புத்தகங்களைக் கூடத் தூக்கி எறிய மனதில்லாம் சேகரித்து வைத்திருக்கின்றீர்கள் போலும்'' என்றார். தாள் தாளாக இருந்த பக்கங்களின் ஓரங்கள் தூள் தூளாக உதிரத் தொடங்கியதை ஒரு பொலித்தீன் பைக்குள் முறைப்படி சேகரித்து வைத்ததைப் பார்த்திருக்கிறார் போலும்.

உண்டு முடித்த கைகளைக் கழுவிக் கொண்டே, ''வயதாகி விட்டதே என்று நம்மை நாமே தூக்கிப் போட நமக்கு மனது வருமா? தெரியாமல் கேட்டுவிட்டேன். தூக்கிப் போடுகின்ற காலமாச்சே தம்பி...'' என்று கலங்கியவர், ''ஆனால், நான் தூக்கிப் போடவில்லை. தூக்கி வளர்க்கிறேன். படிக்க வைக்கிறேன். பெற்றவர்கள் பெயர் தெரியாப் பிள்ளைக்காகத்தான் இந்த வேலைக்கு வருகிறேன். நல்ல புத்தகங்களாக அந்தப் பிள்ளைக்குக் கொஞ்சம் தருவீர்களா தம்பி?'' என்று வினவினார். 'மனிதர்கள் உயிருள்ள புத்தகங்கள்' என்று மகாகவி பாரதியார் சொல்லிய சொல் என் நெஞ்சில் மின்னலாய் வெட்டியது. ''வேண்டியதை எடுத்துச் செல்லுங்கள்'' என்று சொல்லியதைத் திருத்தி, ''வேண்டாம். அந்தப் பிள்ளையை இங்கேயே அழைத்து வாருங்கள்'' என்றேன். கழுவித் துடைத்திருந்த அவரது கைகளின் எஞ்சிய ஈரம் என் நெஞ்சில் ஏறியது.

(நன்றி - தினமணி)

# இலங்கை – இந்திய மலையக மக்களை ஒருங்கிணைத்து மலையக தோழமை இயக்கம் ஒன்று அமைக்கப்படும்!

## இலங்கைக்கான இந்திய வெளியுறவுக் கொள்கை மாற்றப்பட வேண்டும் - திருச்சியில் மனோ கணேசன் எம்.பி. பேட்டி

இலங்கைக்கான இந்திய வெளியுறவு கொள்கையை மாற்ற வேண்டும் என்று திருச்சியில் நடைபெற்ற நிகழ்ச்சியில் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்தார்.

திருச்சியில் இந்திய வம்சாவளி தாயகம் திரும்பிய மலையக தமிழக மக்கள் நிலை மற்றும் எதிர்கால செயல்பாடுகள் குறித்த கலந்துரையாடல் ஞாயிற்றுக்கிழமை நடைபெற்றது. இதில் தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் பங்கேற்று கலந்துரையாடினார்.

பின்னர் அவர் நிருபர்களிடம் தெரிவித்ததாவது:- இந்தியா மற்றும் இலங்கையில் 40 இலட்சம் மலையகத் தமிழ் மக்கள் வசித்து வருகின்றனர். இவர்கள் அனைவரும் பிற்படுத்தப்பட்டவர்கள். இவர்கள் அனைவரையும் மத்திய, மாநில அரசுகள் அரவணைக்க வேண்டும். தமிழக முதல்வர் மு.க.ஸ்டாலினின் சமூக நீதிக்கொள்கையை இலங்கையின் மலையகத் தமிழர்கள் மீதும் காட்ட வேண்டும். கடந்த 75 ஆண்டுகளாக கடைப்பிடித்து வந்த கொள்கை தோல்வியடைந்துவிட்டது.

இலங்கை அரசு, இந்தியாவுடன் நட்புறவுடன் செயற்பட வேண்டுமென்பதற்காக மலையகத் தமிழர்களைப் பிரித்தது, கச்சத்தீவை வழங்கியது போன்ற பல செயல்களை இந்திய அரசு செய்தது. ஆனால், இலங்கை அரசு, இந்தியாவுக்கு எதிராகவே செயற்பட்டு வருகிறது. எனவே, இந்திய அரசு, இலங்கையின் வெளியுறவுக் கொள்கையை மறுபரிசீலனை செய்து, இந்தியாவின் தோழர்களான இலங்கையின் மலையகத் தமிழர்கள், ஈழத் தமிழர்களின் நலன்களை அடிப்படையாகக் கொண்டு, புதிய வெளியுறவுக் கொள்கையை ஏற்படுத்த வேண்டும். தற்போது இலங்கையில் சீனாவின் கை ஓங்கியுள்ளது. இந்தியாவின் இலங்கைக் கொள்கை படுதோல்வியடைந்து விட்டது.

சிங்களப் பேரினவாதிகள் எவ்வளவு கொடுத்தாலும் திருப்தியடைய மாட்டார்கள். இலங்கையின் மலையகத் தமிழர்கள், ஈழத்தமிழர்களின் நலன்களை அடிப்படையாகக் கொண்டு வெளியுறவுக் கொள்கையை மாற்றியமைக்க வேண்டும்.



இது தொடர்பாக, இந்தியப் பிரதமர் நரேந்திர மோடியையும் தமிழக முதல்வர் மு.க. ஸ்டாலினையும் சந்தித்துப் பேசுவேன். தமிழகத்தில் உள்ள டான்டீ நிறுவனத்தை தமிழக அரசு விற்க முயற்சி செய்து வருகிறது. இதனைத் தடுக்க வேண்டும். இலங்கை - இந்திய மலையக மக்களை ஒருங்கிணைத்து செயற்படும் வகையில் இலங்கை மலையக தோழமை இயக்கம் ஒன்று அமைக்கப்படும் என்று தெரிவித்தார்.

இந்நிகழ்வில் நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் எம்.எஸ்.செல்வராஜ், தமிழகன் மற்றும் பலர் கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

## நக்கல் நமசிவாயம்

நாட்டுக்கடன்களை மறுசீரமைச்சாச்சு... வீடுகளில மக்கள் பட்ட கடன்களை யார் அடைப்பது..?



## இன்றைய நாளில்...

- 1872 – 1823இல் ஆரம்பிக்கப்பட்ட பட்டிக்கோட்டா குருமடம், யாழ்ப்பாணக் கல்லூரி என்ற பெயரில் வட்டுக்கோட்டையில் ஆரம்பிக்கப்பட்டது.
- 2006 – பூமியிலிருந்து 432,308 கி.மீ. தூரத்தில் 2004 எக்ஸ்.பி-14 என்ற சிறுகோள் பறந்தமை அவதானிக்கப்பட்டது.
- 2013 – எகிப்தில் இடம்பெற்ற இராணுவப் புரட்சியை அடுத்து, அரசுத்தலைவர் முகம்மது முர்சி இராணுவத்தினரால் பதவியிலிருந்து அகற்றப்பட்டார்.

# சுயலாப கூக்குரல்கள் தொடர்பில் மக்களும் ஊடகங்களும் பொறுப்புடன் செயற்பட வேண்டும்

## அமைச்சர் டக்ளஸ் வேண்டுகோள்



கடற்றொழில் அமைச்சினால் முன்னெடுக்கப் படுகின்ற மக்கள் நலத் திட்டங்கள் அனைத்தும் முறையான ஆய்வுகளின் அடிப்படையில் மேற்கொள்ளப்படுகின்றனவே தவிர, தான்தோன்றித்தனமாக எவையும் மேற்கொள்ளப்படவில்லை எனத் தெரிவித்துள்ள அமைச்சர் டக்ளஸ் தேவானந்தா, சுயநல சந்தர்ப்பவாதிகளின் கூக்குரல் தொடர்பில் மக்களும் ஊடகங்களும் விழிப்புணர்வுடனும்- பொறுப்புணர்வுடனும் செயற்பட வேண்டும் எனவும் வேண்டுகோள் விடுத்துள்ளார்.

பாராளுமன்றில் நேற்றுமுன்தினம் (01) இடம்பெற்ற தேசிய கடன் மறுசீரமைப்பு தொடர்பான விவாதத்தில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும் போதே அமைச்சர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அமைச்சர் மேலும் தெரிவிக்கையில், வடக்கு மாகாணத்திலே எமது மக்களின் வாழ்வாதாரங்களைக் கருத்திற்கொண்டு ஏற்கனவே ஒரு சிலர் மாத்திரம் பயன்பெற்று வந்திருந்த கடலட்டைப் பண்ணைக் கைத்தொழிலை நாம் விரிவுபடுத்தி இதுவரையில் பல நூற்றுக்கணக்கான தொழில் முயற்சியாளர்களை உருவாக்கியிருக்கின்றோம்.

"பழையன கழிதலும் புதியன புகுதலும்"; என்ற அடிப்படையில் கடற்றொழில் மற்றும் நீர் வேளாண்மை சார்ந்து நாம் பல்வேறு புதிய திட்டங்களைச் செயற்படுத்தி வருகின்றோம். கறுப்புத் தங்கம் எனப்படுகின்ற கடலட்டைப் பண்ணைக் கைத்தொழிலானது எமது மக்களின் பொருளாதாரத்தில் அதீத செல்வாக்குச் செலுத்த ஆரம்பித்ததும் சில தமிழ் அரசியல்வாதிகள் முதற்கொண்டு சில சுரண்டல்வாதிகள் அதற்கெதிரான கருத்தாடல்களை முன்வைத்து வருகின்றனர்.

மக்களின் அவலங்களுக்கு தூபமிடுபவர்கள், ஆசை காட்டி தமது ஏவலாளர்களைத் தூண்டி விடுகிறார்கள். அதன்மூலம் உயர்ந்த இலட்சிய கோபுரங்களை உடைத்து வீழ்த்தி குட்டிச்சுவர்களாக்கி விடலாம் எனக் கனவு காண்கிறார்கள். தம்மால் முடியாததை அடுத்தவன் செய்தால் அதைத்தடுக்க தகிடு தித்தித்தாளம் போடுவது தமிழ்த் தேசியம் அல்ல.

நாங்கள் தமிழ் தேசத்தின் விடியலுக்காக நீதியான வழியில் இரத்தமே சிந்தியவர்கள். தமிழ்த் தேசியத்தை வெறும் தேர்தல் கோஷமாக ஒருபோதும் உச்சரித்தவர்கள் அல்லர்.

நாங்கள் அரசியல் யதார்த்த சூழலை உணர்ந்து தேசிய நல்லிணக்கப்பாதையில் வெளிப்படையாகவே அணிவகுப்பவர்கள். எக்காலத்திலும் அரசுடன் பின்கதவால் தட்டிப் பேசியவர்கள் அல்லர். அல்லது தென்னிலங்கையைத் தூண்டிவிட்டு அதில் குளிர்காய, தமிழர் தேசத்தில் அர்த்தமற்ற ஆர்ப்பாட்டங்கள் செய்பவர்களும் அல்லர். மாகாணசபை முறைமையில் இருந்து முன்னோக்கிச் செல்வதே நடைமுறைச் சாத்தியம் என்ற எமது தீர்க்கதரிசனத்தை ஏற்றுக்கொண்டது போல், அல்லது - அதை ஏற்க மாட்டோம். ஆனாலும் அதில் பங்கெடுப்போம் என்ற மறைமுக ஆதரவு கொடுப்பதுபோல் எல்லா விடயங்களிலும் இதயசுத்தியோடு செயலாற்ற முன்வாருங்கள். விளக்கங்களைக் கோரும் மக்களுக்கு குழப்பங்களை உருவாக்குவதை நிறுத்துங்கள்.சில தொண்டு நிறுவனப் பிரதிநிதிகளும், விளக்கமில்லாததும் - விளக்கமிருந்தும் விளங்காதது போன்ற கருத்துகளை வெளியிட்டு வருகின்றனர். இவர்கள் தங்களது வாழ்வாதாரங்களை மாத்திரம் கருத்திற்கொள்ளாமல், மக்களது வாழ்வாதாரங்கள் தொடர்பிலும் அக்கறை செலுத்த வேண்டும். மக்களுக்கு சரியான தகவல்களை வழங்க முன்வரவேண்டும் எனவும் கேட்டுக் கொள்கின்றேன். எமது மக்களுக்கு நன்மைகள் கிட்டும்போது அதைத் தடுத்துநிறுத்தி, எமது மக்களைத் தொடர்ந்தும் கையேந்தும் நிலையில் வைத்துக்கொண்டு அரசியல் செய்வதும் தமது பிழைப்புகளை முன்னெடுப்பதுமே இவர்களது நோக்கமாக இருக்கின்றது. நாங்கள் முறையான ஆய்வுகளுக்கூடாகவே திட்டங்களை முன்னெடுத்து வருகின்றோமேயன்றி தான்தோன்றித் தனமாக எதையும் முன்னெடுப்பதில்லை. வெளிப்படையான தன்மை கொண்டவையாகவே இத்திட்டங்கள் முன்னெடுக்கப்படுகின்றன.

கடலட்டை, இறால், நண்டு, கடல் பாசி, சிப்பி போன்ற நீர் வேளாண்மைக் கைத்தொழில்களை ஒருவர் மேற்கொள்ள வேண்டுமெனில் முதலில் அவர் அத் தொழிலை மேற்கொள்கின்ற பிரதேசத்துக்குரிய பிரதேச செயலாளரிடம் அது சார்ந்த கோரிக்கைக் கடிதத்தை சமர்ப்பிக்க வேண்டும். அதன் பின்னர் தேசிய நீரியல் வளங்கள் அபிவிருத்தி அதிகார சபை(நெக்டா), கடற்றொழில் மற்றும் நீரியல் வளங்கள் திணைக்களம், கடலோரப் பாதுகாப்புத் திணைக்களம் அடங்கலாக கள ஆய்வு நடத்தப்பட்டு, கடற்றொழில் அமைச்சு அதன் சாதக - பாதகங்ளை ஆய்வு செய்த பின்னரே குறித்த நபருக்கு நீர் வேளாண்மைக்கான அனுமதி வழங்கப்படுகின்றது.இதனை விளங்கிக் கொள்ளாமல் சுயலாப அரசியலுக்காக சிலர் கூக்குரல் இடுவது தொடர்பில் எமது மக்களும் தமிழ் ஊடகங்களும் விழிப்புடனும் பொறுப்புடனும் இருக்க வேண்டும் என்று எதிர்பார்க்கின்றேன்.




வெள்ளவத்தை சைவ மங்கையர் வித்தியாலய மாணவி ச. சந்தோஷி ரஜீவ் கார்த்திகன் அவுஸ்ரேலியாவில் நடைபெறவுள்ள சர்வதேச பாடசாலைகள் வலைப்பந்தாட்டப் போட்டிக்குத் தெரிவுசெய்யப்பட்டுள்ளார்.அம்மாணவிக்கான பாராட்டு விழா கல்லூரியின் அதிபர் தலைமையில் பாடசாலையில் இடம்பெற்றது. (அஷ்ரப் ஏ. சமத்)



யாழ்.மாவட்ட வலிந்து காணாமலாக்கப்பட்டோரின் உறவுகள் போராட்டமொன்றை முன்னெடுத்தனர். குறித்த போராட்டம் சனிக்கிழமை காலை 10 மணியளவில் யாழ்ப்பாணம் நல்லை ஆதீனம் முன்பாக இடம்பெற்றது. இப்போராட்டத்தின்போது காணாமலாக்கப்பட்ட உறவுகளின் புகைப்படங்களையும் போராட்டகாரர்கள் ஏந்தியிருந்தனர். போராட்டக்காரர்களைக் கண்காணிப்பதற்காக அப்பகுதியில் இராணுவ புலனாய்வாளர்கள் மற்றும் பொலிஸ் புலனாய்வாளர்கள் குவிக்கப்பட்டிருந்தனர்.

# 'சித்திரவதையிலிருந்து பாதுகாப்பு' காங்கேசன்துறையில் கருத்தரங்கு




சித்திரவதையினால் பாதிக்கப்பட்டோருக்கு ஆதரவளிக்கும் சர்வதேச தினத்தை முன்னிட்டு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாண பிராந்திய காரியாலயத்தின் ஏற்பாட்டில் காங்கேசன்துறையில் பொலிஸ் பயிற்சிப் பாடசாலையிலுள்ள பொலிஸ் அதிகாரிகளுக்கு கருத்தரங்கொன்று இடம்பெற்றது.

இக்கருத்தரங்கில் பிரதான வளவாளராக இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் யாழ்ப்பாணப் பிராந்திய இணைப்பாளர் தங்கவேல் கனகராஜ் செயற்பட்டார்.

இக்கலந்துரையாடலில் 'சித்திரவதையிலிருந்து பாதுகாப்பு' எனும் தலைப்பில் சித்திரவதைக்கு எதிரான சர்வதேச மற்றும் உள்நாட்டு சட்டங்கள் சித்திரவதைக்கு எதிரான தண்டனைகள் தொடர்பிலும் சித்திரவதையிலிருந்து பாதுகாப்பு இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவின் வகிபாகம் என்பன தொடர்பில் விளக்கமளிக்கப்பட்டன.

# பேராதனைப் பல்கலைக்கழகத்தில் மக்கள் பார்வைக்கு காட்சிக்கூடங்கள்

**பொதுமக்களுக்கான திறந்த ஒருநாள் விசேட நிகழ்வில் 5 இலட்சத்திற்கும் மேற்பட்ட மக்கள் பங்கேற்பு**





இக்பால் அலி

பேராதனை பல்கலைக்கழகத்தின் 80 ஆவது வருட பூர்த்தியை முன்னிட்டு கடந்த சனிக்கிழமை முதலாம் திகதி பொதுமக்கள் தினமாக அறிவிக்கப்பட்டு 60 காட்சிக் கூடங்கள் பொது மக்கள் பார்வைக்காகத் திறந்துவைக்கப்பட்டன.

இந்நிகழ்வில் சுமார் 5 இலட்சத்துக்கும் மேற்பட்ட பொது மக்கள் கலந்து கொண்டமையால் பல்கலைக்கழகத்தை அண்மித்த பிரதேசங்களில் பாரிய போக்குவரத்து நெரிசல் ஏற்பட்டது.

சுமார்1,800 ஏக்கர் நிலப்பரப்பில் அமைந்துள்ள இந்தப் பல்கலைக்கழகத்தில் 35,000 பட்டதாரி மாணவர்கள் கல்வி கற்று வருகின்றனர். கலைப் பீடத்தில் அமைந்துள்ள பிரதான நூலகமானது சர்வதேச ரீதியில் பிரசித்திபெற்றுள்ளது. இந்த நூலகம் 1921 ஆம் ஆண்டு ஆரம்பிக்கப்பட்டதாகும். சுமார் 10 இலட்சத்துக்கும் மேற்பட்ட விலை மதிக்க முடியாத நூல்கள் இந்த நூலகத்தில் காணப்படுகின்றமை வரவேற்கத்தக்க விடயம்.

# இஸ்ரேல்-இலங்கை இடையிலான விமான சேவை

## விரைவில் ஒப்பந்தம் கைச்சாத்து

இஸ்ரேலுக்கும் இலங்கைக்குமிடையிலான நேரடி பயணிகள் விமான சேவை எதிர்வரும் ஒக்டோபர் முதல் ஆரம்பிக்கப்படும் என துறைமுகங்கள், கப்பல் போக்குவரத்து மற்றும் விமான சேவைகள் அமைச்சு தெரிவித்துள்ளது.

இது தொடர்பான விசேட கலந்துரையாடல் அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா தலைமையில் இரண்டு நாடுகளின் சிவில் விமான சேவை அதிகாரிகளின் பங்குபற்றலுடன் அண்மையில் இடம்பெற்றது.

இதன்படி, இஸ்ரேலின் டெல் அவிவில் இருந்து கட்டுநாயக்க வரை நேரடி பயணிகள் விமான சேவைகள் முதன்முறையாக ஆரம்பிக்கப்படவுள்ளன.

இஸ்ரேலின் அகியா (Akia) விமான சேவைக்குச் சொந்தமான விமானங்கள் இலங்கைக்கான இந்த சேவைகளை முன்னெடுக்கவுள்ளன.

அது தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தம் விரைவில் கைச்சாத்திடப்படும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# போதைப்பொருள் அச்சுறுத்தலை கட்டுப்படுத்த விசேட குழு நியமனம்

நாட்டில் வேகமாக அதிகரித்து போதைப்பொருள் பாவனையை உடனடியாகக் கட்டுப்படுத்துவதற்கும் ஒழிப்பதற்கும் நடைமுறைப்படுத்தப்பட வேண்டிய வழிமுறைகள் குறித்து ஆராய்ந்து அது பற்றிய அவதானிப்புகளையும் விதப்புரைகளையும் பாராளுமன்றத்துக்குச் சமர்ப்பிப்பதற்கான பாராளுமன்ற விசேட குழுவொன்று டிரான் அலஸ் தலைமையில் நியமிக்கப்பட்டுள்ளது.

இவ்விடயம் தொடர்பாக சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன கடந்த முதலாம் திகதி பாராளுமன்றத்தில் அறிவித்தார்.

அதற்கமைய, பாராளுமன்ற உறுப்பினர்களான சட்டத்தரணி சிசிர ஜயக்கொடி, வைத்திய கலாநிதி சீதா அரம்பேபொல, புத்திக பத்திரன, வைத்திய கலாநிதி கயாஷான் நவனந்த, துஷார இந்துனில் அமரசேன, வைத்திய கலாநிதி உபுல் கலப்பத்தி, மேஜர் சுதர்ஷன தெனிபிடிய, அசங்க நவரத்ன, உபுல் மஹேந்திர ராஜபக்ஷ, தவராஜா கலையரசன் மற்றும் மஞ்சுலா திசாநாயக்க ஆகியோர் நியமிக்கப்பட்டுள்ளனர்.

# உள்நாட்டுப் படுகடன் மேம்படுத்தலை நடைமுறைப்படுத்துவதற்கான தீர்மானம்

## 60 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றம்

இறையாண்மைப் படுகடன் நிலைபெறு தன்மையை மீட்டெடுப்பதற்கு உள்நாட்டுப் படுகடன் மேம்படுத்தலை நடைமுறைப் படுத்துவதற்கான தீர்மானம் திருத்தங்களுடன் நேற்றுமுன்தினம் (01) பாராளுமன்றத்தில் 60 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டுள்ளது.

இறையாண்மைப் படுகடன் நிலைபெறு தன்மையை மீட்டெடுப்பதற்கு உள்நாட்டுப் படுகடன் மேம்படுத்தலை நடைமுறைப்படுத்துவதற்கான தீர்மானம் திருத்தங்களுடன் நேற்று முன்தினம் (01) பாராளுமன்றத்தில் 60 மேலதிக வாக்குகளால் நிறைவேற்றப்பட்டது.

உள்நாட்டுப் படுகடன் மேம்படுத் தலை நடைமுறைப்படுத்துவதற்கான தீர்மானம் தொடர்பான விவாதம் கடந்த சனிக்கிழமை மு.ப. 9.30 மணி முதல் இரவு 7.30 மணி வரை பாராளுமன்றத்தில் இடம்பெற்றது. இந்நிலையில், இது தொடர்பான வாக்கெடுப்பு இரவு 7.30 மணியளவில் இடம்பெற்றது. இதன்போது வாக்கெடுப்பில் தீர்மானத்துக்கு ஆதரவாக 122 வாக்குகளும் எதிராக 62 வாக்குகளும் பதிவாகின. இதற்கிணங்க மேற்குறித்த தீர்மானம் 60 மேலதிக வாக்குகளால் நிறைவேறியது.



சிலாபம், மானாவரி ஸ்ரீ இராஜராஜேஸ்வரி அம்பாள் சமேத இராமலிங்கசுவாமி தேவஸ்தானத்தின் வருடாந்த இரதோற்சவம் நேற்று(02) ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்றது. இந்நிகழ்வில் நூற்றுக்கணக்கான பக்தர்கள் கலந்துகொண்டனர். (உடப்பு செய்தியாளர்)

# ஆலோசகராக நியமனம்



படப்பிடிப்பு: பேருவளை பீ.எம். முக்தார்

பேருவளை பொலிஸ் நிலைய பொலிஸ் பொதுமக்கள் பிரிவு ஆலோசனை சபையின் ஆலோசகராக எம். இக்பால் சம்சுதீன் களுத்துறை பிராந்திய உதவி பொலிஸ் அத்தியட்சகர் துமிந்த திஸாநாயக்கவினால் நியமிக்கப்பட்டுள்ளார்.

ஆலோசகருக்கான அடையாள அட்டை அண்மையில் பேருவளை ஸாரா வரவேற்பு மண்டபத்தில் நடைபெற்ற வைபவத்தின் போது துமிந்த திசாநாயக்க வழங்கினார். இந்நிகழ்வில் பேருவளை பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி லலித் பத்மகுமாரவும் கலந்துகொண்டார்.


ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
சனிக்கிழமை 2023.07.01
உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk
NLB

மஹஜன சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 5162 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 12,383,775.00
ஆங்கில எழுத்து H — வெற்றி இலக்கங்கள் 7 5 7 8 7 6

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 3404 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 66,904,098.00
ஆங்கில எழுத்து G — வெற்றி இலக்கங்கள் 17 45 46 63

ஜாதிக சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 1617 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.13,149,734.32
வெற்றி இலக்கினம் — வெற்றி இலக்கங்கள் 6 0 1 8 7 8

தன நிதானய — சீட்டிழுப்பு இலக்கம் 1192 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 97,562,007.20
ஆங்கில எழுத்து S — வெற்றி இலக்கங்கள் 16 33 44 71

ராசி சுப பலன் Handahana — சீட்டிழுப்பு இலக்கம் 471 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,500,000.00
வெற்றி இலக்கினம் துலாம் — வெற்றி இலக்கங்கள் 01 06 48 55 — விசேட இலக்கினம் துலாம்

Mega POWER — சீட்டிழுப்பு இலக்கம் 1510 — அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 333,761,762.00
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
ஆங்கில எழுத்து R — சுப்பர் இலக்கம் 19 — வெற்றி இலக்கங்கள் 30 41 50 60

ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
வெள்ளிக்கிழமை 2023.06.30
உத்தியோகபூர்வ முடிவுகள் www.nlb.lk
NLB

மஹஜன சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 5161 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 11,288,032.00
ஆங்கில எழுத்து R — வெற்றி இலக்கங்கள் 5 4 3 5 0 8

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 3403 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 66,715,896.00
ஆங்கில எழுத்து Z — வெற்றி இலக்கங்கள் 21 32 38 70

ஜாதிக சம்பத — சீட்டிழுப்பு இலக்கம் 1616 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.13,082,173.12
வெற்றி இலக்கினம் — வெற்றி இலக்கங்கள் 2 2 6 6 5 7

தன நிதானய — சீட்டிழுப்பு இலக்கம் 1191 — அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 97,562,007.20
ஆங்கில எழுத்து U — வெற்றி இலக்கங்கள் 23 25 34 52

ராசி சுப பலன் Handahana — சீட்டிழுப்பு இலக்கம்: 470
இச்சீட்டிழுப்பில் வெல்லப்பட்டுள்ள மொத்த பரிசுத்தொகை ரூ. 44,064,640.00
வெற்றி இலக்கினம் தனுசு — வெற்றி இலக்கங்கள் 06 35 44 57 — விசேட இலக்கினம் தனுசு
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 2,607,134.36
விசேட சீட்டிழுப்பு — தெலக்ஷபதி அதிர்ஷ்ட இலக்கங்கள்:
1 5 5 6 5 2 3
0 5 0 8 7 6 3 | 1 1 6 0 6 6 9 | 0 3 4 2 2 5 6
1 1 4 8 0 5 2 | 1 2 0 8 0 6 5 | 1 7 5 8 1 7 2
0 4 7 7 8 1 7 | 1 6 3 7 5 9 3 | 1 1 2 5 6 8 6
லக்ஷபதி அதிர்ஷ்ட இலக்கம் 8 3 6 4 8

Mega POWER — சீட்டிழுப்பு இலக்கம் 1509 — அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ. 333,438,950.00
அடுத்த பவர் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
ஆங்கில எழுத்து W — சுப்பர் இலக்கம் 25 — வெற்றி இலக்கங்கள் 19 34 53 67

# சீனாவின் நில ஆக்கிரமிப்பை ஏற்க முடியாது: மக்களை அணிதிரட்டி போராடத் தயங்கோம்!

## ஜனநாயகப் போராளிகள் கட்சி சூளுரை

வடக்கு தமிழர் பகுதிகளில் அபிவிருத்தி என்ற போர்வையில் சீனா நிலங்களை ஆக்கிரமித்தால் மக்களை அணி திரட்டிப் போராட்டம் நடத்த ஒருபோதும் தயங்கமாட்டோம் என ஜனநாயக போராளிகள் கட்சியின் தலைவர் கதிர் தெரிவித்தார்.

யாழில் உள்ள தனியார் விருந்தினர் விடுதியில் இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது ஊடகவியலாளர் ஒருவரால் எழுப்பப்பட்ட கேள்வி ஒன்றுக்கே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், யுத்தத்தின் பின்னர் தமிழர் நிலப் பகுதிகள் பல்வேறு தரப்பினராலும் தொடர்ச்சியாக ஆக்கிரமிக்கப்பட்டு வருகின்றன.

மகாவலி என்ற போர்வையில் முல்லைத்தீவு மாவட்டம் ஆக்கிரமிப்புக்குள்ளாகியுள்ள நிலையில், தொல்பொருள் திணைக்களம், வன ஜீவராசிகள் திணைக்களம் என்பன தமிழர் நிலப்பகுதிகளை ஆக்கிரமிக்கும் செயற்பாடுகளில் ஈடுபட்டு வருகின்றன.

இவ்வாறான நிலையில், வவுனியா மாவட்டத்தில் சீனாவின் ஆதரவோடு தமிழர்களின் பூர்வீக நிலங்களைக் கையகப்படுத்தி சீனித் தொழிற்சாலை அமைக்கும் செயற்பாடுகளும் இடம்பெற்று வருவதாக அறியக்கிடைக்கிறது .

எமது பாரம்பரிய நிலங்களை வெளிநாடுகளுக்கோ அல்லது வெளிநாட்டு



நிறுவனங்களுக்கோ தாரை வார்க்க அனுமதிக்க முடியாது.

வவுனியா சீனித் தொழிற்சாலை தொடர்பில் தமிழ் அரசியல்வாதிகள் பலர் மௌனம் காத்து வருகின்ற நிலையில், நாம் பொறுமை காக்க மாட்டோம்.

குறித்த சீனித் தொழிற்சாலை அமைப்பதற்கான காணிகளை வழங்குவதற்கான ஏற்பாடுகள் அரச உயர் மட்டங்களில் ஏற்கனவே பேசப்பட்டு விட்டது.

ஆகவே, சீனித் தொழிற்சாலைக்கான காணிகளை வழங்குவதற்கான உரிய வர்த்தமானி அறிவித்தல் வெளியிடும் வரை காத்திருக்கிறோம். வெளியிடப்பட்டதும் மக்களை அணி திரட்டி போராடுவோம் என அவர் மேலும் தெரிவித்தார்.

வடக்கு செய்திகள்
thamilannorth@gmail.com

# ஒரு கோடி ரூபாவுக்கும் அதிகமான பெறுமதியுடைய கேரள கஞ்சா பொதிகளுடன் மன்னாரில் இருவர் கைது

மன்னார் நகர் நிருபர்


மாந்தை மேற்கு பிரதேச செயலாளர் பிரிவிலுள்ள பள்ளமடு வீதியில் வைத்து நேற்றுமுன்தினம் (1) சனிக்கிழமை மாலை 85 கிலோ கேரள கஞ்சா பொதிகளுடன் இருவர் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

மன்னார் மாவட்ட குற்றப் புலனாய்வுப் பிரிவு பொலிஸாருக்கு கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலைத் தொடர்ந்து அப்பகுதிக்குவிரைந்து சென்ற போது வாகனமொன்றில் கொண்டு செல்லப்பட்ட சுமார் ஒரு கோடி ரூபாவுக்கும் அதிகமான பெறுமதியுடைய 85 கிலோ கிராம் கேரள கஞ்சா மீட்கப்பட்டதுடன் இருவர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவர்கள் 35 வயதுடைய மன்னார், பேசாலை மற்றும் முல்லைத்தீவு ,புதுக்குடியிருப்பு பகுதிகளைச் சேர்ந்தவர்கள் எனத் தெரியவந்துள்ளது.

மேலும் இருவர் தப்பிச் சென்றுள்ள நிலையில், அவர்கள் பயன்படுத்திய இரண்டு மோட்டார் சைக்கிள்களும் மீட்கப்பட்டுள்ளன.

மேலதிக விசாரணைக்காக சந்தேக



நபர்களும்,மீட்கப்பட்ட கஞ்சா பொதிகள், வாகனம்,மோட்டார் சைக்கிள் ஆகியவை மன்னார் பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

மன்னார் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர்.

# வருமானம் குன்றியவர்களுக்கு உதவித்திட்டம் வழங்கிவைப்பு



வழக்கம்பரை பிரதேசத்தில் வசிக்கும் வருமானம் குன்றிய மக்களுக்கு வழக்கம்பரை அம்பாள் ஆலயத்தில், தலா 3,000 ரூபா வீதம் 150 குடும்பங்களுக்கு ரூபா 4.5 இலட்சம் பெறுமதியான உணவுப் பொதிகள் வழங்கி வைக்கப்பட்டன.

சித்தங்கேணி ஆன்மீக அறக்கட்டளையின் தலைவர் திரு ஜனார்த்தனனின் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வை, வழக்கம்பரை அம்பாள் அறக்கட்டளை மற்றும் சங்கரத்தை பத்திரகாளி அம்மன் அறக்கட்டளை ஆகியன இணைந்து ஏற்பாடு செய்தன.

பண்ணாகத்தைச் சேர்ந்த மறைந்த திரு செல்லையா சபாநாயகரை நினைவு கூருமுகமாக, ரொரண்டோவில் வசிக்கும் அவரது குடும்பம் 600 கனேடிய டொலர்களை நன்கொடையாக வழங்கியது.

மேலே குறிப்பிட்டுள்ள நன்கொடையாளர்களுக்கு கூடுதலாக, பின்வருபவர்கள் தங்கள் அன்புக்குரியவர்களுக்கு அஞ்சலி செலுத்தும் வகையில் பின்வரும் தொகைகளை வழங்கினர்.

அமெரிக்காவில் உள்ள திருமதி தனம் அகிலன் - அவரது பெற்றோருக்கு காணிக்கையாக ரூ 30,000, ஜேர்மனியில் உள்ள விசுவலிங்கம் ஸ்ரீதரன் - அவரது பெற்றோருக்கு காணிக்கையாக 34,000, லண்டனில் உள்ள ரவி திருச்செல்வம் தனது பெற்றோருக்கு காணிக்கையாக 40,000 ரூபா, ஜேர்மனியில் உள்ள ஆசைமுத்து சுதாகரன் தனது இரு சகோதரிகள் மற்றும் பெற்றோருக்கு காணிக்கையாக ரூ.50,000, இது தவிர, 1,50,000 ரூபா வழக்கம்பரை அம்பாள் அறக்கட்டளையில் இருந்து பெறப்பட்டது.

# வெங்காயச் செய்கையை மேற்கொள்ள புதிய இயந்திரங்கள் அறிமுகம்





சாவகச்சேரி நிருபர்

உடுவில் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட குப்பிளான் கிராமத்தில் வெங்காயச் செய்கையை மேற்கொள்வதற்கு தொழில்நுட்ப வசதிகளுடன் கூடிய நவீன இயந்திரங்களை அறிமுகம் செய்யும் நிகழ்வு 01/07 சனிக்கிழமை இடம்பெற்றிருந்தது.

இந்நிகழ்வில் பிரதம விருந்தினராக முன்னாள் ஜனாதிபதி மைத்ரிபால சிறிசேன கலந்துகொண்டு வெங்காயத்தை நடுவதற்கான இயந்திரம் மற்றும் அறுவடை செய்த வெங்காயத்தை தூய்மைப்படுத்துவதற்கான இயந்திரம் ஆகியவற்றை இயக்கி அவற்றை அறிமுகம் செய்து வைத்தார்.

அத்துடன், நவீன தொழில்நுட்பத்துடன் கூடிய இயந்திரங்களை உருவாக்கியவர்களும் இதன்போது கௌரவிக்கப்பட்டிருந்தனர். இதன்போது முன்னாள் ஜனாதிபதி மைத்ரிபால கருத்துத் தெரிவிக்கையில், நவீன தொழில்நுட்ப முறைகளைப் பயன்படுத்தி நாம் முன்னேற வேண்டும். அதுவே நாட்டின் வளர்ச்சிக்குத் தேவை.ஆக்கத்திறன் கொண்ட இளைஞர்கள் தமது திறமைகள் ஊடாக நாட்டை முன்னேற்ற வேண்டும். ஆனால், இன்றைய இளைஞர்களோ வெகுவாக நாட்டை விட்டு வெளியேறி வருகின்றனர் என அவர் மேலும் தெரிவித்திருந்தார்.

மேற்படி நிகழ்வில் யாழ். மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன்,முன்னாள் பிரதி அமைச்சரும் பாராளுமன்ற உறுப்பினருமான சாரதி துஷ்மந்த மித்ரபால,கட்சியின் மத்திய குழு உறுப்பினர் பேராசிரியர் சமில லியனகே, மைத்ரிபால சிறிசேனவின் புதல்வர் தஹாம் சிறிசேன, விவசாய அமைப்புகளின் பிரதிநிதிகள் மற்றும் விவசாயிகள் ஆகியோர் கலந்துகொண்டிருந்தனர்.

# தரவையம்பதியில் மஹோற்சவம்

சாவகச்சேரி நிருபர்

தென்மராட்சி-மிருசுவில் கெற்பேலி கிழக்கு தரவையம்பதி ஸ்ரீ வீரபத்திரேஸ்வரர் ஆலயத்தின் 32ஆவது வருட மஹோற்சவப் பெருவிழா இன்று 03/07 திங்கட்கிழமை கொடியேற்றத்துடன் ஆரம்பிக்கவிருப்பதாக ஆலய பிரதம குரு வைரவநாதபரமாச்சாரியார் தெரிவித்துள்ளார்.

அந்தவகையில் 12/07 புதன்கிழமை தேர்த்திருவிழாவும்,13/07 வியாழக்கிழமை கடல் தீர்த்தத் திருவிழாவும்,14/07 வெள்ளிக்கிழமை பட்டுத்தீர்த்தத் திருவிழாவும் இடம்பெறவுள்ளன.

தேர்த் திருவிழா தினத்தன்று வாகன ஒழுங்குகள் செய்யப்பட்டிருப்பதாகவும் அடியவர்களுக்கு அறியத்தரப்பட்டுள்ளது.

# புதையல் தோண்டிய 17 பேர் இரத்தினபுரியில் கைது

ஏ.ஏ.எம்.பாயிஸ்

பலாங்கொடை சமனல பாதுகாப்பு வனத்தில் சட்டவிரோதமாக புதையல் தோண்டுவதில் ஈடுபட்டிருநத 17 பேர் நேற்று முன்தினம் மாலை பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.பலாங்கொட சமனல பாதுகாப் பு வனத்தின் அத்தனகொல்ல அடர்ந்த காட்டுப் பகுதியிலேயே இச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

காட்டுப் பகுதியை அண்மித்த கிராம மக்கள் வித்தியாசமான சத்தமொன்று கேட்பதாக பொலிஸாருக்கு வழங்கிய தகவலையடுத்து பிரதேச மக்களது ஒத்துழைப்புடன் பொலிஸார் அடர்ந்த காட்டினுள் இவர்களைத் தேடிச்சென்று கைதுசெய்துள்ளனர்.

கைதுசெய்யப்பட்டவர்கள் பதுளை வெலிகபொல, அப்புத்தளை, பெல்மதுளை பிரதேசங்களைச் சேர்ந்த 26 முதல் 55 வயதுகளை உடையவர்கள் எனவும் இவர்களிடமிருந்து ஜெனரேட்டர், உலருணவுப் பொருட்கள், வயர்வகைகள் உட்பட மேலும் சில அதி தொழில்நுட்ப உபகரணங்களும் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். விசாரணையின் பின்னர் இவர்களை நீதிமன்றத்தில் ஆஜர்ப்படுத்தவுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

# தெல்தெனிய வாகனக்கொள்ளையின் சந்தேக நபர்களுக்கு தடுப்புக்காவல்

கண்டி நிருபர்

கண்டி மாவட்டத்தில் தெல்தெனிய, கெங்கல்ல பிரதேசத்தில் வாகன முனையமொன்றிலிருந்து சுமார் 8 கோடி ரூபா பெறுமதியான வாகனங்கள் கொள்ளையிடப்பட்ட சம்பவம் தொடர்பாக கைதான சந்தேக நபர் தடுப்புக்காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

மேற்படி சம்பவம் தொடர்பாக முன்னாள் மத்திய மாகாண சபை அங்கத்தவர் ஒருவரின் மகன் உட்பட நான்கு சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டு தெல்தெனிய நீதவான் முன் ஆஜர்ப்படுத்தப்பட்டனர்.

ரூ.75 மில்லியனுக்கும் அதிகமான பெறுமதி கொண்ட மூன்று டிஃபென்டர் ஜீப்கள் மற்றும் கே.டி.எச். வான் ஒன்றும் கெங்கல்ல பகுதியில் உள்ள கார் விற்பனை நிலையத்தில் திருடப்பட்டிருந்த நிலையில், அவற்றை மீட்டெடுத்துள்ள பொலிஸார், கொள்ளைச்சம்பவத்துடன் தொடர்புடைய 4 பேரைக் கைதுசெய்தனர்.

கைதுசெய்யப்பட்டவர்களில் முன்னாள் மத்திய மாகாணசபை உறுப்பினரின் மகனும் உள்ளடங்குகிறார்.

விற்பனை நிலையத்தல் இரண்டு ஊழியர்களைக் கட்டிப்போட்டு புதன்கிழமை (20) வாகனங்கள் திருடப்பட்டன. உதிரிப்பாகங்களை மாற்றியமைத்து விற்பனை செய்யும் நோக்கில் வாகனங்கள் திருடப்பட்டுள்ளன.

தெல்தெனிய, சிறிமல்வத்தையைச் சேர்ந்த கராஜ் உரிமையாளர் மற்றும் முன்னாள் மத்திய மாகாண சபை உறுப்பினரின் மகன் உட்பட நால்வரை பொலிஸார் கைதுசெய்ததுடன், திருடப்பட்ட நான்கு வாகனங்களையும் கண்டுபிடித்துள்ளனர்.

வத்தேகம பொலிஸ் பிரிவிற்குட்பட்ட பல்லேகம டோரகமுவ பிரதேசத்தில் உள்ள முன்னாள் மாகாணசபை உறுப்பினரின் மகனின் வீட்டின் பின்புறம் உள்ள கராஜ் ஒன்றில் மறைத்துவைக்கப்பட்டிருந்த இரண்டு திருடப்பட்ட டிஃபென்டர்களும் கண்டுபிடிக்கப்பட்டுள்ளன.

கடந்த 29 ஆம் திகதி காலை 8.30 மணியளவில் குறித்த இடத்தை பொலிஸார் சோதனையிட்டுள்ளனர். அந்த நேரத்தில், டிஃபென்டர்களின் பாகங்கள் அகற்றப்பட்டு அவற்றின் வடிவங்கள் மாற்றப்பட்டிருந்தன. ஒருவரின் டிஃபென்டர் மேற்கூரை வெட்டப்பட்டு மாற்றப்பட்டுள்ளது.

இந்த இரண்டு டிஃபென்டர்களும் வேறு வாகனங்களைப் பயன்படுத்தி இழுத்துச் செல்லப்பட்டுள்ளதாக விசாரணைகளிலிருந்து தெரியவந்துள்ளது. அந்த இரண்டு வாகனங்களையும் பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

இது தவிர, நிட்டம்புவ பொலிஸ் பிரிவிற்குட்பட்ட வத்துபிட்டிவல பகுதியில் மற்றொரு டிஃபென்டர் கண்டுபிடிக்கப்பட்டது. அது அவசர வாகனத்தில் ஏற்றப்பட்டு கொண்டு செல்லப்பட்டது.

அருப்பொல வாகொல்ல கண்டியில் கொள்ளையர்களால் கைவிடப்பட்ட நிலையில் கே.டி.எச் வேன் கண்டுபிடிக்கப்பட்டது.

கைதுசெய்யப்பட்ட சந்தேகநபர்கள் வத்தேகம மற்றும் தெல்தெனிய பிரதேசங்களைச் சேர்ந்தவர்கள் எனத் தெரியவருகிறது.

# சி.சி.டிவி திருடர்களை காட்டிக் கொடுத்தது சிசிடிவி

ஏ.ஏ.எம்.பாயிஸ்

பலாங்கொடை பிரதேச தேயிலைத் தோட்ட கட்டடம் ஒன்றில் பொருத்தப்பட்டிருந்த சிசிடிவி கெமராக்களைத் திருடிய சந்தேக நபர்கள் இருவரை போலிஸார் நேற்றுமுன்தினம் கைதுசெய்துள்ளனர்.

பலாங்கொடை எல்லவத்த பிரதேச தேயிலைத் தோட்டக் கட்டடத்தில் பொருத்தப்பட்டிருந்த சிசிடிவி கெமராக்கள் திருடப்பட்டுள்ளமை தொடர்பில் பலாங்கொடை பொலிஸ் நிலையத்தில் தோட்ட நிர்வாகம் முறைப்பாடு செய்திருந்தது.இம்முறைப்பாட்டுக்கிணங்க இங்கு பொருத்தப்பட்டிருந்த சிசிடிவி கெமராவின் தொழில்நுட்பக் கருவி சோதனை செய்யப்பட்டபோது அதில் கெமராவை திருடிச் செல்பவர்களின் வீடியோ படம் பதிவாகியுள்ளது.

விசாரணைகளை நடத்திய பொலிஸார் பலாங்கொடை வெலேகும்புர பிரதேசத்தைச் சேர்ந்த இருவரே இவற்றைத் திருடியுள்ளதாக உறுதிப்படுத்திக் கொண்டதையடுத்து இவர்கள் சிசிடிவி கெமராக்களை பொலிஸ் நிலையத்தில் ஒப்படைக்கச் சென்ற வேளையில் இருவரும் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.இதனையடுத்து பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

# மரத்தின்மீது மோதிய கார்: பதுளை விபத்தில் ஒருவர் பலி!

பதுளை-பண்டாரவளை பிரதான வீதியின் ஹாலிஎல கோயிலுக்கருகில் நேற்று (2) காலை கார் ஒன்று வீதியை விட்டு விலகி மரத்தில் மோதியதில் ஒருவர் உயிரிழந்தார். இரண்டு சிறுவர்கள் உட்பட நால்வர் பலத்த காயமடைந்து பதுளை பொதுவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக ஹாலிஎல பொலிஸார் தெரிவித்தனர்.

பண்டாரவளை பிரதேசத்தில் உள்ள தனியார் பாடசாலை ஒன்றில் பணிபுரியும் ரொஷான் சரீன் ஜேக்கப் (வயது 52) என்ற நபர் எல்ல - பண்டாரவளை வீதியில் வசித்துவருவதுடன் எல்ல நகரில் சுற்றுலா விடுதியொன்றையும் நடத்தி வருவதாகப் பொலிஸார் தெரிவித்தனர். அவரே விபத்தில் உயிரிழந்தார் எனத் தெரியவருகிறது.

அவரது மனைவி ஆபத்தான நிலையில் பதுளை பொது வைத்தியசாலையின் தீவிர சிகிச்சைப்பிரிவில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பதுளை பொது வைத்தியசாலையின் சிரேஷ்ட வைத்திய அதிகாரி டாக்டர் பாலித ராஜபக்ஷ தெரிவித்தார்.



எல்ல பண்டாரவளை வீதியில் சுற்றுலா ஹோட்டல் ஒன்றை நடத்தி வரும் உயிரிழந்தவர் மற்றும் அவரது மனைவி நேற்றுக் காலை பதுளை நகரில் உள்ள தேவாலயம் ஒன்றில் காலை ஆராதனைக்குச் செல்வதற்காக காரில் சென்று கொண்டிருந்தனர். செல்லும் வழியில் தெமோதர எத்துல்கந்த பிரதேசத்தில் வசிக்கும் தாயார் மற்றும் பிள்ளைகளையும் காரில் ஏற்றி இவர்கள் அழைத்துச் சென்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது..

# வசதி குறைந்த பல்கலைக்கழக மாணவர்களுக்கு உதவித் திட்டம்

கண்டி நிருபர்

இலங்கையில் இயங்கும் அப்துல்கலாம் ஞாபகார்த்த உலகளாவிய அறக்கட்டளையானது வசதி குறைந்த,தெரிவுசெய்யப்பட்ட இலங்கைப் பல்கலைக்கழக மாணவர்கள் சிலருக்கு உதவியளிக்கும் திட்டமொன்றை நடைமுறைப்படுத்தவுள்ளது.

இது தொடர்பான செயற்திட்டமொன்றை மேற்கொள்ள இந்தியாவிலிருந்து மேற்படி அமைப்பின் இரு அங்கத்தவர்கள் இலங்கை வரவுள்ளதாக அப்துல்கலாம் ஞாபகார்த்த உலகளாவிய அறக்கட்டளையின் தலைவர் தேசமாண்ய என் கருணாகரன் தெரிவித்தார்

எம்.ஜி.ஆர். கல்வி ஆய்வு நிறுவனத்தில் பட்டப்படிப்பை மேற்கொண்டுவரும் புதுக்கோட்டை எம்.ஜனார்த்தனன் மற்றும் தர்மபுரி எஸ். தினேஸ் ஆகியோர் இதற்காக சமூகம் தரவுள்ளதாகவும் அவர் கண்டியில் வைத்துத் தெரிவித்தார்.

இவர்கள் அப்துல்கலாம் ஞாபகார்த்த உலகளாவிய அறக்கட்டளை மற்றும் இந்திய இளைஞர் அமைப்பு என்பவற்றின் சமாதானத் தூதுவர்களாக உள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார். -

மலையக செய்திகள்
thamilanmalayagam@gmail.com

# ஹந்தானை மலையேறிய பல்கலைக்கழக மாணவர்கள் 42 பேருக்கு குளவிக்கொட்டு

கண்டி நிருபர்

கண்டி - ஹந்தானை மலை ஏறச் சென்றிருந்த பல்கலைக்கழக மாணவ - மாணவிகள் 42 பேர் கருங் குளவிக்கொட்டுக்கு உள்ளாகி கண்டி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த மாணவ -மாணவிகளும் மற்றும் மீபேயிலுள்ள கல்வி நிறுவனமொன்றைச்சேர்ந்த மாணவ - மாணவிகளுமே இவ்வாறு குளவிக்கொட்டுக்கு உள்ளாகி கண்டி தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

இவர்களில் பெண் மாணவிகள் 15 பேரும் ஆண் மாணவர்கள் 27 பேரும் உள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர். ஹந்தானை மலை ஏறுவதற்காகச் சென்றிருந்த 275 மாணவ - மாணவிகளில் ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த 64 மாணவ - மாணவிகள் இதில் கலந்து கொண்டுள்ளனர்,

பொலிஸ் அவசர தொலைபேசி அழைப்பிற்கு கிடைக்கப்பெற்ற தகவலின் படி ஸ்தலத்திற்கு விரைந்த சுவசரிய அம்பியூலன்ஸ் சேவை ஊடாக பாதிக்கப்பட்டவர்களை கண்டி தேசிய வைத்திய சாலைக்கு எடுத்துச் சென்றுள்ளனர். இதில் 42 மாணவ - மாணவிகள் வைத்திய சாலைக்கு கொண்டுசெல்லப்பட்டுள்ளனர். ஏனைய மாணவ - மாணவிகள் அவர்கள் சென்றிருந்த வாகனங்களிலேயே சொந்த இடங்களுக்குத் திருப்பி அனுப்பப்பட்டுள்ளனர். சம்பவம் தொடர்பில் பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டுள்ளனர்.

# ஆடை உற்பத்தி - ஏற்றுமதி - தொழிற்றுறை பிரச்சினைகளில் தலையிடப்படும்

## துறைசார் மேற்பார்வைக் குழு உறுதி

ஆடை உற்பத்தி மற்றும் ஏற்றுமதி தொழிற்றுறைப் பிரச்சினைகளில் தலையிடுவதாக துறைசார் மேற்பார்வைக் குழு உறுதியளித்துள்ளது.

பொருளாதார நெருக்கடியின் தாக்கத்தைத் தணித்தல் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழு, பாராளுமன்ற உறுப்பினர் காமினி வலேபொட தலைமையில் கடந்த 22 ஆம் திகதி பாராளுமன்றத்தில் கூடியது. அதன்போதே மேற்கண்டவாறு உறுதியளித்தது.

இந்நிலையில், இலங்கைக்கு அதிகளவிலான அந்நிய செலாவணியை ஈட்டித்தரும் ஆடை உற்பத்தி மற்றும் ஏற்றுமதித் தொழிற்றுறையைப் பிரதிநிதித்துவப்படுத்தும் அமைப்பான ஒன்றிணைந்த ஆடை உற்பத்தியாளர் ஒன்றியம் பொருளாதார நெருக்கடியின் தாக்கத்தைத் தணித்தல் பற்றிய துறைசார் மேற்பார்வைக் குழு முன்னிலையில் அழைக்கப்பட்டிருந்தது.

இதன்போது ஆடை உற்பத்தித் தொழிற்றுறையில் பிரச்சினைகள் மற்றும் எதிர்கால நடவடிக்கைகள் தொடர்பில் விரிவாகக் கலந்துரையாடப்பட்டது.

பொருளாதார நெருக்கடியின் தாக்கத்தினால் இலங்கையில் அமைக்கப்பட்டிருந்த பல ஆடைத் தொழிற்சாலைகள் மூடப்பட்டு வெளிநாடுகளில் கைத்தொழில்களை ஸ்தாபித்து வருவதாகவும் தற்போது இயங்கிவரும் தொழிற்சாலைகள் மொத்த உற்பத்தியில் 25 வீதத்துக்கும் குறைவாகவே உற்பத்தி செய்வதாகவும் ஆடை உற்பத்தியாளர்கள் இங்கு தெரிவித்தனர். அத்துடன், மூலப்பொருளுக்கான வரிகள், மின்சாரக் கட்டணம் மற்றும் செலவுகள் அதிகரிப்பு காரணமாக சர்வதேச சந்தையில் அவர்களின் போட்டித்தன்மை வெகுவாகக் குறைந்துள்ளதுடன், புதிய கட்டளைகளை (orders) பெறுவதும் மிகக் கடுமையாகக் குறைந்துள்ளதாகவும் அவர்கள் சுட்டிக்காட்டினர்.

இத்துறையின் மூலம் நாட்டுக்கு சுமார் 3 1/2 இலட்சம் நேரடி வேலை வாய்ப்புகளும் 3 இலட்சம் மறைமுக வேலை வாய்ப்புகளும் வழங்கப்பட்டுள்ளதாகவும் இதன்போது சுட்டிக்காட்டப்பட்டது.

மேலும் பல பில்லியன் பெறுமதியான பெறுமதி சேர் (VAT) வரியை திருப்பி செலுத்தாததால் தாம் எதிர்கொண்டுள்ள சிரமங்கள் குறித்தும் ஆடை உற்பத்தியாளர்கள் இக்குழுவிடம் தகவல் முன்வைத்தனர்.

மின்கட்டணம் உள்ளிட்ட உற்பத்திச் செலவு அதிகரிப்பு, புதிய வரி விதிப்பு, உலகச் சந்தை வீழ்ச்சி, புதிய கட்டளைகளை (orders) பெறுவதில் வீழ்ச்சி போன்ற அச்சுறுத்தல்களின் முன்னிலையில் SVAT முறையை அகற்றினால் ஒட்டுமொத்த ஆடைத் தொழிலும் வீழ்ச்சியடையும் வாய்ப்புகள் இருப்பதாக இங்கு சுட்டிக்காட்டப்பட்டது.

அதற்கமைய, SVAT முறையை அகற்றுவதற்கு முன்னர், தொழிற்றுறையின் பாதுகாப்புக்காக பொருத்தமான அமைப்பை அறிமுகப்படுத்துவதற்கு முன்னிற்பதாக குழு உறுதியளித்தது. தன்னியக்க VAT மீளளிப்பு முறை நடைமுறைப்படுத்தப்படும் வரை உள்ளீட்டு வரியை நிர்வகிப்பதற்கான முறைமையின் அவசியத்தை குழு ஏற்றுக்கொண்டதுடன், இந்தப் பரிந்துரைகள் அடங்கிய அறிக்கையை பாராளுமன்றத்துக்கும் அரசாங்கத்துக்கும் விரைவில் சமர்ப்பிக்க குழு செயற்படும் எனத் தலைவர் காமினி வலேபொட உறுதியளித்தார்.

அந்நிய செலாவணியை ரூபாவாக மாற்றுவதில் உள்ள சிக்கல்கள் மற்றும் பிராந்தியத்தில் தற்போதுள்ள சட்டங்கள் குறித்து கலந்துரையாடப்பட்டதுடன், பிராந்தியத்தில் உள்ள பிற நாடுகளின் ஏற்றுமதி வருமானத்தை உள்ளூர் நாணயமாக மாற்றுவது தொடர்பான தற்போதைய சட்டங்கள் மற்றும் கொள்கைகள் குறித்து குழுவிடம் அறிக்கை அளிக்குமாறு குழுவின் தலைவர் கேட்டுக்கொண்டார்.

மேற்குறிப்பிட்ட பிரேரணையை அரசாங்கத்திடம் சமர்ப்பிப்பதை விரைவுபடுத்துவதற்காக JAFF நிறுவனத்தினால் துறைசார் மேற்பார்வைக் குழுவுக்கு எதிர்காலத்தில் வழங்கப்பட வேண்டிய ஆதரவு தொடர்பிலும் கலந்துரையாடப்பட்டது. அதுமட்டுமன்றி, பொதுவாக தொழிற்றுறையினர் மற்றும் முதலீட்டுச் சபையின் பகுதிகளில் உள்ள தொழிற்சாலைகள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள் குறித்தும் இங்கு கவனம் செலுத்தப்பட்டது.

இக்கலந்துரையாடலில் சஹான் பிரதீப் விதான, டபிள்யூ. எச். எம். தர்மசேன, பேராசிரியர் சரித ஹேரத், அசங்க நவரத்ன, உபுல் மகேந்திர ராஜபக்ஷ, சுதத் மஞ்சுள, மொஹமட் முஸம்மில், கருணாதாச கொடித்துவக்கு ஆகியோர் கலந்துகொண்டனர்.



இலங்கைக்கான கொரியக் குடியரசின் தூதுவராக திருமதி லீ மியோன் நியமிக்கப்பட்டுள்ளார். அவர் தனது தகுதிச் சான்றுகளை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கண்டியிலுள்ள ஜனாதிபதி மாளிகையில் ஜூன் 30ஆம் திகதி காலை கையளித்தார்.



இலங்கைக்கான கிரேக்க ஹெலெனிக் குடியரசின் தூதுவராக டிமிட்ரியோஸ் ஐயோனோவ் நியமிக்கப்பட்டுள்ளார். அவர் தனது தகுதிச் சான்றுகளை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் கண்டியிலுள்ள ஜனாதிபதி மாளிகையில் வைத்து ஜூன் 30ஆம் திகதி காலை கையளித்தார்.







சர்வதேச சமாதானப் பேரவையின் மாநாடு இந்தியாவில் மத்திய பிரதேசத்தில் அண்மையில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் சிறப்பு விருந்தினராக இலங்கையின் நீதி அமைச்சர் விஜேதாச ராஜபக்ஷ கலந்துகொண்டார். அவர் இந்தியப் பிரதிநிதிகளினால் வரவேற்கப்பட்டதுடன், இந்தியாவின் சாஞ்சியிலுள்ள இலங்கை மஹாபோதி சங்கத்தில் நடைபெற்ற நிகழ்விலும் கலந்துகொண்டார்.





புளிச்சாக்குளம் ஸ்ரீ வைரவர் ஆலயத்தில் புனரமைப்புப் பணிகள் நிறைவடைந்து எண்ணெய்க்காப்பு சாத்தும் நிகழ்வு கடந்த 01,02ஆம் திகதிகளில் நடைபெற்றது. மகா கும்பாபிஷேகம் இன்று திங்கட்கிழமை (03)நடைபெறவுள்ளது.

படப்பிடிப்பு: உடப்பு செய்தியாளர்

# மன்னார் மடு திருத்தலத்தின் திருவிழா; ஆயிரக்கணக்கான பக்தர்கள் பங்கேற்பு











மன்னார் நகர் நிருபர்

மன்னார் மருதமடு திருத்தலத்தின் ஆடி மாத திருவிழா திருப்பலி நேற்று(2) ஞாயிற்றுக்கிழமை காலை 6.15 மணியளவில் இடம்பெற்றது. இதன்போது மன்னார் மறைமாவட்ட ஆயர் இம்மானுவேல் பெர்னாண்டோ ஆண்டகை தலைமையில் கொழும்பு உயர் மறை மாவட்டத்தின் துணை ஆயர் அருட்திரு அன்ரன் ரஞ்சித் ஆண்டகை இணைந்து திருவிழா கூட்டுத்திருப்பலியை ஒப்புக்கொடுத்தனர்.

கடந்த ஜூன் மாதம் 23ஆம் திகதி கொடியேற்றத்தைத் தொடர்ந்து நவநாள் ஆராதனை திருப்பலிகள் இடம்பெற்று நேற்றுமுன்தினம் சனிக்கிழமை (01) மாலை வேஸ்பர்ஸ் ஆராதனை இடம்பெற்றது.

இந்நிலையில், நேற்று ஞாயிற்றுக்கிழமை (02) காலை 6.15 மணியளவில் இடம்பெற்ற திருவிழாவில் மடு பரிபாலகர் அருட்தந்தை பெப்பி சோசை அடிகளார், மன்னார் மறைமாவட்ட குரு முதல்வர் அருட்தந்தை கிறிஸ்து நாயகம் அடிகளார், குருக்கள் இணைந்து திருவிழா கூட்டுத்திருப்பலியை தமிழ், சிங்கள மொழிகளில் ஒப்புக்கொடுத்தனர்.

திருவிழா திருப்பலியைத் தொடர்ந்து பக்தர்களுக்கு மடு அன்னையின் ஆசீர் வழங்கப்பட்டது.

திருவிழா திருப்பலியில் அருட்தந்தையர்கள், அருட் சகோதரர்கள், திணைக்களத் தலைவர்கள் உள்ளடங்கலாக சுமார் ஆயிரக்கணக்கான பக்தர்கள் கலந்து கொண்டனர்.

1924 ஆம் ஆண்டு மருதமடு திருப்பதியிலே பல ஆயர்கள் சூழ மருதமடு அன்னைக்கு முடிசூட்டு விழா இடம்பெற்றது. குறித்த முடிசூட்டு விழாவின் நூற்றாண்டு நிறைவு பெருவிழாவாக எதிர்வரும் 2024 ஆம் ஆண்டு ஜூலை மாதம் கொண்டாடப்படவுள்ளது.

அதனை முன்னிட்டு நேற்று இடம்பெற்ற திருவிழாவின் போது மன்னார் மறைமாவட்ட ஆயர் யூபிலி நூற்றாண்டு விழாவை பிரகடனம் செய்து வைத்தார்.

அதனைத் தொடர்ந்து மருதமடு அன்னையின் திருச் சொரூபத்தின் பின் விசேட விதமாக யூபிலி ஆண்டை பிரகடனப் படுத்துவதோடு,அதனை வெளிப்படுத்தும் முகமாக வருடம் முழுவதும் பறக்கவிடப்படுகின்ற யூபிலி கொடி மருதமடு ஆலய முன் மண்டபத்தில் ஏற்றி வைக்கப்பட்டது.

# மலேசிய உயர்ஸ்தானிகர்- சந்திரகாந்தன் சந்திப்பு



இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தனுக்கும் இலங்கைக்கான மலேசிய உயர்ஸ்தானிகர் Badli Hisham Adamக்குமிடையேயான சிநேகபூர்வ சந்திப்பொன்று மலேசிய உயர்ஸ்தானிகராலயத்தில் இடம்பெற்றது.

இதன்போது மட்டக்களப்பு, திருகோணமலை மற்றும் அம்பாறை ஆகிய மாவட்டங்களில் சுற்றுலாத் துறையை அபிவிருத்தி செய்தல், மட்டக்களப்பு மாவட்டத்தின் நன்னீர் நீரியல் வள உற்பத்திகளை விஸ்தரித்தல் மற்றும் முதலீடுகள் தொடர்பாக ஆராயப்பட்டது. அதேபோன்று, ஜூலை மாத நடுப்பகுதியில் மலேசிய உயர்ஸ்தானிகர் மட்டக்களப்பு மாவட்டத்துக்கான உத்தியோகபூர்வ களவிஜயத்தை மேற்கொண்டு மாவட்டத்தின் தற்போதைய நிலைமைகள் தொடர்பிலும் முதலீட்டுக்கான வாய்ப்புகள் குறித்தும் ஆராய்வதற்கான ஏற்பாடுகளையும் முன்னெடுத்துள்ளேன் என்றார் சந்திரகாந்தன்.

எமது நாட்டின் தற்போதுள்ள பொருளாதார சூழ்நிலையில் கிழக்கு மாகாணத்துக்கான வெளிநாட்டு முதலீடுகளை அதிகளவு ஈர்த்து மாகாணத்தின் உற்பத்தி மற்றும் வேலைவாய்ப்புகளை அதிகரிக்க பல்வேறு முயற்சிகளை தொடர்ந்து முன்னெடுத்துவருவதாக இராஜாங்க அமைச்சர் சிவநேசதுரை சந்திரகாந்தன் மேலும் தெரிவித்தார்.

# பம்பலப்பிட்டி சென் பீட்டர்ஸ் கல்லூரியின் 100 ஆவது ஆண்டு விழா













அஷ்ரப் ஏ. சமத்

பம்பலப்பிட்டி சென் பீட்டர்ஸ் கல்லூரியின் 100 ஆவது ஆண்டு விழா 30ஆம் திகதி கல்லூரி முன்றலில் அதிபர் அருட் சகோதரர் ரஞ்சித் ரொட்ரிகோ தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை கலந்து கொண்டார்.



இந்நிகழ்வில் கல்லூரியின் பழைய மாணவர்கள், முன்னாள் இந்நாள் ஆசிரியர்கள், மாணவர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர். இதன்போது கர்தினால் மல்கம் ரஞ்சித் ஆண்டகை உரையாற்றியமை குறிப்பிடத்தக்கது.

# குருக்கள்மடம் பாடசாலைக் காணியை விடுவிக்க இராணுவத்தினர் இணக்கம்

## கோவிந்தன் கருணாகரம் எம்.பி. தெரிவிப்பு

களுதாவளை,குருக்கள்மடம் செய்தியாளர்கள்

மட்டக்களப்பு, குருக்கள்மடம் கலைவாணி வித்தியாலய காணி விடுவிப்பு தொடர்பிலான கள விஜயத்தின்போது பாடசாலைக்குரிய காணியை விடுவிப்பதற்கு இராணுவத்தினர் இணக்கம் தெரிவித்துள்ளதாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம் தெரிவித்தார்.

மட்டக்களப்பு குருக்கள்மடம் இராணுவ முகாம் அமைந்திருக்கும் எல்லைக்குள் உள்ள குருக்கள்மடம் கலைவாணி வித்தியாலயத்துக்குச் சொந்தமான காணியை விடுவிப்பது தொடர்பாக ஆராயும் கள விஜயம் சனிக்கிழமை (01) மேற்கொள்ளப்பட்டது.

மட்டக்களப்பு மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தின்போது குருக்கள்மடம் கலைவாணி வித்தியாலயத்துக்குச் சொந்தமான கட்டடங்கள் மற்றும் மைதானத்தில் குருக்கள்மடம் இராணுவ முகாம் அமைந்திருக்கின்றமை தொடர்பில் தெரியப்படுத்தி இராணுவ முகாமை விடுவித்து அக்கட்டடங்கள் மற்றும் மைதானத்தை மீண்டும் பாடசாலைக்கு ஒப்படைப்பது சம்பந்தமாக கருணாகரம் எம்.பியினால் முன்வைக்கப்பட்ட கோரிக்கைக்கமைய கலந்துரையாடப்பட்டதற்கிணங்க, குறித்த இடத்துக்கு கருணாகரம் எம்.பி. உள்ளிட்ட அதிகாரிகள் குழு சென்று சம்பந்தப்பட்ட இராணுவத்தினருடன் கலந்துரையாடி எட்டப்பட்ட தீர்மானங்களை அடுத்த மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தில் சமர்ப்பிக்குமாறு ஆளுநரினால் விடுக்கப்பட்ட அறிவித்தலுக்கமைவாக குருக்கள்மடம் இராணுவமுகாம் அமைந்துள்ள இடத்துக்கு கள விஜயம் மேற்கொள்ளப்பட்டது.

இவ்விஜயத்தில் கிழக்கு மாகாணக் கல்வி அமைச்சின் செயலாளர், மண்முனை தென் எருவில்பற்றுப் பிரதேச செயலாளர், வலயக் கல்விப் பணிப்பாளர், பாடசாலை அதிபர் உள்ளிட்ட குழுவினர் கலந்துகொண்டனர்.

குறித்த இராணுவ முகாமின் பொறுப்பதிகாரி அங்கு பிரசன்னமாகியிருக்கவில்லையாயினும்,



இரண்டாம் நிலை அதிகாரி அங்கிருந்தார். அவருடன் கலந்துரையாடியதற்கமைவாக ஓர் அறிக்கை தயாரிப்பதென முடிவெடுக்கப்பட்டது.

இராணுவம் தற்போது அந்தப் பாடசாலைக் கட்டடங்கள் அடங்கிய 2.9 ஏக்கர் நிலப்பரப்பைப் பாவிப்பதற்கும் மேலதிகமாக அரச காணி 05 ஏக்கரையும் பாவித்துக் கொண்டிருக்கின்றது. எனவே, பாடசாலைக்குரிய கட்டடம் இருக்கும் காணியையும் மைதானத்தையும் விடுத்து ஏனைய 05 ஏக்கரையும் பாவிப்பதற்கு எந்தவித ஆட்சேபனையும் தெரிவிக்கப்படாததையடுத்து, அவர்கள் பாடசாலைக்குரிய காணி மற்றும் கட்டடங்களை விடுவிக்கும்படியாக நடவடிக்கையெடுப்பதாக முடிவெடுக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பில் அடுத்த மாவட்ட அபிவிருத்திக் குழுக் கூட்டத்தின்போது கிழக்கு மாகாணக் கல்வியமைச்சின் செயலாளரினால் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டு காணி விடுவிப்புக்குரிய தீர்மானம் நிறைவேற்றப்படும் நிலைமை ஏற்பட்டுள்ளதென்பது குறிப்பிடத்தக்கது.

கிழக்கு செய்திகள்
easttamilan@gmail.com

# தோப்பூர் பிரதேசத்தில் சிறுபோக நெற்செய்கை வெற்றி

தோப்பூர்

தோப்பூர் கமநலசேவை நிலையத்துக்குட்பட்ட பிரதேசத்தில் இம்முறை மேற்கொள்ளப்பட்ட சிறுபோக நெற்செய்கை வெற்றியடைந்துள்ளதாக விவசாயிகள் மகிழ்ச்சி தெரிவிக்கின்றனர்.

கடந்த அரசாங்கத்தினால் இரசாயன உரம் தடை செய்யப்படுவதற்கு முன்னர் இருந்த நிலையில், இம்முறை நெற்செய்கை அமைந்துள்ளதாகவும் கடந்த நான்கு போகத்துக்கு மேற்பட்ட போகங்கள் இரசாயன உரம் இன்மையால் நெற்செய்கை பல பாதிப்புக்குள்ளாகி விளைச்சல் மிகவும் குறைவாக கிடைக்கப்பெற்றமையால் விவசாயிகள் நட்டத்தையே எதி ர்நோக்க நேரிட்டமை குறிப்பிடத்தக்கதாகும்.

இம்முறை நெற்செய்கைக்குத் தேவையான அடிக்கட்டுப் பசளை, யூரியா மற்றும் எம்.ஓ.பீ. உரம் என்பன அரசாங்கத்தினாலும் தனியார் சந்தையிலும் பெறக்கூடிய நிலை காணப்பட்டமையினால் நெற்செய்கையில் அதிக விளைச்சல் கிடைக்கும் என எதிர்பார்ப்பதாகவும் விவசாயிகள் மகிழ்ச்சி தெரிவிக்கின்றனர்.

இம்முறை போதிய உரவகைகளையும் கிருமிநாசினி மற்றும் களை நாசினிகளையும் பெற்றுத்தந்த அரசாங்கத்துக்கு தோப்பூர் பிரதேச விவசாயிகள் நன்றி தெரிவிக்கின்றமை குறிப்பிடத்தக்கதாகும்.

# யார் பொறுப்பு?

பாண்டிருப்பு செய்தியாளர்

கிழக்கில் பயணிகள் தங்கும் பல பஸ் தரிப்பிடங்கள் மேற்கூரையின்றி சேதமடைந்த நிலையில் காட்சியளிக்கின்றன. இதனால் பஸ்ஸுக்காக காத்திருக்கும் பயணிகள்



மழை, வெயில் காரணமாக பல்வேறு சிரமங்களுக்குள்ளாகி வருகின்றனர்.

மட்டக்களப்பு மாவட்டத்தில் காத்தான்குடி பொலிஸ் நிலையத்துக்கருகிலுள்ள பயணிகள் தரிப்பிடம், ஆரையம்பதி கோவில்குளம் தரிப்பிடம், செட்டிபாளையம் தரிப்பிடம் உள்ளிட்ட பல இடங்களில் அமைந்துள்ள பயணிகள் தரிப்பிடங்களே இவ்வாறு மேற்கூரையின்றி சேதமடைந்துள்ளதுடன், அதிலுள்ள இருக்கைகளும் பழுதடைந்துள்ளன.

இதனால் பயணிகள் கடும் மழை, கடும் உஷ்ணம் காரணமாக இளைப்பாறிச் செல்வதற்கு வருகைதருகின்ற போது பல்வேறு சிரமங்களுக்குள்ளாகின்றனர்.

இவ்வாறான பயணிகள் தரிப்பிடங்களை மீளப் புனரமைத்து வழங்குவது யாருடைய பொறுப்பு, மக்களுடைய வரிப்பணத்தில் சம்பளம்பெறும் இப்பிரதேச அரசியல் மற்றும் பொறுப்பு வாய்ந்த அதிகாரிகள் ஏன் அக்கறை செலுத்தாதுள்ளனர் என பயணிகள் கேள்வியெழுப்புகின்றனர்.

பிரதான வீதிகளில் மிக நீண்ட நேரம் காத்திருந்து போக்குவரத்தை மேற்கொள்ளும் மக்களின் நிலையறிந்து இங்கு மிக நீண்டகாலமாக சேதமடைந்துள்ள பயணிகள் தரிப்பிடங்களை மீளப் புனரமைத்துத் தருமாறு பொதுமக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

# அபிவிருத்தி நடவடிக்கைகளை பார்வையிட பொத்துவில் வைத்தியசாலை உத்தியோகத்தர்கள் அம்பாறை பொது வைத்தியசாலைக்கு விஜயம்

பொத்துவில் செய்தியாளர்

அம்பாறை மாவட்ட பொது வைத்தியசாலையில் முன்னெடுக்கப்பட்டு வரும் பணிகள் மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகளைப் பார்வையிடும் பொருட்டு, பொத்துவில் ஆதாரவைத்தியசாலை உத்தியோகத்தர்கள், ஊழியர்கள் அடங்கிய குழுவினர் அண்மையில் அவ்வைத்தியசாலைக்கு கள விஜயம் ஒன்றை மேற்கொண்டனர்.

பொத்துவில் ஆதார வைத்தியசாலையின் தாதிய பரிபாலகர், விடுதி முகாமையாளர், தாதியர்கள், உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள் என பலர் இந்தக் குழுவில் உள்ளடங்கியிருந்தனர். பொத்துவில் ஆதார வைத்தியசாலையின் வைத்திய அத்தியட்சகரும் அம்பாறை மாவட்ட பொது வைத்தியசாலையின் பணிப்பாளருமான டொக்டர் பீ.கார்த்திகேயன் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிமனையுடன் இணைந்து குறித்த கள விஜயத்தை ஒழுங்கு செய்திருந்தார்.

அம்பாறை வைத்தியசாலைக்கு விஜயம் செய்த குறித்த குழுவினர் அங்குள்ள விடுதிகள் மற்றும் ஏனைய பிரிவுகளுக்கும் சென்று அங்கு முன்னெடுக்கப்படும் செயற்பாடுகள் மற்றும் பணிகளையும் பார்வையிட்டனர். அதனைத்தொடர்ந்து நோயாளர்களுக்கு வழங்கப்படும் உணவு மற்றும் சமையலறை உள்ளிட்ட பல்வேறு பராமரிப்பு பிரிவுகளையும் அவர்கள் பார்வையிட்டனர்.



இதன்போது அம்பாறை மாவட்ட பொது வைத்தியசாலையின் திட்டமிடல் பொறுப்பு வைத்திய அதிகாரி டொக்டர் தயால் நிதாஷ மற்றும் நிர்வாக உத்தியோகத்தர் சமிந்த ஹேரத் ஆகியோர் அம்பாறை வைத்திய சாலையில் முன்னெடுக்கப்படும் பணிகள், செயற்பாடுகள் குறித்து மேற்படி குழுவினருக்கு விளக்கமளித்தனர்.

கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பிரதிப் பணிப்பாளர் டொக்டர் எம்.பி.ஏ.வாஜித், பணிப்பாளர் டொக்டர் பீ.கார்த்திகேயன் ஆகியோரும் இந்நிகழ்வில் கலந்துகொண்டிருந்த அதேவேளை, பொத்துவில் ஆதார வைத்தியசாலையில் முன்னெடுக்கப்படும் அபிவிருத்திப் பணிகள் மற்றும் சேவைகளை மேம்படுத்துவதே இக்களவிஜயத்தின் பிரதான நோக்கமாக அமைந்திருந்தமை குறிப்பிடத்தக்கது.



வந்தாறுமூலை அருள்மிகு பூதேவி, பூமிதேவி சமேத ஸ்ரீமகாவிஷ்ணு ஆலயத் தேரோட்டம் ஞாயிற்றுக்கிழமை(02) பக்திபூர்வமாக இடம்பெற்றது. ஆலய மஹோற்சவம் கடந்த 21ஆம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி இன்று திங்கட்கிழமை (03) இடம்பெறுகின்ற தீர்த்தோற்சவத்துடன் நிறைவுபெறவுள்ளது.

**படப்பிடிப்பு:** *கல்லடி செய்தியாளர்*

# சமூக நலன்புரித் திட்டத்தில் மேன்முறையீடுகளை துரிதப்படுத்தி அனைவரையும் உள்வாங்குக!

## ஹரீஸ் எம்.பி. சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்குப் பணிப்புரை



நாவிதன்வெளி செய்தியாளர்

சமூக நலன்புரி (அஸ்வெசும) நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் விண்ணப்பித்து தெரிவு செய்யப்படாமல் பட்டியலில் பெயர் வராத பயனாளிகளின் மேன்முறையீடுகளைத் துரிதப்படுத்தி அனைத்து பயனாளிகளையும் உள்ளீடு செய்யுமாறு கல்முனை தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் எச்.எம்.எம்.ஹரீஸ் கல்முனை பிரதேச செயலாளர் உட்பட சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பணிப்புரை வழங்கினார்.

இது குறித்த முக்கிய கலந்துரையாடல் வெள்ளிக்கிழமை(30) பிற்பகல் 2.30 மணியளவில் பிரதேச செயலகத்தில் பிரதேச செயலாளர் ஜே.லியாகத் அலி தலைமையில் இடம்பெற்றது.

இக் கலந்துரையாடலில் உதவித் திட்டமிடல் பணிப்பாளர் எம்.ஜௌபர், சமுர்த்தி தலைமைப் பீட முகாமையாளர் ஏ.ஆர்.சாலீஹ், பிரதம முகாமைத்துவ சேவைகள் உத்தியோகத்தர் ஏ.எஸ்.எம்.முஜாஹீத், சமூக சேவைகள் உத்தியோகத்தர் எம்.ஜீசான், சமுர்த்தி சமூக நலனோம்பல் திட்டம் முகாமையாளர் என்.எம்.நௌசாத், அஸ்வெசும திட்டத்துக்குப் பொறுப்பான அபிவிருத்தி உத்தியோகத்தர் ஏ.ஜே.ஏ.ஆகாஸ் உட்படப் பலரும் கலந்து கொண்டனர்.

கல்முனை பிரதேச செயலகத்தில் 9ஆயிரத்து 493 பேர் விண்ணப்பித்திருந்த மேற்படி திட்டத்தில், 4ஆயிரத்து 335 நபர்களின் பெயர்களே தற்போது வெளியிடப்பட்டுள்ளன. எனவே, ஏனையவர்கள் தங்களது மேன்முறையீடுகளை எதிர்வரும் 10ஆம் திகதிக்கு முன் சமர்ப்பிக்க உரிய நடவடிக்கைகளை துரிதமாக மேற்கொள்ளுமாறு சம்பந்தப்பட்ட அதிகாரிகளுக்கு பாராளுமன்ற உறுப்பினர் ஹரீஸ் பணிப்புரை வழங்கினார்.

# இளைஞர்களுக்கான தொழில்வாண்மைக் கருத்தரங்கு



மாளிகைக்காடு செய்தியாளர்

தொழில்வாய்ப்பற்று புதிய தொழில் வாய்ப்பை நாடியுள்ள இளைஞர்களை தொழில் முனைவர்களாக மாற்றுவதற்கான தொழில்வாண்மைக் கருத்தரங்கு சாய்ந்தமருது பிரதேச செயலக மண்டபத்தில் சாய்ந்தமருது பிரதேச செயலாளர் எம்.எம்.ஆசிக் தலைமையில் கிழக்கு நட்புறவு ஒன்றிய ஏற்பாட்டின் SOFTA Care அனுசரணையில் ஞாயிற்றுக்கிழமை(02) நடைபெற்றது.

இந்தக் கருத்தரங்கில் பிரபல தொழில் முனைவரும் கிழக்கு நட்புறவு ஒன்றியத்தின் தலைவருமான பொறியியலாளர் எம்.எம்.நசீர் பிரதான வளவாளராகக் கலந்துகொண்டு தொழில் முயற்சி, தொழில் மேம்பாடு, தொழில் வளர்ச்சி உட்பட பல்வேறு விடயங்களை தன்னுடைய அனுபவத்துடன் கூடியதாக இளைஞர்களுக்கு விளக்கினார்.

தொடர்ந்தும் கிழக்கு நட்புறவு ஒன்றியத்தின் நிதிப் பணிப்பாளரும் சட்டம் - ஒழுங்கு அமைச்சின் முன்னாள் மேலதிக செயலாளர் ஏ.எல்.எம்.சலீம் கலந்துகொண்டு இளைஞர்களுக்கு கல்வியுடன் கூடிய தொழில் பயிற்சிகள் தொடர்பில் விளக்கமளித்தார்.

இந்நிகழ்வில் கிழக்கு நட்புறவு ஒன்றியத்தின் நிர்வாகப் பணிப்பாளர் தபாலதிபர் யூ.எல்.எம். பைசர் உட்பட பணிப்பாளர் சபை உறுப்பினர்கள், சாய்ந்தமருது பிரதேச செயலக இளைஞர் சேவை அதிகாரி எம்.எம். சமிமுள் இலாஹி, பிரதேச செயலக அதிகாரிகள், சாய்ந்தமருது பிரதேச இளைஞர்- யுவதிகள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# கின்னஸ் சாதனையை முறியடித்த மிக்கேல் கல்லூரி சாரண மாணவர்கள்





களுதாவளை செய்தியாளர்

மட்டக்களப்பு புனித மிக்கேல் கல்லூரி தேசிய பாடசாலையின் சாரண மாணவர்களினால் புதிய கின்னஸ் சாதனை சனிக்கிழமை (01) நிகழ்த்தப்பட்டுள்ளது.

புனித மிக்கேல் கல்லூரி தேசிய பாடசாலையின் 150ஆவது வருட நிறைவினை முன்னிட்டு 'பிளாஸ்டிக்கை கடந்து செல்வோம்' (Pass on plastic) எனும் தொனிப்பொருளில் பிளாஸ்டிக் பொருட்களின் பாவனையை தடுப்பதற்கான விழிப்புணர்வு நிகழ்வொன்று பாடசாலை அதிபர் ஆர்.யே.பிரபாகரன் தலைமையில் புனித மிக்கேல் கல்லூரி சாரண படையின் ஏற்பாட்டில் நடைபெற்றது.

50 சாரண மாணவர்களினால் 29.57 செக்கனில் 2ஆயிரத்து 124 பிளாஸ்ரிக் வெற்று போத்தல்களினால் 150 இலக்கத்தை அமைத்து கின்னஸ் சாதனையை முறியடித்துள்ளனர்.

இந் நிகழ்வின் கின்னஸ் சாதனைக்கான பரிந்துரை நடுவர்களாக மண்முனை வடக்கு பிரதேச செயலக கணக்காளர் எஸ்.புவனேந்திரன் மற்றும் வாகரை பிரதேச செயலக கணக்காளர் திருமதி.சந்திரகலா ஜேயேந்திரா ஆகியோர் நியமிக்கப்பட்டு தமது கடமையினை மேற்கொண்டிருந்தனர்.

மேலும் சோழன் புத்தக உலக சாதனை நிறுவனத்தினால் (Cholan book of world record) சான்றிதழ்கள் இதன்போது மிக்கேல் கல்லூரியின் சாரண மாணவர்களுக்கு வழங்கி வைக்கப்பட்டது. இந்நிகழ்வின்போது 2022/2023ஆம் ஆண்டு காலப்பகுதியில் ஜனாதிபதி விருது பெற்ற பாடசாலை சாரண மாணவர்கள் கௌரவிக்கப்பட்டதுடன் பாக்கு நீரிணையை நீந்தி கடந்த தவேந்திரன் மதுசிகனுக்கு வெற்றி கேடயம் வழங்கி கௌரவமளிக்கப்பட்டது.

இந் நிகழ்வில் ஆன்மீக அதிதியாக மட்டக்களப்பு யேசு சபை அருட்தந்தை போல் சற்குணநாயகம், நிகழ்வுக்கு அதிதிகளாக 231ஆவது இராணுவ படைப்பிரிவின் கட்டளை அதிகாரி பிரிகேடியர் திலுப்ப பண்டார, உதவி மாவட்ட செயலாளர் ஆ.நவேஸ்வரன், பிரதி பொலிஸ் மா அதிபர் உதித் லியனகே, மட்டக்களப்பு மாநகரசபை ஆணையாளர் பொறியியலாளர் சிவலிங்கம், வலயகல்வி பணிப்பாளர் திருமதி சுஜாதா குலேந்திரகுமார் ஆகியோரும் மாவட்ட சாரணர் ஆணையாளர் விவேகானந்தன், சாரண குழு ஆசிரியர் பத்மநாதன், பழைய மாணவர்கள், பெற்றோர்கள், ஏனைய பாடசாலைகளின் சாரண மாணவர்கள் என பலரும் கலந்து கொண்டு நிகழ்வை சிறப்பித்திருந்தனர்.

# சிலோன் மீடியா போரத்தின் நான்காவது ஆண்டு பூர்த்தி:

## வர்ண இரவு ஒன்றுகூடலும் ஊடகவியலாளர் கௌரவிப்பும்



மாளிகைக்காடு செய்தியாளர், எஸ்.அஷ்ரப்கான்

சிலோன் மீடியா போரத்தின் நான்காவது ஆண்டு பூர்த்தியை முன்னிட்டு நடைபெற்ற 'வர்ண இரவு ஒன்றுகூடலும் ஊடகவியலாளர் கௌரவிப்பும்' மீடியா போரத்தின் தலைவர் ரியாத் ஏ. மஜீத் தலைமையில் சனிக்கிழமை(01) இரவு மாளிகைக்காடு வாபா றோயலி மண்டபத்தில் நடைபெற்றது.

ஓகஸ்ட் மாத ஆரம்பத்தில் கொழும்பில் இடம்பெறவுள்ள பிரமாண்ட ஆண்டு விழாவின் ஆரம்ப நிகழ்வாக நடைபெற்ற இந்நிகழ்வில் இந்திய- இலங்கை ஊடகத்துறைக்குப் பாலமாக அமைந்திருந்த ஊடகவியலாளர் திருச்சி ஷாஹுல் ஹமீட் சிலோன் மீடியா போரத்தினரால் பொன்னாடை போர்த்தி நினைவுச்சின்னம் வழங்கி கௌரவிக்கப்பட்டார்.

சிலோன் மீடியா போரத்தின் பொருளாளர் யூ.எல்.என். ஹுதா உமரின் ஆரம்ப உரையுடன் ஆரம்பமான இந்த வர்ண இரவு நிகழ்வில் திகாமடுல்ல மாவட்டப் பாராளுமன்ற உறுப்பினரும் முன்னாள் இராஜாங்க அமைச்சருமான சட்டத்தரணி எச்.எம்.எம்.ஹரீஸ், கிழக்கு மாகாண காணியமைச்சின் பதில் செயலாளரும் மாகாண நிர்வாகப் பிரதிப் பிரதம செயலாளருமான ஏ.மன்சூர், பொதுச்சேவை ஆணைக்குழு முன்னாள் உறுப்பினர் சிரேஷ்ட நிர்வாக சேவை அதிகாரி ஏ.எல்.எம்.சலீம், இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக கலை, கலாசார பீடத்தின் பீடாதிபதி பேராசிரியர் எம்.எம்.பாசில், அக்கரைப்பற்று அனைத்துப் பள்ளிவாசல் சம்மேளனத்தலைவர் எஸ்.எம். சபீஸ், கல்முனை கல்வி மாவட்ட பிரதம பொறியியலாளர் ஏ.எம்.சாஹீர், வீதி அபிவிருத்தி அதிகாரசபை கல்முனை நிறைவேற்றுப் பொறியியலாளர் எம்.எம். முனாஸ், ஈ.சி.எம்.நிறுவன முகாமைத்துவப் பணிப்பாளர் சட்டத்தரணி பொறியியலாளர் யூ.கே.நாபீர், இலங்கை அடிப்படை மனித உரிமைகள் அமைப்பின் கிழக்கு மாகாணப் பணிப்பாளர் எம்.ஏ.நஸீர், அமானா நற்பணி மன்றத் தலைவர் ஏ.எல். பரீட் ஹாஜி உட்பட ஊடக அமைப்புகளின் பிரதானிகள், ஊடகவியலாளர்கள், பிரபல கலைஞர்கள், சிலோன் மீடியா போரத்தின் நிறைவேற்றுக்குழு உறுப்பினர்கள், சிலோன் மீடியா போரத்தின் அங்கத்தவர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

# சமூக நலன்புரி நன்மைகள் திட்டத்தின் கீழ் தகுதியுடையோர் உள்வாங்கப்பட வேண்டும்

## தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் பொதுச் செயலாளர் பிரசாந்தன் தெரிவிப்பு

கல்லடி செய்தியாளர்

உள்ளூர் கடன் மறுசீரமைப்பின்போது ஊழியர் சேமலாப நிதியம் மற்றும் ஊழியர் நம்பிக்கை நிதியம்(EPF, ETF) ஆகியவற்றில் கைவைக்கப் போவதில்லை என்று மத்திய வங்கி ஆளுநர் தெளிவுபடுத்தியுள்ளார். அதேவேளை, தொழிலாளர்கள் பாதிக்கப்படுவதை நாம் ஒருபோதும் அனுமதிக்கமாட்டோம். அத்தோடு, நாட்டின் கடனை மறுசீரமைப்பதும் தேவையானது என்பதிலும் நாட்டின் பொருளாதார நிலையை மேம்படுத்த வேண்டிய தேவையுள்ளதையும் யாரும் மறுக்க மாட்டார்கள் என தமிழ் மக்கள் விடுதலைப் புலிகள் கட்சியின் பொதுச்செயலாளர் பூ.பிரசாந்தன் தெரிவித்தார்.

கட்சியின் மட்டக்களப்பு தலைமையகத்தில் வெள்ளிக்கிழமை(30) இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் அங்கு மேலும் கருத்துத் தெரிவிக்கையில், எதிர்வரும் சனி, ஞாயிறு தினங்களிலேயே பாராளுமன்ற அமர்வுகளின்போது கடன் மறுசீரமைப்பு தொடர்பான முன்னெடுப்புகள் எவ்வகையில் மேற்கொள்ளப்படவுள்ளது என்ற பூரணமான அறிக்கை கிடைக்கும் என நினைக்கின்றேன். அதனை ஆராய்ந்து எமது கட்சியின் தலைவர் சிவநேசதுரை சந்திரகாந்தன் தொழிலாளர்களுக்கு பாதிப்பு ஏற்படாத வகையில் தீர்மானங்களை எடுப்பார்.

அதேவேளை, ''சமூக நலன்புரி நன்மைகள்'' திட்டத்தின் கீழ் சுமார் 1,52,001 நபர்கள் விண்ணப்பித்திருந்த நிலையில், 74,213 பயனாளிகளின் பெயர் பட்டியலிடப்பட்டுள்ளதாக அறிய முடிகின்றது. இது தொடர்பாக பலர் தமது எதிர்ப்புகளைத் தெரிவித்து வருகின்றனர். குறித்த சமூக நலன்புரி நன்மைசார் திட்டமானது நல்ல நோக்கத்தோடு கொண்டுவரப்பட்டதாகவும் அதனால் மக்கள் நன்மையடையும் நிலை காணப்படுகின்றபோதிலும் இது தொடர்பான தகவல் திரட்டலில் முறைப்பாடுகள் காணப்படுகின்றமையினாலேயே மீண்டும் மக்களிடம் இருந்து மேன்முறையீடுகள் கோரப்பட்டுள்ளன.

எமது நிலைப்பாடும் சமூக நலன்புரி நன்மைகளைப் பெறத் தகுதியுடையவர்கள் நாளாந்தம் வறுமையுடன் போராடிக் கொண்டிருக்கின்ற மக்கள் பாதிக்கப்படுவதை ஒருபோதும் அனுமதிக்க முடியாது. யுத்தத்தினால் பாதிக்கப்பட்டு விசேட



தேவையுடையோர், பெண் தலைமை தாங்கும் குடும்பத்தின் நாளாந்தம் கூலி வேலை செய்யும் தொழிலாளிகள் எனப் பலர் இச் சமூக நலன்புரி நன்மைகள் திட்டத்தில் உள்ளீர்க்கப்பட்டு தகுதி இருக்கின்றபோதும் அவர்களின் பெயர்கள் சேர்க்கப்படாமலுள்ளமை குறித்து விசேட கவனம் செலுத்தும்படி இராஜாங்க அமைச்சர் ஆலோசனை வழங்கியுள்ளார்.

தகவல் சேகரிப்பின்போது குறித்த கிராமத்தைப் பிரதிபலிக்கும் கிராம சேவையாளர்கள், அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் பிரசன்னமும் உயர் அதிகாரிகளின் வழிகாட்டலும் மேலும் செல்வாக்குச் செலுத்தியிருக்கிறது. அதிகமான குழப்பங்களை தடுத்திருக்கலாம் என்பது பாதிக்கப்பட்ட மக்களின் கருத்தாக இருக்கின்றது. எனினும், நடைபெற்ற தவறுகளை ஆராய்ந்து கொண்டிருக்காமல் தவறுகள் ஏற்படாமல் எவரும் பாதிக்கப்படாவண்ணம் பயனாளிகள் தெரிவு வினைத்திறன் மிக்கதாக அமைய வேண்டும் - என்றார்.

# ஆட்பதிவு திணைக்கள ஆணையாளர் கண்காணிப்பு விஜயம்



திராய்க்கேணி செய்தியாளர்

ஆட்பதிவுத் திணைக்கள கிளையுடன் இணைந்து கடவுச் சீட்டைப் பெற்றுக்கொள்வதற்கான கைவிரல் அடையாளத்தை பதிவு செய்யும் நடைமுறை சம்மாந்துறை பிரதேச செயலகத்தில் இடம்பெற்று வருகின்றது.

இச் செயற்பாட்டை அவதானிக்கும் கண் காணிப்பு விஜயம் ஒன்றை மேற்கொண்டு ஆட்பதிவுத் திணைக்கள ஆணையாளர் நாயகம் பிரதீல் சபுதந்திரி வெள்ளிக்கிழமை(30) சம்மாந்துறை பிரதேச செயலகத்துக்கு சென்றிருந்தார்.

இந்நிகழ்வில் பிரதேச செயலாளர் எஸ்.எல். முகம்மது ஹனிபா, கணக்காளர் ஐ.எம்.பாரீஸ், நிர்வாக உத்தியோகத்தர் ஜே.எம்.ஜெமில், பிரதம முகாமைத்துவ உத்தியோகத்தர் மற்றும் கிளைத் தலைவர்கள் எனப் பலரும் கலந்து கொண்டனர்.

கடவுச்சீட்டு வழங்கும் புதிய திட்டத்துக்கான கைரேகைகளைப் பதிவு செய்யும் பணி சம்மாந்துறை பிரதேச செயலகத்தில் அம்பாறை மாவட்ட அரசாங்க அதிபர் ஜே.எம்.ஏ. டக்ளஸால் சம்பிரதாயபூர்வமாக 21ஆம் திகதி ஆரம்பித்து வைக்கப்பட்டது. நாடளாவிய ரீதியிலுள்ள 51 பிரதேச செயலகங்களில் கடவுச் சீட்டு பெற்றுக் கொள்வதற்கான விரல் அடையாளத்தைப் பதிவு செய்யும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப் படுகின்றன. அம்பாறை மாவட்டத்தில் சம்மாந் துறை மற்றும் பொத்துவில் ஆகிய பிரதேச செயலகங்கள் கடவுச்சீட்டுப் பெற்றுக் கொள்வதற்கான கைரேகையை பதிவு செய்யும் பிரதேச செயலகங்களாகத் தெரிவுசெய்யப் பட்டுள்ளன.

# விபத்தில் சிக்கிய வயோதிபப்பெண்

## சிகிச்சை பலனின்றி பலி

மண்டூர் செய்தியாளர்

மட்டக்களப்பு தலைமையகப் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மட்டக்களப்புபிரதேசத்தைச் சேர்ந்த வயோதிபப் பெண்ணொருவர் விபத்துக்குள்ளாகி மரணமடைந்த சம்பவம் சனிக்கிழமை(01) இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

தெய்வநெறி, கழக வீதி மட்டக்களப்பு பிரதேசத்தைச் சேர்ந்த 82 வயதுடைய சண்முகம் சந்திரா என்பவரே இவ்விபத்தில் பலியான வராவார்.

கடந்த மாதம் 12ஆம் திகதி தனது வீட்டிலிருந்து சகோதரியின் வீட்டுக்கு வீதி வழியாக நடந்து செல்லும்போது நேராக பயணித்துக்கொண்டிருந்த மோட்டார் சைக்கிள் மோதியதில் குறித்த பெண் படுகாயமடைந்து மட்டக்களப்பு போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில், சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளதாக பொலிஸாரின் ஆரம்பகட்ட விசாரணைகளின்போது தெரியவந்துள்ளது.

மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்ற பதில் நீதிவானின் உத்தரவுக்கமைவாக சம்பவ இடத்துக்குச் சென்ற மண்டூர் பிரதேச திடீர் மரண விசாரணை அதிகாரி தம்பிப்பிள்ளை தவக்குமார் பிரேதத்தை பார்வையிட்ட பின்னர் உடற்கூற்று பரிசோதனைக்கு உட்படுத்தும்படி சட்ட வைத்திய அதிகாரியிடம் பரிந்துரைத்தார். விசாரணைகளின் பின்னர் சடலம் உறவினர்களிடம் கையளிக்கப்பட்டது. மேலதிக விசாரணைகளை மட்டக்களப்பு தலைமையகப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# வெவ்வேறு விபத்துகளில் எட்டு பேர் காயம்; இளைஞர் ஒருவரின் இருகால்களும் துண்டிப்பு

## திருகோணமலையில் சம்பவம்

அப்துல்சலாம் யாசீம்

திருகோணமலை மாவட்டத்தில் இடம்பெற்ற விபத்துச் சம்பவங்களில் எட்டுப்பேர் காயமடைந்த நிலையில், மஹதிவுல்வெவ மற்றும் திருகோணமலை பொது வைத்தியசாலைகளில் சிகிச்சைபெற்று வருகின்றனர்.

திருகோணமலை - மொரவெவ பொலிஸ் பிரிவில் மாத்திரம் ஞாயிற்றுக்கிழமை(02) இடம்பெற்ற விபத்துகளில் எட்டுப்பேர் காயமடைந்துள்ளதாகத் தெரியவருகின்றது.

யாழ்ப்பாணத்திலிருந்து கதிர்காமத்துக்கு திருகோணமலை ஊடாக சுற்றுலா சென்ற பஸ்ஸொன்று சம்பவத்தன்று அதிகாலை வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளானதில் பஸ்ஸில் பயணித்த இளைஞரொருவர் படுகாயமடைந்த நிலையில், அவருடைய இரு கால்களும் துண்டிக்கப்பட்டுள்ளதாகவும் வைத்தியசாலை பேச்சாளரொருவர் தெரிவித்தார்.

யாழ்ப்பாணம் - உரும்பிராய் பகுதியைச் சேர்ந்த பத்மநாதன் பரதன் (33வயது) என்பவரே இவ்வாறு படுகாயமடைந்தவர் எனத் தெரிய வருகின்றது.

இதேவேளை, மஹதிவுல்வெவ விகாரையில் இடம்பெற்ற கலை நிகழ்வொன்றில் கலந்து கொண்டுவிட்டு வீட்டுக்குச் செல்லும்போது பின்னால் வந்த மோட்டார் சைக்கிள் மோதி ஐவர் காயமடைந்துள்ளனர். அத்துடன், திருகோணமலையிலிருந்து அநுராதபுரம் நோக்கி மோட்டார் சைக்கிளில் பயணித்த இளைஞர் ஒருவர் வீதியோரத்தால் நடந்து சென்றுகொண்டிருந்த நபரை மோதியதில் இருவரும் படுகாயமடைந்த நிலையில், மஹதிவுல்வெவ பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

மேலும் பஸ் விபத்தில் கால்கள் துண்டிக்கப்பட்ட சம்பவம் தொடர்பில் பஸ்ஸின் சாரதி கைது செய்யப்பட்டுள்ளதுடன் விபத்து தொடர்பான விசாரணைகளை மொரவெவ பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

# கரடி தாக்கியதில் மூவர் படுகாயம்

அப்துல்சலாம் யாசீம்

திருகோணமலையில் ஒரே தடவையில் மூவரை கரடி தாக்கி காயப்படுத்திய சம்பவமொன்று சனிக்கிழமை(01) பதிவாகியுள்ளது.

திருகோணமலை கோமரங்கடவல பொலிஸ் பிரிவுக்குட்பட்ட காட்டுப் பகுதிக்குள் மூவர் தேன் எடுப்பதற்காக சென்றபோது ஒருவரை கரடி தாக்கிய சந்தர்ப்பத்தில் மற்றைய இருவரும் அக்கரடியை தாக்க முற்பட்டுள்ளனர்.

இந்நிலையில், குறித்த கரடி குறித்த மூவரையும் தாக்கி காயப்படுத்திய நிலையில் கோமரங்கடவல பிரதேச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். இதனையடுத்து குறித்த மூவரும் மேலதிக சிகிச்சைக்காக திருகோணமலை பொது வைத்தியசாலைக்கு அனுப்பிவைக்கப்பட்டுள்ளதாக வைத்தியசாலை பேச்சாளரொருவர் தெரிவித்தார்.

இவ்வாறு கரடியின் தாக்குதலுக்குள்ளானவர்கள் கோமரங்கடவல - பக்மீகம பகுதியைச் சேர்ந்த ஆர்.பிரதீப் சம்பத் (29வயது), பக்மீகம - அடம்பன பகுதியைச் சேர்ந்த சரத் திசாநாயக்க (46வயது) மற்றும் பக்மீகம - கூட்டிக்குளம் பகுதியைச் சேர்ந்த கே.நிமலசிறி (38வயது) எனவும் தெரியவருகின்றது.

தற்போது தேன் எடுக்கும் காலம் கிட்டியுள்ளதால் கரடிகளின் தாக்கம் அதிகரித்துள்ளதாகவும் கடந்த ஒரு மாதத்துக்குள் ஆறுபேர் கரடித்தாக்குதலுக்குள்ளாகி யுள்ளதாகவும் வைத்தியசாலைத் தரவுகள் தெரிவிக்கின்றன.

கிழக்கு செய்திகள் eastthamilan@gmail.com

# சமுர்த்தி சமுதாய அமைப்பின் மாவட்ட குழுக்களுக்கான காலாண்டுக் கூட்டம்

கல்லடி செய்தியாளர்

சமுர்த்தி சமுதாய அமைப்பின் மாவட்ட குழுக்களுக்கான இரண்டாம் காலாண்டுக்கான கூட்டமானது மாவட்ட சமுர்த்திப் பணிப்பாளர் எஸ்.புவனேந்திரன் தலைமையில் மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் வெள்ளிக்கிழமை(30) இடம்பெற்றது.

சமுர்த்தி சமுதாய அமைப்பினால் மேற்கொள்ளப்பட்ட வேலைத்திட்டங்கள் தொடர்பான முன்னேற்றங்களை ஆராய்ந்ததுடன், எதிர்வரும் காலங்களில் மேற்கொள்ள வேண்டிய வேலைத்திட்டங்களை வினைத்திறனாக முன்னெடுத்துச் செல்வதற்கான கலந்துரையாடலும் இதன்போது இடம்பெற்றது.

மாவட்டத்தில் 2020 சமுதாய அடிப்படை அமைப்புகள் தொழிற்பட்டு வருகின்ற நிலையில், இவ்வமைப்புகள் மூலம் மாவட்டத்திலிருந்து வறுமையைப் போக்குவதற்குத் தேவையான செயற்பாடுகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இதன்போது கருத்துத் தெரிவித்த மாவட்ட சமுர்த்திப் பணிப்பாளர் சமுர்த்தி வங்கிகளின் மூலம் இலகு கடன்களால் தமது தொழில்வாய்ப்பை மேம்படுத்தி வாழ்வாதாரத்தை



உயர்த்த முடியும் என்பதுடன், சமுதாய அடிப்படை அமைப்புகளிலிருந்து பெறப்பட்ட நிதியிலிருந்து வறிய ஐந்தாம் தரத்துக்குட்பட்ட மாணவர்களை கல்வி நடவடிக்கையில் சிறப்பாக ஈடுபடுத்துவதற்கு எதிர்வரும் காலங்களில் மாணவர்களுக்கு அப்பியாசக் கொப்பிகள் வழங்கப்படவுள்ளன - என்றார்.

இந்நிகழ்வில் சிரேஷ்ட சமுர்த்தி முகாமையாளர் மனோகிதராஜ், மாவட்ட சமுர்த்தி சமுதாய அடிப்படை அமைப்புக்குப் பொறுப்பான முகாமையாளர், சமுர்த்தி வங்கி சங்கங்களின் முகாமையாளர்கள், பிரதேச சமுதாய அடிப்படை அமைப்புகளின் தலைவர்கள், செயலாளர்கள் மற்றும் சமுதாய அடிப்படை அமைப்புகளுக்கு பொறுப்பான அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

# புணானை குளப் பகுதியில் மண் அகழ்வு ஏற்றுமதி நிலையம் அமைக்க விவசாயிகள் ஆட்சேபனை

## நீர்ப்பாசன பொறியியலாளர் அனுமதி மறுப்பு

வாழைச்சேனை மேலதிக செய்தியாளர்

மட்டக்களப்பு, புணானை குளப் பகுதியில் மண் அகழ்ந்து அதனைக் கழுவி ஏற்றுமதிக்கு பயன்படும் நிலையமொன்றை அமைக்கும் நடவடிக்கைக்கு விவசாயிகள் ஆட்சேபனை தெரிவித்ததையடுத்து நீர்ப்பாசன பொறியியலாளர் அனுமதி மறுப்புத் தெரிவித்துள்ளார்.

புணானை குளம் மற்றும் அதனை அண்மித்த பகுதிகளில் காணப்படும் மண் அகழப்பட்டு அவை கழுவி வெளிமாவட்டங்களுக்கு ஏற்றுமதி செய்வதற்கான அமைச்சின் சிபாரிசு ஓட்டமாவடியைச் சேர்ந்த நபர் ஒருவருக்கு வழங்கப்பட்டுள்ளது. அவர் அதனை நடைமுறைப்படுத்துவதற்கு அனுமதி வேண்டி நீர்ப்பாசனத் திணைக்களம் மற்றும் வன இலகா திணைக்களம் போன்றவற்றை நாடியிருந்தார். இதன் பொருட்டு குறித்த குளப் பகுதிக்கு வெள்ளிக்கிழமை(30) அதிகாரிகள் சகிதம் நேரடியாகச் சென்ற செங்கலடி, உறுகாமம் பிரதேச பொறியியலாளர் ந.விஷ்னுரூபன் நிலைமைகளை அவதானித்தார்.

இதன்போது அங்கு கூடிய விவசாய கமநல அமைப்புகளின் பிரதிநிதிகள் குளம் மற்றும் பிற பகுதிகளில் மண் அகழ்வு நடவடிக்கை இடம்பெறுமானால் அதனால் ஏற்படும் பாதிப்பு தொடர்பாகவும் குறித்த இடம்பொருத்தமற்றது என்றும் விவசாயிகளினால் விரிவாக எடுத்துரைக்கப்பட்டது.

விடயங்களைக் கேட்டறிந்துகொண்ட பொறியியலாளர் விண்ணப்பம் செய்தவரின் வேண்டுகோளுக்கேற்ப, குறித்த பிரதேசம் வனம் நிறைந்த இடமாகவும் மின்சாரக் கம்பங்கள், புகையிரதப் பாதை காணப்படுவது அகழ்வு ப்பணிக்குப் பொருத்தமற்றதாகும் என்பதுடன் விவசாயிகளுக்கு பாதிப்பு ஏற்படும் வகையில் விவசாயிகள் எதிர்ப்பு தெரிவிப்பதனால் மாவட்ட அபிவிருத்திக் குழுவில் விவசாயிகளுக்கு பாதிப்பு ஏற்படாதவகையில் மண் அகழ்வுக்கான அனுமதி வழங்கப்பட வேண்டும் என்ற தீர்மானத்துக்கேற்ப அனுமதி வழங்க முடியாதுள்ளதாகவும் இது குறித்து தமது மேலதிகாரிக்கு அறிக்கை சமர்ப்பிக்கவுள்ளதாகவும் தெரிவித்தார்.

விடயத்தைக் கேட்டறிந்துகொண்ட விண்ணப்பதாரர் விவசாயிகளுக்கு பாதிப்பு ஏற்படும் வகையில் தாம் செயற்படப்போவதில்லை என்ற கோரிக்கையை ஏற்றுக்கொண்டு தமது விண்ணப்பத்தை மீளப் பெற்றுக்கொண்டார். தொடர்ந்து கிழக்கு மாகாணத்தில் 430 குளங்கள்



வரை காணப்படுவதாகவும் அதில் சுமார் 230 வரையிலான குளங்கள் புனரமைப்பு செய்யப்படாமல் உள்ளதால் அவை போன்ற குளங்களை அடையாளம் கண்டு அபிவிருத்தி செய்வதனால் குளத்தில் நீர் நிரம்பி காணப்படுவதுடன் விவசாயத்துக்கும் நன்மை பயக்கும் எனத் தெரிவித்தனர்.

மண் நிரம்பி புனரமைப்பு செய்யப்படாமல் காணப்படும் நீர்பாசனக் குளங்களை அபிவிருத்தி செய்யும் நோக்கில் குளத்தில் அருகில் தேங்கிக் கிடக்கும் மண்ணை அகற்றும் திட்டத்தின் கீழ் சம்பந்தப்பட்ட அமைச்சரினால் அனுமதி வழங்கப்பட்டு வருகிறது. இதனால் குழப்ப நிலைமையும் மாவட்டத்தில் நிலவி வருகின்றது.

# மருதமுனை மஸ்ஜிதுல் நூர் பள்ளிவாசலில் மிம்பர் அமைக்கும் நடவடிக்கை ஆரம்பம்



பெரியநீலாவணை செய்தியாளர்

அம்பாறை மாவட்டத்தின் மருதமுனை பிரதேசத்தில் உள்ள பூர்வீக வரலாற்றைக் கொண்ட பள்ளிவாசல்களில் ஒன்றான மஸ்ஜிதுல் நூர் ஜும்ஆப் பள்ளிவாசலில் புதிய மிம்பர் அமைக்கும் வேலைத்திட்டம் பள்ளிவாசல் நம்பிக்கையாளர் சபைத் தலைவரும் கிராமிய அபிவிருத்தி உத்தியோகத்தருமான எம்.ஐ.எம்.முஹர்ரப் தலைமையில் வெள்ளிக்கிழமை(28)ஆரம்பிக்கப்பட்டது.

மஸ்ஜிதுல் நூர் பள்ளிவாசலின் கட்டட நிர்மாணப் பணிகளை பூரணப்படுத்தும் வேலைத் திட்டங்கள் தற்போது முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. இதன் ஒரு கட்டமாகவே இந்த நவீன முறையிலான மர வேலைப்பாடுகள் நிறைந்த மிம்பர் அமைக்கும் பணிகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

இந்நிகழ்வில் கல்முனை பிரதேச செயலாளர் ஜே.லியாக்கத் அலி , பள்ளிவாசல் நம்பிக்கை யாளர் சபை உறுப்பினர்கள், கட்டடக் குழுத் தலைவர், செயலாளர் உட்பட அதன் உறுப்பினர்கள், வர்த்தகப் பிரமுகர்கள், கல்விமான்கள், புத்திஜீவிகள் எனப் பலர் கலந்து கொண்டனர்.

இதன்போது உரையாற்றிய பள்ளிவாசலின் நம்பிக்கையாளர் சபைத் தலைவர், பள்ளிவாசலின் புதிய மிம்பர் அமைப்பதற்கான பணி ஒரு சில தினங்களில் பூர்த்தி செய்யப்படும். இதற்கு சுமார் 35 இலட்சம் ரூபா மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது. எதிர்காலத்தில் மருதமுனையின் வரலாற்றுப் பூர்வீக பள்ளிவாசல்களாக காணப்படும் மஸ்ஜிதுல் கபீர், மஸ்ஜிதுல் நூர் ஆகிய பள்ளி வாசல்களில் வாரம் விட்டு வாரம் ஜும்ஆ தொழுகையை நடத்துவதற்கு நாம் பேச்சுகளை ஆரம்பித்துள்ளோம். இது ஊரின் எதிர்காலம் மற்றும் ஒற்றுமையை கருத்திற்கொண்டு செயற்படுவதற்கு ஒரு நல்ல எடுத்துக்காட்டாக அமையும். தற்போது பல பள்ளிவாசல்களிலும் ஜும்மா தொழுகைகள் இடம்பெற்று வருகின்றன. இதனை ஒழுங்குபடுத்தப்பட்ட முறைக்குள் கொண்டுவரவேண்டும். இது தொடர்பிலும் சம்பந்தப்பட்டவர்களிடம் நாம் பேச்சுகளை ஆரம்பித்துள்ளோம் - என்று தெரிவித்தார்.

# சூரங்கல் பகுதியில் விபத்து

## ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவருக்கு காயம்: சிறுமி ஒருவர் உயிரிழப்பு

அப்துல்சலாம் யாசீம்

திருகோணமலை - கிண்ணியா பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சூரங்கல் பகுதியில் இடம்பெற்ற விபத்தில் ஒரே குடும்பத்தைச் சேர்ந்த மூவர் படுகாயமடைந்த நிலையில், சிறுமியொருவர் உயிரிழந்துள்ளதாக கிண்ணியா பொலிஸார் தெரிவித்தனர்.

ஹஜ் பெருநாள் தினமான வியாழக்கிழமை(29) மாலை தம்பலகாமம் - அரபா நகரிலிருந்து உறவினர்களின் வீட்டுக்கு மோட்டார் சைக்கிளில் தாய், தந்தை உட்பட சிறுவர்கள் இருவருமாக நான்கு பேர் பயணித்துள்ளனர்.

இந்நிலையில், குறித்த மோட்டார் சைக்கிள் பெற்றோல் தாங்கியில் ஐந்து வயது சிறுமியை வைத்துக்கொண்டு பயணித்துக் கொண்டிருந்த போது சிறுமிக்கு தூக்கம் ஏற்பட்டுள்ள நிலையில் சிறுமி ஓரமாக சாய்ந்துள்ளார். இதனையடுத்து தந்தை விழுவதற்கு முற்பட்டபோது சிறுமியை பிடித்துள்ள நிலையில் மோட்டார் சைக்கிள் வீதியை விட்டு விலகி விபத்துக்குள்ளானது.

இதேவேளை, சிறுமியின் தலையில் காயம் ஏற்பட்டுள்ள நிலையில், சிறுமி உயிரிழந்துள்ளதாகவும் தந்தை, தாய் ஒன்றரை வயது கைக்குழந்தை ஆகியோர் காயமடைந்த நிலையில் திருகோணமலை பொது வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகின்றனர். உயிரிழந்த சிறுமியின் சடலம் திருகோணமலை பொது வைத்தியசாலை பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளதுடன் விபத்து தொடர்பில் விசாரணைகளை கிண்ணியா பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர்.

## போடியார் புலம்பல்!



*அநுராதபுரத்தில நிற வெறியோட அட்டகாசம் புரிந்த புத்தபிக்கு ஒருவருக்கு அந்தப் பகுதி மக்கள் புடிச்சி அடிச்சி கட்டிவச்சி பொலிசுக்கு ஒப்படைத்த சம்பவம் ஒண்டு நடந்தது எலுவா? புத்தரின் போதனை போதைவஷ்துகள அருந்துவது எண்டு தப்பா பாடம் படிச்சித்தாரோ இல்லாட்டி முற்றும் துறந்த சாது சாராயம் குடிச்சாத்தான் தன்ட மனக்கவலய கொட்டித்தீர்கலாம் எண்டு தண்ணியடிச்சித்தாரோ. இந்த ஆசாமிகள் உள்ளவரை எப்படி நாடு திருந்தும்?*

## இன்று 6ஆவது நாளாகவும் பற்றியெரிகிறது பாரிஸ்

# வன்முறையாளர்களின் வெறியாட்டத்தால் தீக்கிரையான மார்செய்லி நூலகம்

## 90 இலட்சம் புத்தகங்களின் கதி என்ன?

★ பாதுகாப்பு கடமைகளில் 45,000 பொலிஸார்

★ வன்முறையில் ஈடுபட்ட 2,000 பேர் கைது

பிரான்ஸில் 17 வயது கறுப்பின சிறுவன் சுட்டுக்கொல்லப்பட்டதைக் கண்டித்து இன்று 6ஆவது நாளாகப் போராட்டம் நீடித்து வரும்நிலையில், வன்முறையாளர்களின் வெறியாட்டத்தில் இலட்சக்கணக்கான அரிய புத்தகங்களைக் கொண்ட மார்செய்லி நூலகம் தீ வைத்து எரிக்கப்பட்டது.

இந்த நூலகத்தில் சுமார் 90 இலட்சம் புத்தகங்கள் வைக்கப்பட்டிருந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. 830 ஆண்டுகளுக்கு முன்பு இந்தியாவின் நாலந்தா பல்கலைக் கழகத்தில் இலட்சக்கணக்கான புத்தகங்கள் எரிக்கப்பட்டன. இதேபோன்று 1981இல் அரிய நூல்களைக் கொண்டிருந்த யாழ்ப்பாண நூலகத்தை வன்முறைக் கும்பல் எரித்து அழித்தமை குறிப்பிடத்தக்கது.

பிரான்ஸில் இடம்பெற்றுவரும் வன்முறையில் ஈடுபட்ட 1,311இற்கும் அதிகமானோர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். கைதுசெய்யப்பட்டவர்களில் 30 சதவீதமானோர் 18 வயதுக்குட்பட்டவர்கள் என அந்நாட்டு நீதியமைச்சர் தெரிவித்துள்ளார். சுமார் இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட வாகனங்கள் வன்முறையாளர்களால் தீவைத்து எரிக்கப்பட்டுள்ளன. 200இற்கும் அதிகமான பொலிஸார் காயமடைந்துள்ளனர்.

வன்முறைகளால் முழு பிரான்ஸும் இன்று 6ஆவது நாளாகவும் பற்றி எரிந்துகொண்டிருக்கிறது. இதனால் அங்கு தொடர்ந்து பதற்றமான சூழல் நிலவி வருகிறது.



வட ஆபிரிக்க வம்சாவளியைச் சேர்ந்த அல்ஜீரியாவிலிருந்து புலம்பெயர்ந்த நஹேல் என்ற 17 வயது சிறுவனின் குடும்பம் பாரிஸில் வசித்து வருகிறது. பாரிஸின் புறநகர்ப் பகுதியில் கடந்த செவ்வாயன்று போக்குவரத்து வாகனச் சோதனையின்போது காரை நிறுத்தாமல் சென்ற சிறுவன் நஹேல் பொலிஸாரால் சுட்டுக்கொல்லப்பட்டார்.

இச்சம்பவம், நான்கு நாட்களாக நாட்டையே பற்றியெரிய வைத்திருக்கிறது. நஹேலை சுட்டுக்கொன்ற 38 வயது பொலிஸ் அதிகாரி அந்தச் சிறுவன் வேறு யாரின் மீதாவது காரை ஏற்றிவிடுவானோ என்ற அச்சத்தில் துப்பாக்கியால் சுட்டதாகத் தெரிவித்தார்.

இதற்கிடையில் பிரான்ஸ் ஜனாதிபதி இம்மானுவேல் மெக்ரோன், இந்தச் சூழ்நிலையைப் பயன்படுத்திக்கொண்டு கலவரக்காரர்கள் கொள்ளையடிப்பதாகவும் பெற்றோர்கள் அனைவரும் தங்களின் பிள்ளைகள் யாரையும் வீதியில் இறங்கிப் போராடாமல் பார்த்துக்கொள்ள வேண்டுமென்றும் கோரிக்கை விடுத்துள்ளார்.

இருப்பினும், சிறுவனின் மரணத்திற்கு நீதிகோரி இடம்பெற்றுவரும் போராட்டம் கலவரமாகத் தொடர்ந்து வெடித்துக்கொண்டிருக்கும் நிலையில், நேற்றுவரை (02) மொத்தமாக 2,000இற்கும் மேற்பட்டோர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். கைதுசெய்யப்பட்டவர்களில் 30 சதவீதமானோர் 18 வயதுக்குட்பட்டவர்கள் என அந்நாட்டு நீதியமைச்சர் தெரிவித்துள்ளார்.

வன்முறை இடம்பெற்றுவரும் இடங்களில் அதைக் கட்டுப்படுத்த சுமார் 45,000 பொலிஸார் பாதுகாப்புப் பணியில் ஈடுபட்டுள்ளனர்.

பல அரச கட்டடங்கள் சூறையாடப்பட்டுள்ளன. 700இற்கும் மேற்பட்ட கடைகள் பல்பொருள் அங்காடிகள், உணவகங்கள் மற்றும் வங்கிகள் என்பன வன்முறையாளர்களால் சூறையாடப்பட்டும் எரியூட்டப்பட்டுமுள்ளன.

தீ வைப்பு, கல்வீச்சு போன்ற சம்பவங்களில் 2,560 வீதிகள் இன்றும் எரிந்துகொண்டிருக்கின்றன. சுமார் இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட வாகனங்கள் தீவைத்து எரிக்கப்பட்டுள்ளன. 234 பொதுச் சொத்துகள் தீயால் சேதமடைந்துள்ளன. 31 பொலிஸ் நிலையங்கள் மீது தாக்குதல்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளதுடன் 16 மாநகர பொலிஸ் நிலையங்கள், 11 ஜெண்டர்மேரி முகாம் மீதும் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளன. கண்ணீர் புகைக்குண்டுகளை வீசியும், நீர்த்தாரை பிரயோகம் மேற்கொண்டும் போராட்டக்காரர்களை கலைக்க முயன்ற பொலிஸார் மீது கற்களையும், கையில் கிடைத்த பொருட்களையும் வீசி எறிந்து போராட்டக்காரர்கள் வன்முறையில் ஈடுபட்டனர். இதில் 200 இற்கும் மேற்பட்ட பொலிஸார் படுகாயமடைந்துள்ளனர்.

**நஹேலின் உடல் தகனம்**

இதற்கிடையே துப்பாக்கிச் சூட்டில் உயிரிழந்த நஹேலின் உடல் பாரிஸின் நான்டெர்ரேயில் தகனம் செய்யப்பட்டது.

பிரான்ஸின் நிலைமை மிகவும் மோசமாகிவிட்டதால் அந்நாட்டு ஜனாதிபதி இம்மானுவேல் மெக்ரோன், தனது ஜேர்மனிக்கான அரசுமுறை பயணத்தை ஒத்திவைத்துள்ளார்.

**உலகக் கிண்ண ரக்பி - ஒலிம்பிக் போட்டிகள் நடைபெறுமா?**

பிரான்ஸில் கலவரம் நீடிக்குமாயின் குளிர்காலத்தில் நடத்தப்படும் 'ரக்பி' உலகக் கிண்ணம் மற்றும் கோடையில் பாரிஸில் நடத்தப்படும் ஒலிம்பிக் போட்டிகள் அங்கு நடக்குமா என்ற கேள்வி எழுந்துள்ளது.

**தமது குடிமக்களை எச்சரிக்கும் மேற்கத்தேயம்**

பிரான்ஸின் நிலைமையை உணர்ந்த பிரித்தானியா உள்ளிட்ட மேற்கத்தேய நாடுகள் தங்களது குடிமக்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகளை வன்முறையால் பாதிக்கப்பட்ட பகுதிகளுக்குச் செல்லவேண்டாம் என்று அறிவுறுத்தியுள்ளன.

**''ஆபிரிக்காவுக்குத் திரும்புங்கள்...''**

இந்நிலையில், ''ஆபிரிக்காவுக்குத் திரும்புங்கள்...'' என பிரான்ஸ் பொலிஸார் குரல் எழுப்பும் வீடியோக்களும் சமூக வலைத்தளங்களில் வெளியாகியுள்ளன. இதனால் அங்கு பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

போராட்டம் குறித்து யாஸ்மினா என்பவர் தெரிவிக்கையில், "நான் பிரான்ஸ் பொலிஸை முற்றிலுமாக வெறுக்கிறேன். அவர்கள் மிகவும் மோசமானவர்கள் என்று நினைக்கிறேன். அவர்களது மொத்த அமைப்பிலும் கறை படிந்துள்ளது. இனவாத கருத்தாக்கத்தை அவர்கள் கொண்டுள்ளனர். நயிலின் மரணம் என்னை உலுக்கியுள்ளது. அவர் மரணத்துக்கு தகுதியானவர் அல்லர்..." - எனத் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, பிரான்ஸ் ஜனாதிபதி மெக்ரோன் அவரது மனைவி பிரிகிட்டுடன் பாரிஸ் நகரில் அக்கார் அரீனா பகுதியில் இடம்பெற்ற எல்டன் ஜோன் (வயது 75) என்ற பிரித்தானிய பாடகரின் இசை நிகழ்ச்சியில் கலந்துகொண்டு பாடகரின் பாடலுக்கேற்ப கைத்தட்டி நடனமாடியுள்ளார். ஒருபுறம் பொலிஸாருக்கு எதிராக பிரான்ஸில் மக்கள் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள நிலையில், மறுபுறம் ஜனாதிபதி மெக்ரோன் அவரது மனைவியுடன் இசைக்கச்சேரியில் கைத்தட்டி, நடனம் ஆடியதற்கு மக்கள் கடும் எதிர்ப்பு தெரிவித்துள்ளனர்.

# தமிழ் மொழி எப்போதும் எல்லோரையும் வாழ வைக்கும்

## முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் பேச்சு






தமிழ் மொழி எப்போதும், எல்லோரையும் வாழ வைக்கும் என தமிழக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் தெரிவித்துள்ளார்.


கலிபோர்னியாவில் வட அமெரிக்கா தமிழ்ச்சங்கப் பேரவையின் 36ஆவது தமிழ் பெருவிழாவில் காணொளி வாயிலாக முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் உரையாற்றியபோது, இந்திய துணைக் கண்டத்தின் வரலாறு இனி தமிழ் நிலத்திலிருந்து எழுதப்பட வேண்டும். மொழி உணர்வு என்பது தமிழருக்கு குருதி போன்றது. தமிழ் நமக்கு மொழியாக மட்டுமல்லாமல், உயிராக - போராட்டத்தின்போது வாளாக உள்ளது. மொழியின் பெயரில் வாரிசுகளுக்கு பெயர் வைக்கும் இனம் தமிழினம் மட்டுமே.

தமிழ் மொழி எப்போதும், எல்லோரையும் வாழ வைக்கும். தமிழ் மொழி என்பது நம்மைப் பொறுத்தவரை எழுத்தாக இல்லாமல் இரத்தமாக உள்ளது. தமிழ் எப்போதும் வாழவே வைக்கும். தமிழ் என்பது மொழியாக மட்டுமல்ல, நமக்கு அமுதமாக - உயிராக - நம்மை வாழவைக்கக்கூடிய மண்ணாக இருக்கிறது. தமிழ் மொழி எப்போதும் எல்லோரையும் வாழவைக்கும். மொழியின் பெயரை பெயராக வைப்பதில் தமிழர்கள் முன்னோடி. மொழி என்பது நமக்கு எழுத்தாக இல்லாமல் இரத்தமாகவுள்ளது எனத் தெரிவித்துள்ளார்.

# இந்துக்களின் சமரில் யாழ்ப்பாணம் வென்றது







*அஷ்ரப் ஏ சமத்*

இந்துக்களின் சமர் என வர்ணிக்கப்படும் கிரிக்கெட் போட்டி யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி 9 விக்கெட்டுகளால் வெற்றி பெற்றுள்ளது.

கொழும்பு இந்துக் கல்லூரிக்கும் யாழ்ப்பாண இந்துக் கல்லூரிக்குமிடையே கடந்த வெள்ளிக்கிழமை இந்துக்களின் சமர் 12 ஆவது முறையாக நடைபெற்றது. நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற கொழும்பு இந்துக் கல்லூரி அணி முதலில் பந்து வீச்சைத் தெரிவு செய்திருந்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய யாழ்ப்பாண இந்துக் கல்லூரி அணி சகல விக்கெட்டுகளையும் இழந்து 183 ஓட்டங்களை எடுத்தது. ஆரம்பத் துடுப்பாட்ட வீரரான கே.பரஷித் 80,எம்.கஜன் 28, எஸ்.சுபர்ணன் 23, எஸ். பிரியந்தன் 19, ரீ. பிரேமிகன் 13 ஓட்டங்களை எடுத்தனர்.

கொழும்பு இந்துக்கல்லூரி வீரரான ஆர்.தேஸ்கார் 36 ஓட்டங்களைக் கொடுத்து 4 விக்கெட்டுகளையும், எம்.அபிஷேக் 57 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுகளையும் வீழ்த்தினர்.

184 என்ற ஓட்ட இலக்குடன் துடுப்பெடுத்தாடிய கொழும்பு இந்துக் கல்லூரி சகல விக்கெட்டுகளையும் இழந்து 49 ஓட்டங்களைப் பெற்றது. ஆர்.டிரோஜன் 17, பி,தாருகன் 15 ஆகிய இருவர் மாத்திரம் இரட்டை இலக்க ஓட்டங்களைப் பெற்றனர்.

நான்கு ஓட்டமற்ற ஓவர்கள் உட்பட 11 ஓவர்கள் வீசிய ரி.கஜநாத் 22 ஓட்டங்களைக் கொடுத்து 5 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

பலோ ஒன் முறையில் இரண்டாவது இன்னிங்ஸை விளையாடிய கொழும்பு இந்துக்கல்லூரி முதல் நாள் ஆட்ட முடிவில் கிரிக்கெட் இழப்பின்றி 41 ஓட்டங்களை எடுத்தது. இரண்டாம் நாள் சனிக்கிழமை கொழும்பு இந்துக் கல்லூரி சகல விக்கெட்டுகளையும் இழந்து 170 ஓட்டங்களை எடுத்தது.

37 ஓட்டங்கள் என்ற வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய யாழ்ப்பாணம் இந்துக்கல்லூரி அணி 12.2 ஓவர்கள் நிறைவில் ஒரு விக்கெட்டை இழந்து வெற்றி இலக்கை எட்டியது. ஆட்ட நாயகனாக கே.பரஷித் [யாழ்ப்பாணம்], துடுப்பாட்ட வீரராக ஆர்.டிலுஷன் [கொழும்பு], சிறந்த பந்து வீச்சாளராக ரீ. கஜநாத் [யாழ்ப்பாணம்],சிறந்த களத்தடுப்பு வீரராக ரீ. பிரேமிகன் [யாழ்ப்பாணம்] ஆகியோர் விருது பெற்றனர்.

# மேற்கு இந்தியாவை வெளியேற்றிய ஸ்கொட்லண்ட்

விளையாட்டு செய்திகள்
thamilansports@gmail.com

*ரமணி*

ஸிம்பாப்வேயில் நடைபெற்ற சூப்பர் 6 போட்டியில் மேற்கு இந்தியத்தீவை எதிர்த்து விளையாடிய ஸ்கொட்லண்ட் வெற்றி பெற்றதால் உலகக்கிண்ணப் போட்டியில் விளையாடும் வாய்ப்பை மேற்கிந்தியா இழந்தது.

1975 முதல் சுமார் 50 வருடங்கள் வரலாறு கொண்ட உலகக்கிண்ண வரலாற்றில் முதல் முறையாக மேற்கிந்தியா தகுதி பெறாமல் வெளியேறியுள்ளது. 1975, 1979 ஆகிய ஆண்டுகளில் சம்பியனாகி 80களில் உலக கிரிக்கெட்டை அடக்கி ஆண்ட மேற்கிந்தியா 21ஆம் நூற்றாண்டில் உலகக்கிண்ணப் போட்டியில் விளையாடும் தகுதியை இழந்தது.

நாணய சுழற்சியில் வெற்றி பெற்ற ஸ்கொட்லண்ட் பந்துவீசுவதாக அறிவித்தது. முதலில் துடுப்பெடுத்தாடிய மேற்கிந்தியா 43.5 ஓவர்களில் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்து 181 ஓட்டங்களை எடுத்தது. 182 ஓட்டங்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய ஸ்கொட்லண்ட் 43.3 ஓவர்களில் 3 விக்கெட்டை மட்டும் இழந்து 185 ஓட்டங்களை எடுத்து 7 விக்கெட் வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. இந்த வெற்றியின் மூலம் ஸ்கொட்லண்ட் அணி உலகக் கிண்ணத் தொடருக்கு முன்னேறுவதற்கான வாய்ப்பில் நீடிக்கிறது.

அதேவேளை, தோல்வியடைந்த மேற்கிந்தியா இந்தியாவில் நடைபெறும் உலகக் கிண்ணப் போட்டியில் விளையாடும் வாய்ப்பை இழந்தது.

உலகக்கிண்ண வரலாற்றில் 1975, 1979 ஆண்டுகளில் தொடர்ச்சியாக இரண்டு முறை சம்பியனான மேற்கிந்தியா நான்கு போட்டிகளில் இரண்டு வெற்றி இரண்டு தோல்விகளைப் பதிவுசெய்து 4 புள்ளிகளுடன் தடுமாறி சூப்பர் 6 சுற்றுக்கு தகுதி பெற்றது.

ஸிம்பாப்வேயிடம் தோற்று நெதர்லாந்துக்கு எதிராக 374 ஓட்டங்களை அடித்தும் சூப்பர் ஓவரில் தோற்றது மேற்கிந்தியா.




ஜான்சன் சார்ள்ஸ் 0, சமர் ப்ரூக்ஸ் 0, பிரண்டன் கிங் 22, கெய்ல் மேயர்ஸ் 5, கப்டன் ஷாய் ஹோப் 13, நிக்கோலஸ் பூரான் 21 என முக்கிய வீரர்கள் சொற்ப ஓட்டங்களில் ஆட்டமிழந்தனர். முடிந்தளவுக்கு காப்பாற்றப் போராடிய ஜேசன் ஹோல்டர் 45 ஓட்டங்களும் ரொமாரியா செபார்ட் 36 ஓட்டங்களும் எடுத்தனர்.

2017 சம்பியன்ஸ் டிராபியில் முதல் முறையாகத் தகுதி பெறவில்லை. 2022 ஆம் ஆண்டு ரி 20 உலகக் கிண்ணப் போட்டியிலும் சூப்பர் 12 சுற்றுக்குத் தகுதி பெறாமல் வெளியேறியது.

கிரிக்கெட் போட்டியில் சக்கரவர்த்தியாக வலம் வந்தது மேற்கிந்திய அணி. துடுப்பாட்டம் எதிரணி வீரர்களை நோகடித்தது. வேகப்பந்து எதிரணி வீரர்களை கதிகலங்கச் செய்தது. கிளைவ் லியாட், விவியன் ரிச்சர்ட்ஸ், மைக்கேல் ஹோல்டிங், ஆன்ட்டி ரொபர்ட்ஸ், மால்கம் மார்ஸ் என அந்த அணியின் வீரர்கள் அசுர பலத்துடன் இருந்தார்கள்.

மேற்கிந்திய கிரிக்கெட் சபைக்கும் வீரர்களுக்குமிடையிலான பிரச்சினையால் கிரிக்கெட் பாதிக்கப்பட்டது; போதியளவு சம்பளம் கொடுக்கப்படுவதில்லை; வீரர்களுக்கு மதிப்பளிக்கப்படுவதில்லை; இதன் காரணமாக உலகெங்கும் நடக்கும் ரி 20 போட்டிகளில் மேற்கிந்திய வீரர்கள் கவனம் செலுத்தத் தொடங்கினார்கள். இதனால் மேற்கிந்திய கிரிக்கெட் வீழ்ச்சியடைந்துள்ளது.

டெஸ்ட் , ஒரு நாள் என எந்தப் போட்டியிலும் மேற்கிந்திய இளம் வீரர்கள் கவனம் செலுத்துவதில்லை.ரி 20 அறிமுகமானதும் மேற்கிந்தியா பழைய நிலைமைக்குத் திரும்பியது. இரண்டு முறை சம்பியனாகி ஆச்சரியப்பட வைத்தது. ஆனால், மீண்டும் அந்நாட்டு கிரிக்கெட் சபையுடன் ஏற்பட்ட பிரச்சினை காரணமாக பலரும் சோர்வடைந்து விட்டார்கள். 2016 ஆம் ஆண்டுக்குப் பிறகு மேற்கிந்தியாவின் சரிவு காலம் தொடங்கியது.

மேற்கிந்தியாவின் இந்த நிலை மாற வேண்டுமென்றால் அவர்கள் தங்களுடைய வீரர்களுக்கு அதிக சம்பளம் கொடுக்க வேண்டும். தங்களுடைய முக்கிய வீரர்களை அணியில் வைத்திருக்க வேண்டும். அரசியலுக்கு இடம் கொடுக்கக் கூடாது.

Printed by the Kalukodayawa, Malwana Press & Published by Liberty Publishers (Pvt.) Ltd. 91, Wijerama Mawatha, Colombo 7